# வேளாண்மை – உழவர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2023 - 2024

மானியக் கோரிக்கை எண்.5


## திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

# கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | 1 - 21 |
| 1. | வேளாண்மை | 22 - 92 |
| 2. | சர்க்கரைத் துறை | 93 – 126 |
| 3. | தோட்டக்கலை - மலைப்பயிர்கள் | 127 - 180 |
| 4. | வேளாண்மைப் பொறியியல் | 181 – 213 |
| 5. | வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகம் | 214 – 258 |
| 6. | வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி | 259 - 290 |
| 7. | விதைச்சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு | 291 – 319 |
| 8. | தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 320 - 336 |
| 9. | மானிய கோரிக்கை | 332 - 337 |

# முன்னுரை

**“பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**

**அலகுடை நீழ லவர்”**

**- (திருக்குறள் : 1034)**

பல அரசுகளின் நிழல்களைத் தமது குடைநிழலின் கீழ் கொண்டு வரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள்.

**(முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் உரை)**

**“ கார்நடக்கும் படிநடக்கும் காராளர் தம்முடைய**

**ஏர்நடக்கு மெனிற்புகழ்சால் இயலிசைநா டகம் நடக்கும்**

**சீர்நடக்குந் திறநடக்குந் திருவறத்தின் செயநடக்கும்**

**பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே “**

அதாவது, மழை தவறாது பெய்ய வேண்டுமாயின் உழவர்கள் தங்கள் ஒழுக்கமாம் கடமையில் தவறாது நின்று ஏரை நடத்த வேண்டும். பசியை ஒழிக்க அவர்கள் பசுமைப்புரட்சியை மேற்கொள்வாராயின் மொழி வளம் பெறும். முத்தமிழ் தழைத்தோங்கும்.

நாட்டிற்கு நல்ல பல சிறப்புகள் வரும். அறிவாற்றல் பெருகும். கொள்வாரும் கொடுப்பாருமின்றி "**எல்லோருக்கும் எல்லாம்**" என்ற சமநிலை ஏற்படும். உலக அறங்கள் செவ்வனே நடைபெறும். நாட்டு மக்கள் நலமும் நற்காப்பும் பெறுவர் என்று உழவராலும், உழவுத்தொழிலாலும் மட்டுமே இவ்வுலகின் அனைத்து நற்செயல்களும் நடக்கும் என **கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஏர் எழுபது என்ற நூலில்** வேளாண்மையை போற்றிக் கூறியுள்ளார்.

உலகில் பல்வேறு தொழில்கள் இருந்துவந்த போதிலும், வேளாண்தொழிலே உலக மக்களுக்கு உணவளிக்கும் உன்னதமான தொழிலாகும். வேளாண்மையே நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பெரும்பங்கு அளிக்கிறது. பெரும்பாலான மக்களின் முதன்மைத் தொழிலாகவும், வாழ்வாதாரமாகவும்

வேளாண்மைத் தொழில் இருந்தாலும், பிற தொழில்களின் முன்னேற்றம், ஊரக வேலைவாய்ப்பு, உள்நாட்டு, பன்னாட்டு வாணிபம் மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற இனங்களிலும் வேளாண்மையே முக்கியத்துவமுள்ளதாக அமைந்துள்ளது. பல்வேறு பருவகாலச் சூழ்நிலைகளையும் கடந்து, உணவு உற்பத்தியில் தலையாய பணியாக விளங்கும் உழவுத்தொழிலை மேற்கொண்டுவரும் விவசாயிகளை மேம்படுத்திட, இவ்வரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**"சாகுபடிப் பணிகள் என்பன வெறும் சடங்குகள் அல்ல**

**அந்தந்த காலகட்டத்தில் தோன்றும்**

**மகசூல் காரணிகளை மேம்படுத்தும்,**

**மேன்மையான நடவடிக்கைகளே ஆகும்"**

பன்னெடுங்காலமாக நமது விவசாயிகள் பயன்படுத்திய, பட்டறிவில் நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் புகுத்தி, இளைஞர்களை வேளாண்மையின்பால் ஈர்த்து, வேளாண்மையை ஒரு இலாபகரமான தொழிலாக மாற்றிட வேளாண்மை-உழவர் நலத்துறை அயராது பாடுபட்டு வருகிறது.

இன்றைய சூழலில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, உணவு உற்பத்தியினை பெருக்கிடுவதும், நஞ்சற்ற உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதும், பல்வேறு பருவகால மாற்றங்கள், புதிதாக உருவெடுக்கும் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை எதிர்கொள்வது விவசாயிகளுக்கும், விஞ்ஞானிகளுக்கும் பெரும் சவாலாக உள்ளது.

நிலத்தடி நீர்மட்டம், பயிர் சாகுபடி பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பதில் உள்ள இடர்களை நீக்கிட, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க

வேண்டிய நிர்பந்தமும், புதிய தொழில் நுட்பங்களை பெருவாரியான பரப்பளவில் கடைபிடித்து, நுண்ணீர்ப் பாசனத்துடன் பயிர் சாகுபடிக்கு சாதகமான சூழலை உருவாக்கி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரித்திட வேண்டிய கட்டாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

வேளாண்மைத் தொழிலே, தமிழ்நாட்டில் ஊரகப்பகுதிகளில் வாழும் 70 சதவீத மக்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கிறது. வேளாண்மையில் ஏற்படும் மாற்றங்கள், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் நிலை உள்ளதால், வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். எனவேதான், இவ்வரசு வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு பலதரப்பட்ட தட்பவெப்பநிலை மண்டலங்கள், மழை அளவு, பல்வேறு மண் வகைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், அதற்கு ஏற்றவாறு புதிய பயிர் இரகங்கள், உயர் தொழில்நுட்பங்கள் ஆகியவை விவசாயிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு வருகின்றன. வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் சார்ந்த காடுகள் போன்ற தொழில்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நிலையான வருமானத்தையும் மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு அரசின் வேளாண் வளர்ச்சிக்கான சீரிய முயற்சிகள்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மேட்டூர் அணை

முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் **24.05.2022 அன்று 19 நாட்கள் முன்னதாகவே** திறக்கப்பட்டு **ரூ.61.12 கோடி** மதிப்பீட்டில் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2022 - 2023 ஆம் ஆண்டில் ஆறுகள், வாய்க்கால்கள் ரூ.85 கோடி மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டது. இத்தகைய முயற்சிகளால், 47 **ஆண்டுகளில் இல்லாத அளவில் 2.17 இலட்சம் எக்டர்** பரப்பளவில், குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு அதிகபட்ச சாதனை அடையப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மூன்று தொலைநோக்குத் திட்டங்களில் முதலாவதான **நிகர சாகுபடிப் பரப்பினை உயர்த்தும் முயற்சியில்** கடந்த இரண்டு வேளாண் நிதி நிலை அறிக்கைகளில் அளிக்கப்பட்ட திட்டங்களை செவ்வனே செயல்படுத்தியதன் மூலம் 2020-2021 ஆம்

**ஆண்டைவிட 76,000 எக்டர் நிகர சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.**

இரண்டாவதாக, 2020-2021 ஆம் ஆண்டில் **13.22 இலட்சம் எக்டராக** இருந்த இருபோக சாகுபடி பரப்பு, கூடுதலாக **1.17 இலட்சம் எக்டர்** அதிகரித்து, 2021-2022 ஆம் ஆண்டில் **14.39 இலட்சம் எக்டர்** பரப்பளவாக சாதனை அடையப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1.1–உற்பத்தித் திறனில் தேசிய அளவில் தமிழ்நாடு**

| முதலிடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் | நான்காம் இடம் |
|---|---|---|---|
| மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை, கரும்பு | அரிசி | தென்னை | ஊட்டச்சத்து தானியங்கள் (கேழ்வரகு, கம்பு, வரகு, தினை ) |

**ஆதாரம் : வேளாண்மை புள்ளியியல் ஒரு கண்ணோட்டம் – 2021.**

மேலும், சூரியகாந்தி, பருத்தி பயிர்களில் உற்பத்தி, உற்பத்தித் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு மானிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் வருடந்தோறும் ஆறு நிகழ்வுகளில் நடத்தப்படும் கிராமசபைக் கூட்டங்களில் திட்டப்பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் கிராம ஊராட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், வேளாண்மை தொழில்நுட்பம் தொடர்பான கருத்துக் கண்காட்சிகள், விவசாயிகளுக்கு '**உழவன் செயலி**' பதிவிறக்கம் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நிதி ஆயோக் (NITI Aayog) அமைப்பு, நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளைக் கொண்டு, 2030 ஆம் ஆண்டிற்குள் உலக

அளவில் மாற்றத்தினை அடையும் பொறுப்பினை ஏற்று செயல்பட்டு வருகிறது. நிலையான வளர்ச்சிக்கான 17 இலக்குகள் பல்நோக்கு செயல்முறைகளின் மூலம் உருவாக்கப்பட்டு, அனைத்து துறைகளிலும் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன. இதில் வேளாண்மைத் துறைக்கு ஏழ்மையின்மை, பசியின்மை, நல்ல ஆரோக்கியம்-நல்வாழ்வு, தூய்மையான நீர்-சுகாதாரம், பொறுப்புமிக்க பயன்பாடும் உற்பத்தியும், நீர்ச்சூழல் பாதுகாப்பு ஆகிய ஆறு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, துறையின் பல்வேறு திட்டங்களும், இந்த இலக்குகளை அடையும் வண்ணம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. இவ்விலக்குகளை அடைவதற்கான அனைத்து விதமான முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

வேளாண்மைத் தொழிலை பல்வேறு சவால்களைக் கடந்து விடாமுயற்சியுடன் தொடர்ந்து செய்து வரும் உழவர்களை ஊக்குவிக்கும் வகையில் நல்ல திட்டங்கள் முதல் மற்றும் இரண்டாம் வேளாண் தனி நிதிநிலை அறிக்கைகளில் அறிவிக்கப்பட்டு செவ்வனே செயல்படுத்தப்பட்டுள்ளன.

## வேளாண்மைத் துறையின் தோற்றம்

வேளாண்மை சம்பந்தமாக **ஆளுநர் சர் வில்லியம் டெனிசன்** 1863 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் தனது, குறிப்புக்குழுவிற்கு (Council of Note) சில வேளாண் நடைமுறைக் குறிப்புகளைத் தெரிவித்து, குழுவினுடைய கவனத்தினை முதல் முறையாக ஈர்த்தார்.

இந்திய பஞ்ச ஆணையத்தின் (1880) பரிந்துரையின் அடிப்படையில் **1882 ஆம்**

**ஆண்டில் ஒரு தனி வேளாண்மைத் துறை அமைக்கப்பட்டது.** வேளாண்மை இயக்குநர் பதவியானது வருவாய் தீர்வு, நில ஆவணங்கள் மற்றும் வேளாண்மை ஆணையரக பணியாக மறுவடிவமைக்கப்பட்டது. மேலும், 1905 ஆம் ஆண்டு முதல் வேளாண்மைத் துறை ஒரு தன்னிறைவு அலகாக ஒழுங்கமைக்கப்பட்டு வேளாண்மை இயக்குநர் மற்றும் தேவையான சார்நிலை ஊழியர்கள் நியமிக்கப்பட்டு அவரது தலைமையின் கீழ் தொடர்ந்தது.

தலைமைச் செயலக மட்டத்திலும் வேளாண்மைத்துறையின் கட்டுப்பாடு வருவாய்த் துறையிலிருந்து திட்ட வளர்ச்சித் துறைக்கும் பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட வேளாண்மைத் துறைக்கும் மாற்றப்பட்டது. 1949-1951 ஆம் ஆண்டில் வருவாய் வாரியத்தின் குடிமைப்பொருள் வழங்கல் ஆணையர், உணவு உற்பத்தி ஆணையராக நியமிக்கப்பட்டார்.

1956 ஆம் ஆண்டு வரை தலைமைச் செயலகப் பொறுப்புகளையும் வகிக்க ஆணையிடப்பட்டு, பின்னர் இப்பணிகள் வேளாண்மைத் துறையின் அரசுச் செயலாளருக்கு மாற்றப்பட்டது.

**அட்டவணை : 1.2 – வேளாண்மை - உழவர் நலத்துறையிலுள்ள பல்வேறு துறைகளின் தோற்றம் பற்றிய விவரம்**

| வ. எண் | துறை | தோற்றம் பற்றிய விவரம் |
|---|---|---|
| 1. | வேளாண்மைத்துறை | 1882 (தனித்துறை) 1905 முதல் தனி வேளாண்மை இயக்குநருடன் செயல்படுதல் |
| 2. | வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை | 1977-1978 |
| 3. | தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை | 1979-1980 |
| 4. | விதைச்சான்றளிப்பு (அ) அங்ககச் சான்றளிப்புத்துறை | 1979-1980<br>2022 - தலைமையிடம் கோயம்புத்தூரிலிருந்து சென்னைக்கு மாற்றம். |

| வ. எண் | துறை | தோற்றம் பற்றிய விவரம் |
|---|---|---|
| 5. | வேளாண்மை பொறியியல் துறை | 1980-1981 |
| 6. | முதல் வேளாண்மை கல்லூரி | 1876 (சைதாப்பேட்டை) |
| | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம். | 1971 |
| 7. | சர்க்கரைத்துறை | 1969 வேளாண்மைத்துறையில் இணைந்தது -2022 |
| 8. | உணவுப் பதப்படுத்துதல் துறை | 2012 (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை) 2022 – குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறைக்கு மாற்றம் |
| 9 | வேளாண்மைத்துறை மறுசீரமைப்பு | 2008 |

ஆதாரம்: வேளாண்மைத் துறை கையேடு, 6-வது பதிவு (1990)


**தமிழ்நாட்டில் வேளாண்மை**

நில அமைப்பில் மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்பமண்டலத்தின் கீழ் தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. நமது மாநிலமானது 1.3 இலட்சம் சதுர கி.மீ பரப்பளவு கொண்டு அகில இந்திய அளவில் 11-வது பெரிய மாநிலமாகவும், 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 7.21 கோடி மக்கள் தொகை கொண்டு ஏழாவது மாநிலமாக விளங்குகிறது. மேலும், தமிழ்நாடு அகில இந்திய அளவில் நான்கு சதவீத பரப்பளவினையும், ஆறு சதவீத மக்கள் தொகையினையும், மூன்று சதவீத நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 59.71 இலட்சம் எக்டர் பரப்பில் 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் பயிரிடுகின்றனர். மொத்த நிலவுடைமை-தாரர்களில் (இந்திய அரசின் 10-வது வேளாண்மைக் கணக்கெடுப்பின்படி) குறு, சிறு

விவசாயிகள் 93 சதவீதமாக, 62 சதவீத நிலப்பரப்பிற்கும், நடுத்தர, பெரு விவசாயிகள் ஏழு சதவீதமாக 38 சதவீதம் நிலப்பரப்பிற்கும் நில உடைமைதாரர்களாக உள்ளனர். தமிழ்நாட்டின் சராசரி நிலவுடைமைப் பரப்பானது 0.75 எக்டர் அளவில் (இந்திய சராசரி நிலவுடைமைப் பரப்பு - 1.08 எக்டர்) உள்ளது.

### படம்: 1 – தமிழ்நாட்டின் நிலப்பயன்பாடு 2021-2022




**மொத்தநிலப்பரப்பு - 130.33 இலட்சம் எக்டர்**

**பயிரிடு திறன் (%) - 129.33 (மொத்த சாகுபடி பரப்பு / நிகர சாகுபடி பரப்பு x 100)**

(*) *மொத்த பயிரிடும் பரப்பு (63.48 இலட்சம் எக்டர்) மற்றும் ஒருமுறைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (14.39 இலட்சம் எக்டர்)-க்குமுள்ள வேறுபாடு.*

***(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு)***


**அட்டவணை:1.3 –நிலப்பயன்பாட்டில் தமிழ்நாட்டின் நிலை (2021-2022)**

| வ. எண் | நிலப் பயன்பாடு | (இலட்சம் எக்டர்) | | |
|---|---|---|---|---|
| | | 2020-2021 | 2021-2022 | குறிப்பு |
| 1. | மொத்த சாகுபடி பரப்பு | 61.55 | 63.48 | 1.93 **இலட்சம் எக்டர்** அதிகரிப்பு |
| 2. | நடப்பு தரிசு நிலங்கள் | 8.93 | 8.00 | 0.93 **இலட்சம் எக்டர்** குறைவு |
| 3. | இதர தரிசு நிலங்கள் | 18.65 | 18.64 | 0.01 **இலட்சம் எக்டர்** குறைவு |
| 4. | நிகர சாகுபடி பரப்பு | 48.33 | 49.09 | 0.76 **இலட்சம் எக்டர்** அதிகரிப்பு |
| 5. | பயிரிடு திறன் (%) | 127.35 | 129.33 | 1.98 (%) அதிகரிப்பு |

**தமிழ்நாட்டின் சராசரி மழையளவு**

தமிழ்நாட்டின் சராசரி மழையளவு 937.5 மி.மீ. ஆகும். 2022 ஆம் ஆண்டு 1131.40 மி.மீ பெறப்பட்டுள்ளது.

**படம்: 2 - 2022 ஆம் ஆண்டில் பருவம் வாரியாக பெறப்பட்ட மழையளவு**




**(ஆதாரம் : இந்திய வானிலைத்துறை)**

## பாசனநீர் ஆதாரம்

மாநிலத்தின் பல்வேறு பாசனநீர் ஆதாரங்கள் மூலம் பயன்பெறும் நிகர பாசனப் பரப்பளவு விவரம் பின்வருமாறு.

**அட்டவணை : 1.4– நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப்பரப்பு - 2021-2022**

| பாசன ஆதாரம் | எண்ணிக்கை | நிகர பாசனப்பரப்பு இலட்சம் எக்டர்) | நிகர பாசனப்பரப்பு (%) |
|---|---|---|---|
| கால்வாய்கள் | 2,240 | 6.84 | 23.35 |
| ஏரிகள் | 41,114 | 4.10 | 14.00 |
| குழாய் கிணறுகள்/ ஆழ்துளை கிணறுகள் | 2,42,583 | 5.46 | 18.64 |
| திறந்தவெளிக் கிணறுகள் | 14,42,079 | 12.85 | 43.87 |
| இதர பாசனம் | | 0.04 | 0.14 |
| **மொத்தம்** | | **29.29** | **100.00** |

*ஆதாரம் : பொருளியல் மற்றும் புள்ளியியல்துறை, தமிழ்நாடுஅரசு*


கிணறு மற்றும் ஆழ்துளைக்கிணறுகள் மூலம் 63 சதவீதமும், கால்வாய்கள் மூலம் 23 சதவீதமும் ஏரிகள் மூலம் 14 சதவீதமும் ஆன பரப்பளவு பாசனம் பெறுகின்றது.

**பாசனநீர் ஆதார பயன்பாட்டு நிலை**

2020-2021 ஆம் ஆண்டில் **6.68 இலட்சம் எக்டராகவும் 3.72 இலட்சம் எக்டராகவும்** இருந்த கால்வாய்கள், ஏரிகளின் மூலமான நிகர பாசனப்பரப்பு, 2021 - 2022 ஆம் ஆண்டில் முறையே **6.84 இலட்சம் எக்டராகவும்** (2.39 சதவீதம்) **4.10 இலட்சம் எக்டராகவும்** (10.21 சதவீதம்) அதிகரித்துள்ளது.

2020-2021 ஆம் ஆண்டில் **17.20 இலட்சம் எக்டராக** இருந்த கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலமான நிகர பாசனப்பரப்பு **18.31 இலட்சம் எக்டராக** (6.45 சதவீதம்) அதிகரித்துள்ளது. நிகர நீர்ப்பாசனப்பரப்பு ஆறு சதவீதம் அதிகரிக்கும் விதத்தில் உள்ளது.

படம்:3- தமிழ்நாட்டின் 7 வேளாண்தட்ப வெப்ப மண்டலங்கள்




ஆதாரம் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் இணையதளம்

# 1. வேளாண்மை


## 1.1. பயிர்சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரித்தல்

தமிழக வரலாற்றில் முதன்முதலாக 2021 ஆம் ஆண்டில் வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, பல உழவர் நலன் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி விவசாயிகளிடம் கொண்டு சேர்த்ததன் பலனாக, கடந்த 2020-2021 ஆம் ஆண்டில் 48.33 இலட்சம் எக்டர் பரப்பாக இருந்த **நிகர பயிர் சாகுபடி பரப்பானது 76,000 எக்டர்** அதிகரித்து 2021-2022 ஆம் ஆண்டில் **49.09 இலட்சம் எக்டர் பரப்பாக** உயர்ந்துள்ளது.

இதே போன்று 2020-2021 ஆம் ஆண்டில் **13.22 இலட்சம் எக்டராக** இருந்த இருபோக சாகுபடி பரப்பானது 1.17 இலட்சம் எக்டர் அதிகரித்து 2021-2022 ஆம் ஆண்டில் **14.39 இலட்சம் எக்டராக** உயர்ந்துள்ளது.

மேலும், உணவு தானிய உற்பத்தியானது கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் **119.97 இலட்சம் மெட்ரிக் டன்** கிடைக்கப்பெற்றுள்ளது. இது கடந்த 2020-2021 ஆம் ஆண்டில் அடையப்பட்ட **108.24 இலட்சம் மெட்ரிக் டன்னை** விட **11.73 இலட்சம் மெட்ரிக் டன்** கூடுதல் என்பது மட்டுமல்லாமல் கடந்த ஆறு ஆண்டுகளில் அடையப்படாத சாதனையுமாகும்.

**படம்: 4 - கடந்த ஆறு ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தி ஒப்பீடு**




** (கடந்த 2022-2023 இரண்டாவது முன் மதிப்பீட்டின் படி)

## அட்டவணை: 1.5 – வரும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 20.20 | 80.75 | 3,998 |
| 2 | சிறுதானியங்கள் | 9.83 | 38.25 | 3,892 |
| 3 | பயறு வகைகள் | 9.50 | 8.00 | 842 |
| **மொத்த உணவு தானியங்கள்** | | **39.53** | **127.00** | |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 5.56 | 15.40 | 2,769 |
| 5 | பருத்தி | 1.78 | 4.50* | 432** |
| 6 | கரும்பு | 1.75 | 227.50 | 130*** |
| | **மொத்தம்** | **48.62** | | |

**உற்பத்தி இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு 170 கிலோ*

** உற்பத்தித் திறன்-பஞ்சு **** உற்பத்தி திறன் மெட்ரிக் டன் / எக்டர்*

## 1.2 முதன்மை வேளாண்மைத் திட்டங்கள்

### 1.2.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

"கிராமங்களின் வளர்ச்சியே ஒரு நாட்டின் வளர்ச்சியாகும்" என்பது மகாத்மா காந்தியடிகளின் கூற்று. தமிழ்நாடு அரசு, கிராம வளர்ச்சியே உண்மையான வளர்ச்சி என்ற அடிப்படையில் **கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை** செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளில், ஒவ்வொரு ஆண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் தெரிவு செய்யப்படும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட கிராம ஊராட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள தரிசு தொகுப்பு நிலங்களில் மின் அல்லது சூரிய சக்தி வசதியுடன் நீர்பாசன வசதிகளை ஏற்படுத்தி, நுண்ணீர் பாசனத்துடன், பழ மரக்கன்றுகளை நிரந்தர பயிர்களாகவும், ஊடு பயிர்களாக வேளாண் பயிர்களையும் சாகுபடி செய்வது முக்கிய அம்சமாகும்.

மேலும் திட்ட கிராமங்களில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் இதர திட்டங்களை 80 சதவீதம் அளவிற்கு ஒருங்கிணைத்தும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு 2023-24-ஆம் ஆண்டில் இத்திட்டம் 2,504 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

### 1.2.2. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (ஐந்தாண்டு திட்டம்)

தமிழ்நாட்டில், 40 சதவீதத்திற்கும் மேல் மானாவாரி சாகுபடி நிலங்கள் உள்ளது.

வேளாண்மையில் எல்லா மாவட்டங்களிலும் சீரான வளர்ச்சி வேண்டுமெனில், மானாவாரி நிலங்களின் வளர்ச்சியும் மிக முக்கியமானது.

மானாவாரி நிலங்களின் மேம்பாட்டிற்காக கடந்த ஆறு ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்ட முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் முடிவுற்ற நிலையில், மானாவாரி நில விவசாயிகளின் நலனுக்காக 25 மாவட்டங்களில் **சிறுதானிய சாகுபடியை ஊக்குவித்து, நுகர்வினை அதிகரிக்கும் விதமாக சிறுதானிய இயக்கம் 2023-24 ஆம் ஆண்டு முதல் 2027-28-ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட உள்ளது.**

தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், நடப்பு 2023-24 ஆம் ஆண்டில் ரூ.82 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.3 மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாட்டில் அனைத்து பகுதிகளிலும் நவீன தொழில்நுட்பங்களுடன் நல்ல சாகுபடி முறைகளை கடைபிடித்து, நல்வருமானத்தை பெற்றிடும் வகையில் தமிழ்நாடு அரசின் நிதியில் இருந்து பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய பெருந்திட்டமே மாநில வேளாண் வளர்ச்சித் திட்டமாகும்.

#### 1.2.3.1. நெல் ஜெயராமன் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

நம் உழவர்களின் வயல்களில் பன்னெடுங்காலமாக பயிரிட்டு வந்த பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாப்பது மிக அவசியமானதாகும். பலவகையான மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த பாரம்பரிய நெல் இரகங்களான தூயமல்லி, சீரகச்சம்பா, மாப்பிள்ளைச்சம்பா, கருப்புக்கவுனி, ஆத்தூர் கிச்சலிசம்பா, தங்கச்சம்பா, கீரைச்சம்பா மற்றும்

பிற இரகங்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. அவற்றைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், குறைந்துவரும் பாரம்பரிய நெல் இரகங்களை விதை பெருக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்குவதே இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

2022-23ஆம் ஆண்டில், 300 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் விநியோகம் செய்திட ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அரசு விதைப் பண்ணைகளில் 250 ஏக்கரில் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் அரசு விதை பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பில் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.50 இலட்சம் ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு 2024-25 ஆம் ஆண்டில் மானிய விலையில் வழங்கப்படும்.

இத்தகைய பாரம்பரிய நெல் இரகங்களை தொடர்ந்து பயன்படுத்த வேண்டுமெனில், இதனுடைய பாரம்பரிய தூய்மை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக, இத்தகைய நெல் இரகங்களின் விதை வங்கியினைப் பராமரித்து வரும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக தலா ரூபாய் மூன்று இலட்சம் வீதம் பத்து விவசாயிகளுக்கு 2023-24-ஆம் ஆண்டில் ரூ.30 இலட்சம் வழங்கப்படும்.

### 1.2.3.2 குறுவைப் பருவத்தில் மாற்றுப் பயிர்

தமிழ்நாட்டில் முக்கிய பருவமழை காலமான வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதத்தில் தொடங்கி டிசம்பரில் முடிவடைகிறது. எனவே, பருவமழை அல்லாத காலங்கில் அதிக நீர் தேவையுள்ள பயிர்களை தவிர்த்து நீர் குறைவாக தேவைப்படக்கூடிய பயிர்களை பயிரிட்டால் குறைந்த நீரைப் பயன்படுத்தி நல்ல மகசூலை பெறலாம். இதனை கருத்தில்

கொண்டு குறைந்த நீர்த்தேவையுள்ள பயிர்களை மாற்றுப் பயிர்களாக விளைவிக்கவும் ஊக்கப்படுத்தவும் வேண்டியுள்ளது. எனவே, மண் வளத்தினைப் பாதுகாக்கவும், விவசாயிகள் அதிக இலாபம் பெறவும், கார், குறுவை, சொர்ணவாரி பருவத்தில் குறைந்த நீர்த்தேவையுள்ள சிறுதானியங்கள், பயறு-வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப்பயிர்களின் சாகுபடி ஊக்கப்படுத்தப்படும்.

இதற்காக நடப்பாண்டில் இத்திட்டம் ரூ.16.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.3.3. நெல்லுக்கு பின் பயிர் சாகுபடி

விவசாயிகள் தொடர்ந்து ஒரே பயிரினைச் சாகுபடி செய்வதால் மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக்கள் மிகக்குறைந்து, ஒரே விதமான பூச்சி, நோய் தாக்குதலால் மகசூல்

குறையும் வாய்ப்புள்ளது. எனவே, சம்பா நெல் அறுவடைக்குப்பின் எஞ்சிய ஈரப்பதத்தினை பயன்படுத்தி சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருத்தி சாகுபடி செய்வதால், வேளாண் விளை நிலங்களில் மண் வளம் அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்கு குறைந்த செலவில் கூடுதல் வருமானம் கிடைத்திடும். இத்திட்டமானது 2023-24 ஆம் ஆண்டில் ரூ.24 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.3.4. இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்

வேளாண் பட்டதாரிகளை வேளாண் சார்ந்த பணிகளில் ஈடுபடச் செய்து, உழவர்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கச் செய்வதுடன் அவர்களை சுய தொழில் முனைவோராக்குவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இளைஞர்கள்

இத்திட்டத்தின் மூலம் ஊரகப்பகுதிகளில் அக்ரி-கிளினிக் அமைப்பதால் ஊரகப் பொருளாதாரம் மேம்படும்.

இத்திட்டத்தின் கீழ் வேளாண்மை / தோட்டக்கலை / வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு முடித்த இளைஞர்கள் சுயமாக வேளாண் சார்ந்த தொழில் துவங்கிட 2023-24 ஆம் ஆண்டில் ரூபாய் இரண்டு இலட்சம் மானியம் வழங்கப்படும்.

### 1.2.4. அங்கக வேளாண்மை ஊக்குவிப்பு

தமிழ்நாடு அரசால் அங்கக வேளாண்மையை ஊக்கப்படுத்துவதற்காக, பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை–2023, மார்ச் 2023-இல் வெளியிடப்பட்டது. இது அங்கக வேளாண்மையில் ஒரு மைல் கல்லாகும்.

இயற்கை வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு அனைத்துத் தரப்பு மக்களிடமும் ஏற்பட்டுள்ளது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் தொடர் பயன்பாட்டினால் வேளாண் பொருட்களில் நச்சு எஞ்சியிருக்கும் சூழலுள்ளது. இவை பல்வேறு நோய்களுக்கும் காரணியாகவும் அமைகிறது. இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக இயற்கை இடுபொருட்கள் தயாரிக்க நிதியுதவி வழங்கப்படுகிறது. நடப்பாண்டிலிருந்து சிறந்த அங்கக விவசாயிக்கு "நம்மாழ்வார்" பெயரில் விருதும் வழங்கப்படும்.

### 1.2.5. வேளாண் காடுகள் மூலம் பசுமைப் போர்வை

பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேளாண்மையை தொன்றுதொட்டு நிலைத்திருக்க வேண்டுமெனில் காடுகளின் பங்கு மிகவும் அவசியமானதாகும். காடுகள் மண்

அரிப்பைத் தடுத்து, நல்ல மழைப்பொழிவை அளிக்க கூடியவை. பலன்தரக்கூடிய உயர் மதிப்பு மரக்கன்றுகளை உழவர்களுக்கு வழங்கி காடுகளின் பரப்பளவை அதிகரிப்பதுடன் அவர்களின் வருமானத்தையும் பெருக்கும் நோக்கத்தில் இத்திட்டம் வடிவமைக்கப்-பட்டுள்ளது.

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டம் முழு மானியத்தில் 77 இலட்சம் உயர்மதிப்பு மரக்கன்றுகள் 36,694 விவசாயிகளுக்கு ரூ.11.55 கோடி மாநில நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் விவசாயிகளுக்கு 75 இலட்சம் உயர் மதிப்புள்ள மரக்கன்றுகளை முழுமானியத்தில் விநியோகிக்கும் விதமாக, மரக்கன்றுகள் வளர்க்கப்படும் நாற்றங்கால்களை வலுப்படுத்த ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.2.6. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவிகித மானியம்.

தமிழ்நாட்டில் 144.38 இலட்சம் மற்றும் 7.95 இலட்சம் என்ற அளவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 79.37 இலட்சம் நில உடைமைதாரர்களில் ஆதிதிராவிட விவசாயிகள் 7.99 இலட்சம் நில உடைமைதாரர்களாக, 4.66 இலட்சம் எக்டர் பரப்பிலும், பழங்குடியின விவசாயிகள் 0.94 இலட்சம் நில உடைமைதாரர்களாக 0.75 இலட்சம் எக்டர் பரப்பிலும் சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மென்மேலும் உயர்த்திடவும், உயர்மதிப்பு கொண்ட வேளாண் திட்டங்களிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள வழிவகை செய்திடும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, அவர்களின் பங்களிப்புத் தொகையில்

நிதிச்சுமையினை குறைத்திடும் வகையில், நடைமுறையில் உள்ள மானியத்துடன் கூடுதலாக 20 சதவிகிதம் மானியம் வழங்கி வருகிறது.

நடப்பாண்டிலும் ரூ.11 கோடி மதிப்பில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.7. மின்னணு வேளாண்மைத் திட்டம்

தற்போது, அனைத்து பணிகளிலும் எங்கும் எதிலும் மின்னணுமயம் என்ற நிலை உள்ளது. மின்னணு வேளாண்மை தொழில்நுட்பங்கள், விவசாயம் சார்ந்த கிராமப்புற வளர்ச்சியிலும், தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்வதிலும், சந்தை விலையை துரிதமாக தெரிந்து கொள்வதிலும் மிக முக்கிய பங்காற்றுகின்றன.

நடப்பாண்டில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி 10 முக்கிய பூச்சி மற்றும்

நோய்களுக்கு உண்டான உடனடித் தீர்வு முறைகளை விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் வலைதளம் மூலம் இயங்கும் பொருட்கள் (Internet of Things) மூலமாக தானியங்கி முறையில் நீர்பாசனம் மற்றும் நீர்வழி உரமிடல் போன்ற தொழில்நுட்பங்கள் தலா மூன்று மாநில வேளாண் மற்றும் தோட்டக்கலை பண்ணைகளில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

GRAINS – ஒரு தளம் - ஒருங்கிணைந்த சேவை இணைப்பகத்தினைக் கொண்டு, நடப்பாண்டில், விவசாயிகள் ஒற்றை சாளர வலைதளம் வாயிலாக அனைத்து திட்டப் பலன்களைப் பெற GRAINS (Grower Online Registration of Agriculture Input System) வலைதளம் பயன்படுத்தப்படும்.

GRAINS வலைதளத்தில், கீழ்கண்ட விவரங்கள் இணைக்கப்பட்டிருக்கும்.

1. நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயிகள் விவரம்.
2. நில உடைமை வாரியாக 16,721 கிராமங்களுக்கும் புவியியல் குறியீடு செய்தல்.
3. நில உடைமை வாரியாக பயிர் சாகுபடி விவரம் சேகரித்தல் (மின்னணு இ-பயிர் பதிவு முறை).

GRAINS வலைதளத்தில் உள்ள தரவுகள் பதின்மூன்றிற்கும் மேற்பட்ட துறைகளுக்கு பயன்படுவதுடன், விவசாயிகளுக்கு தேவையான திட்டப் பலன்களை வழங்குவதுடன் தகுதியான பயனாளிக்கு சரியான பலனைக் கொண்டு செல்வதற்கு இத்தளம் பேருதவியாக இருக்கும்.

### 1.2.8. ஒருங்கிணைந்த பண்ணையம்

விவசாயிகள் பயிர் சாகுபடியை மட்டுமே மேற்கொள்வதினால் தொடர் வருமானம் பெறுவது சாத்திமற்றதாக உள்ளது. விவசாயிகள் நீடித்த, நிலையான வருமானம் பெற்றால்தான் அவர்களின் வாழ்வாதாரமும் உயர்ந்து, குடும்பங்களும் நிறைவு பெற்றவையாக விளங்கும். ஆண்டுதோறும் வருமானம் என்ற நிலையினை ஏற்படுத்திட பயிர் சாகுபடியுடன் இணைந்து வேளாண் சார்ந்த தொழில்களையும் மேற்கொண்டால் அவற்றின் மூலம் கிடைக்கும் பொருட்களை மறுசுழற்சி செய்து, நிலம் வளம் பெறுவதோடு வருமானமும் தொடர்ந்து கிடைத்திடும் நிலை உள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு வேளாண் குடும்பங்களை உயர்த்திடும் நோக்கத்துடன் பயிர் சாகுபடியுடனான பிற வேளாண்சார் செயல்பாடுகளையும் இணைந்து

ஒருங்கிணைந்த பண்ணையமாக செயல்படுத்திட ஊக்கப்படுத்தி வருகிறது.

2022-23-ஆம் ஆண்டில், 13,000 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் ரூ.65.65 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.9 பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாட்டில் பழங்குடியின விவசாயிகள் பல மாவட்டங்களைச் சார்ந்த மலைப்பகுதிகளில் இயற்கையோடு இணைந்து விவசாயம் செய்து வருகின்றனர். வேளாண் வளர்ச்சியானது அனைத்து பிரிவு விவசாயிகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை உள்ளடக்கியதாகும். எனவே, "வானுயர்ந்த மலைக்கும் தானுண்டு பிள்ளை" என்று அடர்ந்த காட்டிலும் அயராது பாடுபடும்

பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசானது பழங்குடியின விவசாயிகளின் வளர்ச்சிக்காக துறை சார்ந்த திட்டங்களுடன் பிற துறைகளின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து அவர்களை முன்னேற்ற பாதையில் முன்னெடுத்து செல்ல இத்திட்டத்தினை செயல்படுத்த உள்ளது.

### 1.3. பயிர் சாகுபடி விவரம்

#### 1.3.1. நெல்

தமிழ்நாடு மக்களின் பிரதான உணவாக அரிசி இருப்பதால் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதில் அரிசி முக்கிய பங்கு வகிக்கிறது. மொத்த பயிர் சாகுபடியில் 35 சதவீதம் நெல் பயிரிடப்படுகிறது.

**அட்டவணை:1.6– பருவம், பரப்பு மற்றும் உற்பத்தி விவரம்.**

| பருவம் | மாதம் | பரப்பு (இலட்சம் எக்டர்) | அரிசி உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) |
|---|---|---|---|
| கார் / குறுவை / சொர்ணவாரி | ஏப்ரல் – ஜுலை | 4.14 | 16.90 |
| சம்பா / தாளடி / பிசானம் | ஆகஸ்டு – நவம்பர் | 14.49 | 48.02 |
| நவரை / கோடை | டிசம்பர் – மார்ச் | 3.54 | 14.14 |
| **மொத்தம்** | | **22.17** | **79.06** |

2022–23 ஆம் ஆண்டில் நெற்பயிரின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.15.10 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்

ரூ.4.57 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டிலும் இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இயற்கைச் சீற்றங்களிலிருந்து வேளாண் விளை பொருட்களைப் பாதுகாப்பதற்காக, ரூ.5 கோடி மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. நெற்பயிரின் வளர்ச்சிக்குத் தேவையான துத்தநாக சல்பேட் மற்றும் மண் வளத்தைக் கூட்டும் ஜிப்சம் ஆகியவை விவசாயிகளுக்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் கடந்த 2022-23 ஆம் ஆண்டில் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் நடப்பு நிதியாண்டிலும் செயல்படுத்தப்படும்.


### 1.3.2. சிறுதானியங்கள்


"உருவிலே சிறுதானியமானாலும்

உணவிலே அது பெருதானியமே "

தமிழ்நாட்டில் சோளம், கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் ஆகிய சிறுதானியங்களும், வரகு, பனிவரகு, குதிரைவாலி, சாமை, தினை போன்ற குறுதானியங்களும் சராசரியாக 8.94 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு, 31.35 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றன.

### படம் 5 - 2021-22 ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறுதானிய பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன்




ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு -2021-22 இறுதி மதிப்பீடு

## தேசிய உணவுப்பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம்

### அ) ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்கள்

சிறுதானியங்களின் பரப்பை அதிகரித்து, அதன் உற்பத்தியையும், உற்பத்தி திறனையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் பயன்பாடற்ற நிலங்களையும், வளம் குறைவான நிலங்களையும் மேம்படுத்தி மண் வளம் அதிகரித்திடவும், உரிய தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு உரிய காலத்தில் கிடைக்கச்செய்வதன் மூலம் உயர் விளைச்சல் அடைந்திட இயலும். மேலும், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலைக் கிடைக்கச் செய்து வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்ட உட்கூறுகள் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டம், 15 மாவட்டங்களில் கடந்த 2022-23 ஆம் ஆண்டில், ரூ.39.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆ) மக்காச்சோளம்**


மக்காச்சோளப் பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கவும், விவசாயிகளின் வயல்களில் மண்வளத்தைப் பெருக்கி உற்பத்தித்திறனை நிலை நிறுத்திடவும், விவசாயிகளுக்கு நிலையான வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் கிடைக்கச் செய்திடவும், இத்திட்டமானது ஒன்பது மாவட்டங்களில், 2022-23 ஆம் ஆண்டில், ரூ.1.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

நடப்பாண்டில் இத்திட்டம் ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.3. பயறுவகைப் பயிர்கள்

பயறுவகைப் பயிர்கள் மண்வளத்தை பெருக்குவதில் முக்கியப் பங்காற்றுவதுடன் மனிதர்களுக்குத் தேவையான புரதச்சத்தையும் வழங்குகிறது. துவரை, உளுந்து, பச்சைப்பயறு மற்றும் கொள்ளு ஆகியவை தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் முக்கிய பயறுவகைப் பயிர்களாகும். தமிழ்நாட்டில், பயறுவகைப் பயிர்கள் சராசரியாக 8.17 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 5.22 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

**படம் 6 - 2021-22 ஆம் ஆண்டு பயறுவகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி**




**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு)**

பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவை அடையும் பொருட்டு, தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டங்கள் முறையே ரூ.42.66 கோடி மற்றும் ரூ.27.80 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2022–23 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன.

மேலும், துவரை சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், கடந்த 2022-23 ஆம் ஆண்டில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை மற்றும் சேலம் மாவட்டங்களை உள்ளடக்கிய "துவரை சிறப்பு மண்டலம்" அமைக்கப்பட்டு தேவையான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன.

மேலும், "நெல்லுக்கு பின் பயறு சாகுபடித் திட்டம்" 10 இலட்சம் ஏக்கர் பரப்பில், ரூபாய் 30.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.48 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

தமிழ்நாட்டில் எண்ணெய்வித்துப் பயிர்கள் சராசரியாக 3.95 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 9.44 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது.

எண்ணெய்வித்துப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த, கடந்த 2022-23 ஆம் ஆண்டில் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் ரூ.28.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும், சோயாபீன்ஸ் சாகுபடியை ஊக்குவிக்க தங்கப்பயறு சோயாபீன்ஸ் திட்டம் ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

நடப்பாண்டில் இத்திட்டங்கள் ரூ.33.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மேலும், எண்ணெய்வித்துக்கள் அதிகம்

விளையும் மாவட்டங்களை ஒருங்கிணைத்து '**சிறப்பு எண்ணெய்வித்து மண்டலம்**' உருவாக்கப்படவுள்ளது.

**1.3.4.1. எண்ணெய்வித்து மரப்பயிர்கள்**

எண்ணெய்வித்துப்பயிர்களின் சாகுபடி பரப்பினை தமிழ்நாட்டில் அதிகரித்திடவும் பயன்பாடின்றி தரிசாக உள்ள நிலங்களை புனரமைத்திடவும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரிசு நிலப்பயன்பாட்டை மேம்படுத்தவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும், வேம்பு மற்றும் புங்கம் ஆகிய மரங்களை சாகுபடி செய்ய மரக்கன்று நடவு செய்தல் மற்றும் ஏற்கனவே சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் பராமரிப்பு மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்தல், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் ஆகிய இனங்கள் செயல்படுத்த கடந்த 2022-23 ஆம் ஆண்டு ரூ.1.66 கோடி நிதி

ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், நடப்பாண்டில் இலுப்பை மர சாகுபடியையும் சேர்த்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.3.5. பருத்தி

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் வணிகப்பயிர்களில் பருத்தி பயிர் இயற்கை இழை தரக்கூடிய முக்கிய வணிகப்பயிராகும். இப்பயிர் நெசவுத் தொழிலுக்கு பருத்தி இழைகள் வழங்குவதோடு, பருத்தி விதைகள் புரதச்சத்து நிறைந்துள்ளதால் கால்நடை தீவன உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முக்கிய மூலப்பொருளாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் பருத்தி பயிரானது சராசரியாக 1.62 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 3.92 இலட்சம் பஞ்சுப்பொதிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் ரூ.11.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மிக நீண்ட மற்றும் நீண்ட இழைப் பருத்தி இரகங்களின் விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டம் நடப்பாண்டிலும் ரூ.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.3.6 தென்னை

தென்னை, ஆண்டு முழுவதும் காய்ப்புடன் வருமானம் கொடுத்து கைகொடுக்கும் பல்லாண்டுப் பயிராகும். தென்னையில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன், மாநில அரசாலும், தென்னை வளர்ச்சி வாரியத்தாலும், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தென்னை 4.44 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, ஆண்டுக்கு சுமார் 51,282 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு 11,526 தேங்காய்கள் ஆகும். கடந்த 2022-23 ஆம் ஆண்டில், தென்னை வளர்ச்சி வாரியத் திட்டத்தின் கீழ் ரூ.12.25 கோடி நிதியும், மாநிலத் திட்டத்தின் கீழ் ரூ.5.58 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு திட்ட இனங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் தென்னை வளர்ச்சி வாரியத் திட்டம் ரூ.48.19 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 1.4. வேளாண் துறையின் இதர திட்டங்கள்

### 1.4.1 தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)


"தரமான வித்தே நல் விளைச்சலுக்கு ஆதாரம்". உரிய பருவத்தில் விவசாயிகளுக்கு விதை விநியோகம் செய்யும் உன்னத நோக்கத்துடன், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை தொடங்கப்பட்டது. மேலும் அறிவிக்கை செய்த பயிர் இரகங்களில் ஆதார மற்றும் சான்று விதை உற்பத்தியை மேற்கொள்ளுதல், விதைப்பண்ணை விவசாயிகளிடமிருந்து சான்று விதைகளை கொள்முதல் செய்து அதற்கான உரிய விலையை விதை விலைக் கொள்கைப்படி அளித்தல், அனைத்து விதை தொடர்பான துறையின் உட்கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து பயன்படுத்தி தரமான விதைகளை விநியோகிக்க வழிவகை செய்தல்

ஆகியவைகள் இம்முகமையின் முக்கிய நோக்கங்களாகும்.

இம்முகமையின் கீழ், 33 மாநில விதைப் பண்ணைகளும், ஆறு மாநில எண்ணெய் வித்துப் பண்ணைகளும், ஒரு மாநில பயறுவகை விதைப்பெருக்கப்பண்ணையும், 23 அரசு தென்னை நாற்றுப்பண்ணைகளும், 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்களும், 108 விதை சுத்திகரிப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் மொத்தம் 28,011 மெட்ரிக் டன் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 31,180 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்து விநியோகிக்கப்படும்.

**படம்:7 - 2023-2024 ஆம் ஆண்டிற்கான விதை கொள்முதல் மற்றும் விநியோகத்திட்டம்**




## 1.4.2. தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

தரமான தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகித்தல், தென்னங்கன்றுகளை அதிகளவில் உற்பத்தி செய்து விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்தல், தென்னை பரப்பு மற்றும் உற்பத்தியை பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் 23 தென்னை நாற்றுப் பண்ணைகளும்,

16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்களும் இயங்கி வருகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் 13.73 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 16.07 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.

### 1.4.3. வேளாண்மை விரிவாக்க மையங்கள்

முக்கிய வேளாண் இடுபொருட்களை, இருப்பு வைத்து விநியோகிப்பதோடு, விதைப்பு முதல் அறுவடை வரை தேவைப்படும் அனைத்து ஆலோசனைகளையும் வழங்கும் ஒருங்கிணைப்பு மையமாக, வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்படுகின்றன.

மொத்தம் 880 வேளாண்மை விரிவாக்க மையங்களில் வட்டார அளவில் 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களும், பிர்கா

அளவில் 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்படுகின்றன.

விவசாயம் தொடர்பான அனைத்து சேவைகளையும் விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் வழங்கிடும் பொருட்டு, 383 முதன்மை வேளாண்மை விரிவாக்க மையங்களில், 193 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், 44 மையங்களை தரம் உயர்த்திட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில், 155 மையங்களுக்கு பல்வேறு வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இது தவிர 124 துணை மையங்களுக்கு புதிய கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 1.5. பயிர்ப் பாதுகாப்பு

பயிர்ப் பாதுகாப்பு என்பது சரியான கட்டுப்பாட்டு முறைகளை உரிய நேரத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களின் உற்பத்தியை பாதிக்கும் பூச்சி, நோய் மற்றும் களைகளை கட்டுப்படுத்தும் மேலாண்மை முறையாகும். மேலும் நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாத்து, தீமை செய்யும் பூச்சிகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்கத் தரமான, பாதுகாப்பான பூச்சிக்கொல்லிகள் விநியோகம் செய்தல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க விவசாயிகளை ஊக்குவித்தல், அயல்நாட்டிலிருந்து உள் நுழையும் பூச்சி / நோய்களை கண்காணித்து தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகிய பணிகளை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

### 1.5.1. உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்தல்.

பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டைக் குறைத்திடவும், சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பான பயிர் பாதுகாப்பு முறைகளை பயன்படுத்திடவும், எஞ்சிய நஞ்சில்லாத உணவுகளை உற்பத்தி செய்திடவும் விவசாயிகளுக்கு 24 உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் ஆய்வகங்கள் வாயிலாக உயிரியல் பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை:-1.7- 2022-23 ஆம் ஆண்டில் உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்**

| வ. எண் | உயிரியல் பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் | உற்பத்தி மற்றும் விநியோகம் |
|---|---|---|
| 1. | டிரைகோடெர்மா விரிடி (கிலோ) | 3,19,653 |
| 2. | சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (கிலோ) | 4,02,197 |
| 3. | பவேரியா பேசியானா (கிலோ) | 20,969 |
| 4. | டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி) | 1,17,120 |
| 5. | மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ) | 1,11,381 |
| 6. | கிரைசோபெர்லா (எண்கள்) | 1,42,73,000 |

இத்திட்டம் 2023-24-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.6. உரம்

பயிர் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் இரசாயன உரங்கள், ஒன்றிய அரசின் உரம் மற்றும் இரசாயனத்துறை மூலம் தமிழ்நாட்டிற்கு மாதாந்திர உர வழங்கல் திட்டத்தின்படி (Monthly Supply Plan) ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

மேலும், விவசாயிகளுக்கு தங்குதடையின்றி உரிய நேரத்தில் உரங்கள் கிடைத்திட இவ்வரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 2022-23 ஆம் ஆண்டில் 23.50 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டிலும் உரங்கள் ஒன்றிய அரசிடமிருந்து பெற்று வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் காரீப் 2023 பருவத்திற்கு 10.38 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் தேவை என

கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 4.15 இலட்சம் மெட்ரிக் டன் (40%) உரங்கள் இருப்பில் உள்ளன.

**அட்டவணை:1.8 - ஆண்டு வாரியாக உர விநியோக விவரங்கள்**

| **உரம்** | **உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்)** | |
|---|---|---|
| | 2021 – 2022 | 2022 - 2023 |
| யூரியா | 9.180 | 10.750 |
| டி.ஏ.பி | 2.170 | 3.050 |
| பொட்டாஷ் | 2.010 | 1.580 |
| காம்ப்ளக்ஸ் | 7.740 | 7.380 |
| சூப்பர் பாஸ்பேட் | 0.720 | 0.740 |
| **மொத்தம்** | **21.820** | **23.500** |

## 1.7. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

விவசாயிகளுக்கு தரமான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் மற்றும் உயிர் உரங்கள் கிடைத்திட தமிழ்நாட்டில் உள்ள

14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள், மூன்று மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகத்துடன் கூடிய குறியீட்டு மையங்கள், இரண்டு அங்கக உரப் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருச்சி மாவட்டத்தில் உயிர் உரத் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆகியவையும் செயல்பட்டு வருகின்றன.

### 1.7.1. உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் செயல்பாடுகள்

**அட்டவணை: 1.9 - உர மாதிரிகள் பரிசோதனை விவரம்**

| வ. எண் | விவரம் | 2022-2023 | | தரமற்ற மாதிரிகள் | 2023-2024 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1 | உர மாதிரிகள் | 24600 | 23226 | 588 - (540 துறை ரீதியாகவும், 48 சட்ட ரீதியாகவும் நடவடிக்கை) | 24600 |

| வ. எண் | விவரம் | 2022-2023 | | தரமற்ற மாதிரிகள் | 2023-2024 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 2 | அங்கக உர மாதிரிகள் | 1440 | 1410 | 106 | 1440 |
| 3 | உயிர் உர மாதிரிகள் | 1040 | 1006 | 14 | 1040 |

மேலும், அனைத்து உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் ISO-17025:2017 தேசிய தர நிர்ணயச்சான்றினை (NABL Accreditation) பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## 1.7.2. பூச்சிக்கொல்லி ஆய்வகங்களின் செயல்பாடுகள்

**அட்டவணை: 1.10 - பூச்சிக்கொல்லி மாதிரிகள் பரிசோதனை விவரம்**

| வ. எண் | விவரம் | 2022-2023 | | தரமற்ற மாதிரிகள் | 2023-2024 இலக்கு |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | | |
| 1 | பூச்சிக்கொல்லி மாதிரிகள் | 21850 | 21766 | 130 - (94 துறை ரீதியாகவும், 36 சட்ட ரீதியாகவும் நடவடிக்கை) | 21850 |

கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் ஆய்வகங்கள் போல் மீதமுள்ள 10 ஆய்வகங்களுக்கும் தேசிய தர நிர்ணயச் சான்றினை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 1.7.3. உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்

நடப்பாண்டில், உற்பத்தி செய்யப்படும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளூரோசன்ஸ், பெவேரியா பேசியானா மற்றும் மெட்டாரைசியம் அனிசோபிலே ஆகியவற்றின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு ஆண்டு ஒன்றுக்கு 500 மாதிரிகள் திருச்சிராப்பள்ளியிலுள்ள புதிய உயிரியல் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் தரப்பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

## 1.8. மண்வள மேம்பாடு

### 1.8.1 மண் பரிசோதனை நிலையங்கள்

பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விவசாயிகளின் வருவாயை மும்மடங்காக்கவும், மண் பரிசோதனை அடிப்படையிலான பயிருக்கேற்ற மண்வள மேம்பாடும், தேவைக்கேற்ற உர நிர்வாகமும் இன்றியமையாததாகும். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் 36 மண்பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களில் மண் மாதிரிகள் மற்றும் பாசன நீர் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளின் நலனுக்காக, கடந்த 2022-23 ஆம் ஆண்டில் மண்நலம் மற்றும் மண்வளம் திட்டத்தின் கீழ் புதியதாக மயிலாடுதுறையில்

மண் பரிசோதனை நிலையம், திருநெல்வேலி மற்றும் கடலூர் மாவட்டங்களில் நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த 2022-23 ஆம் ஆண்டில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் 2,30,400 மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும், 37,000 பாசன நீர் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

### 1.9. நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம்

மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக் குறைபாடுகளை நீக்கி உயர் மகசூல் பெற்றிடவும், விவசாயிகளுக்கு தரமான நுண்ணூட்ட உரங்கள் விநியோகம் செய்திடவும்,

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் இயங்கி வரும் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம் வாயிலாக கடந்த 2022-23 ஆம் ஆண்டில் 3300 மெட்ரிக் டன் அளவில் 14 வகையான அத்தியாவசியமான நுண்ணூட்டக் கலவைகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, 3,244 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விவசாய பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வரும் 2023-24 ஆம் ஆண்டிலும், 3,300 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும்.

### 1.10. உயிர் உர உற்பத்தி மையங்கள்

மண்வளத்தை பாதுகாத்து செறிவூட்டக்-கூடிய நோக்கத்துடன், தமிழ்நாட்டில் கடந்த 2022-23 ஆம் ஆண்டில் எட்டு வகையான திரவ உயிர் உரங்கள் 12.10 இலட்சம் லிட்டர் அளவில் 22 உயிர் உர உற்பத்தி மையங்களில் உற்பத்தி செய்யத் திட்டமிட்டு, இதுவரை விவசாயிகளுக்கு 11.35 இலட்சம் லிட்டர்

விநியோகம் செய்யப்பட்டுள்ளது. துத்தநாகத்தை கரைத்துக் கொடுக்கும் பாக்டீரியா 800 லிட்டர் உற்பத்தி செய்யப்பட்டு மாநில அரசு விதைப்பண்ணைகளுக்கு கடந்த 2022-23 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு, செயல் விளக்கத்திடல்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இத்திட்டம் வரும் 2023-24 ஆம் ஆண்டில் 12.10 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள் உற்பத்தியுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.11. அட்மா – வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை

விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகளை கிராம அளவில் ஆய்வு செய்து அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து பல்நோக்குடன் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் முக்கிய

நோக்கமாகும். இதற்கென மாவட்டந்தோறும் முகமை நிறுவப்பட்டுள்ளது.

வேளாண் விரிவாக்கத் திட்டமானது வேளாண்மை, தோட்டக்கலை - மலைப்பயிர்கள், கால்நடைப் பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன் வளம் (ம) மீனவர் நலத்துறை, வனத்துறை, வேளாண் பொறியியல், வேளாண்விற்பனை மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1.11.1. 2022-23-ஆம் ஆண்டின் அட்மா செயல்பாடுகள்

இத்திட்டத்தில் உழவர் சார்ந்த செயல்பாடுகள், பண்ணைத் தகவல் பரப்புதல், பண்ணைப்பள்ளி, வேளாண் தொழில்நுட்பங்கள் மேம்படுத்தி, மதிப்பீடு செய்து பின்பற்றுதல் மற்றும் பிற புதுமையான செயல்பாடுகள் என வகைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் ரூ.61.68 கோடி செலவில் அட்மா செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**அட்டவணை: 1.11- கடந்த 2022-23-ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை**

| வ. எண் | இனம் | பயிற்சிகளின் எண்ணிக்கை | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உள் மாநில பயிற்சி | 367 | 14,680 |
| 2 | உள்மாவட்ட பயிற்சி | 7,051 | 2,82,040 |
| 3 | மாநிலங்களுக்குள்ளான கண்டுணர் பயணம் | 122 | 2,440 |
| 4 | உள் மாநில கண்டுணர் பயணம் | 801 | 40,050 |
| 5 | உள்மாவட்ட கண்டுணர் பயணம் | 1,612 | 80,600 |
| 6 | செயல் விளக்கங்கள் | 10,656 | 10,656 |
| 7 | பண்ணைப் பள்ளிகள் | 264 | 6,600 |

இவ்வாண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.12. உழவர் பயிற்சி மையங்கள்

### 1.12.1. உழவர் பயிற்சி நிலையம்

மாநிலத்தில் 22 உழவர் பயிற்சி நிலையங்களில் உழவர் மன்ற அமைப்பாளர்கள் மற்றும் வேளாண் மகளிருக்கு வேளாண் மேலாண்மையில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுவதற்காக திறன் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

### 1.12.2. மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்), குடுமியான்மலை

வேளாண்மைத் துறையில் பணிபுரியும் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் அலுவலகப்

பணியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள், நிர்வாகம், விரிவாக்க மேலாண்மை மற்றும் கணினி தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த 2022-23 ஆம் ஆண்டில் 600 வேளாண்மை தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.19.73 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 1,800 பணியாளர்களுக்கு ரூ.54 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.12.3. மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (சமிதி), குடுமியான்மலை

மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இப்பயிற்சி நிலையத்தினால் (SAMETI) வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கு

பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேலும், வேளாண்மை விரிவாக்க மேலாண்மை முதுகலை பட்டயப்படிப்பு (PGDEAM), இடுபொருள் விற்பனையாளர்களுக்கான வேளாண் விரிவாக்க சேவை பட்டயப்படிப்பு (DAESI), பூச்சிக்கொல்லி வியாபாரிகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்த சான்றிதழ் படிப்பு, கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்க்கும் பயிற்சி (STRY) மற்றும் விவசாய ஆலோசகர் (Certified Farm Advisor) போன்ற பயிற்சிக்கும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றன. மேலும், வேளாண்மை திட்டங்கள் தயாரித்தல், செயல்படுத்துதல், கண்காணிப்பு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதில் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் 2,620 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ94.14 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.134.5 இலட்சத்தில் 3,490 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனுடன் ஹைதராபாத்திலுள்ள தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் தேசிய பயிர்நல மேலாண்மை நிலையத்துடன் இணைந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகள் நடத்தப்படும்.

## 1.13. பேரிடர் மேலாண்மை

பேரிடர் காலங்களில் பயிர் பாதுகாப்பு உத்திகளை கடைபிடிக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பயிர்ச்சேதங்களால் ஏற்படும் இழப்பீடுகளை ஈடுசெய்து, விவசாயிகளை ஊக்குவிக்கும்

விதத்தில், இடுபொருள் மானியம், மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டில் ஏப்ரல், மே மாதத்தில் பெய்த கனமழை, தென் மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை மற்றும் ஜனவரி இறுதி முதல் பிப்ரவரி வரை (30.01.2023 முதல் 02.02.2023) பருவம் தவறி பெய்த கனமழை ஆகிய இயற்கைப் பேரிடர்களில் 1.39 இலட்சம் எக்டர் பரப்பில் சேதமடைந்த வேளாண் பயிர்களால் பாதிக்கப்பட்ட 1,93,366 விவசாயிகளுக்கு ரூ.174.11 கோடி இடுபொருள் மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

## 1.14. உழவர் நலன் காக்க வேளாண் மண்டலக் குழுக்கள்

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் மேற்கு மண்டலம், வடமேற்கு மண்டலம், அதிக மழைப்பொழிவு மண்டலம், மலைமண்டலம் மற்றும் வடகிழக்கு மண்டலத்தில், வேளாண் மண்டலக் குழு கூட்டம் நடத்தப்பட்டது. நடப்பாண்டில் வேளாண் மண்டலக் குழுக்கள் தொடர்ந்து செயல்படும்.

## 1.15. ஏரிகளிலும், குளங்களிலும் படிந்திருக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் பயன்படுத்தி மண் வளத்தை உயர்த்துவதற்கான விழிப்புணர்வு

“ஆற்று வண்டல் தேற்றும் பயிரை” என்ற கூற்றிற்கேற்ப. கடந்த 2021-22 ஆம் ஆண்டு முதல் மண்வளத்தை மேம்படுத்தவும், நீர் நிலைகளின் இயல்பான கொள்ளளவைத் தக்கவைக்கவும் ஏரி, குளங்களில் படிந்திருக்கும்

வண்டல் மண்ணை விவசாய நிலங்களில் பயன்படுத்த தமிழ்நாடு அரசு விவசாயிகளை ஊக்குவித்து வருகிறது. இத்திட்டம், நீர்வள ஆதாரத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, தொழில் துறை, வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்-பட்டு வருகிறது.

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் 15.86 இலட்சம் கனமீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டு 12,895 விவசாயிகள் பயனடைந்தனர்.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும், விவசாயிகள் அதிக அளவில் பயன்பெறும் வகையில், கால தாமதமின்றி இப்பணியினை சிறப்பாக மேற்கொள்ளும் மாவட்ட ஆட்சியர்களுக்கு விருது வழங்கப்படும்.

### 1.16. விவசாயிகளுக்கான இலவச மும்முனை மின்சாரத் திட்டம்

தமிழ்நாடு அரசு, 1990 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி வருகிறது. கடந்த 2021-22 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் மின் இணைப்பு மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 50,000 மின் இணைப்பையும் சேர்த்து, தற்போது வரை 23.37 இலட்சம் இலவச மின் இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2022-2023 ஆம் ஆண்டு வரை இலவச மின்சாரம் வழங்க ரூ.7,857.76 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.17. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

ஒற்றைப்பயிர் சாகுபடி முறையைத் தவிர்த்திடவும் நீர்ப்பாசன மேலாண்மை,

காலநிலை மாற்றத்திற்கு உகந்த இறவைப்பாசன வேளாண்மை ஆகியவற்றின் மூலம் பயிர் உற்பத்தித் திறனைப் பெருக்குதல் மற்றும் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக, தெரிவு செய்யப்பட்ட 66 துணையாற்றுப் படுகைகளில், 2017-18 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு உலக வங்கி நிதியுதவியுடன் ரூ.84.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் வேளாண்மைத் துறையால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் கடந்த 2022-23 ஆம் ஆண்டில் நான்கு கட்டங்களாக, தெரிவு செய்யப்பட்ட 51 துணை ஆற்றுப்படுகைகளில் பயிர் செயல்விளக்கங்கள், இயந்திரக் களையெடுப்பு, இதர பயிர்சார்ந்த இனங்களான உழவர் வயல்வெளிப் பள்ளிகள், விதை கிராமம், ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை கிராமங்கள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து

மேலாண்மை மற்றும் மாதிரி கிராமம் ஆகிய இனங்களுக்காக ரூ.14.96 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.18. வேளாண்மைத்துறை சார்ந்த விருதுகள்

விவசாயிகளுக்கு பல்வேறு விஞ்ஞான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அவற்றினை வயல்களில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் பயிர் விளைச்சல் போட்டிகளை நடத்தி தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு விருதுகளை வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது.

## அட்டவணை: 1.12 - விருதுகள் விவரம்.

| வ. எண் | விருது விவரம் | குறிப்பு | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| 1 | "திரு.சி.நாராயண சாமி நாயுடு நெல் உற்பத்தித் திறனுக்கான விருது" | செம்மை நெல் சாகுபடியில் மாநிலத்தில் அதிக உற்பத்தித்திறன் பெறுதல். | ரூ.5 இலட்சம் மற்றும் வெள்ளிப் பதக்கம். |
| 2 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது | பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாக்கும் விவசாயிகளை ஊக்குவித்தல் | முதல் பரிசு – ரூ-1 இலட்சம், இரண்டாம் பரிசு - ரூ.75,000 மூன்றாம் பரிசு – ரூ. 50,000 |
| 3 | மாநில அளவில் வேளாண்மையில் புதிய உள்ளூர் விவசாய தொழில்நுட்பம் மற்றும் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிப்புக்கான விருது | புதிய உள்ளூர் விவசாய தொழில்நுட்பம், புதிய இயந்திரங்கள் கண்டுபிடிப்பு | தலா ரூ. 1 இலட்சம் (இரண்டு விருதுகள்) |

| வ. எண் | விருது விவரம் | குறிப்பு | பரிசுத் தொகை விவரம் |
|---|---|---|---|
| 4 | **மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி** | | |
| அ) | நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி | தொழில்நுட்பங்களை பின்பற்றி அதிக உற்பத்தித்திறன் பெற்ற விவசாயிகளை ஊக்கப்படுத்துதல் | முதல் பரிசு - ரூ. 15,000/- இரண்டாம் பரிசு – ரூ. 10,000/- |
| ஆ) | சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, துவரை மற்றும் பச்சைப்பயறு | | முதல் பரிசு - ரூ10,000/- இரண்டாம் பரிசு – ரூ.5,000/- |

## 1.19. பயிர்க் காப்பீட்டுத் திட்டம்

பருவகால நிலை மாற்றங்களால் ஏற்படும் வெள்ளம், புயல், வறட்சி, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் போன்ற இயற்கை இடர்பாடுகளுக்கிடையில் வேளாண்மையை மேற்கொள்வது பெரும் சவாலாக உள்ளது. இதனால், உணவு பாதுகாப்பு மற்றும் ஊரகப்பகுதிகளில் வாழும் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதோடு, உணவு தானிய உற்பத்தியும்

குறையும் நிலை உள்ளது. விவசாயிகள் பருவகால மாற்றங்களை எதிர்கொண்டு சமாளிக்கும் அணுகுமுறையாகவும், இயற்கை இடர்பாடுகளில் இருந்து மீண்டு, வேளாண்மையை மேற்கொள்வதற்கும் பயிர் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2022-23 ஆம் ஆண்டில், தெரிவு செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனங்களால் 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 தொகுப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசை வலியுறுத்தியதைத் தொடர்ந்து, சம்பா நெற்பயிர் காப்பீடு செய்வதற்கு நீட்டிக்கப்பட்ட காலத்தில் 38,760 விவசாயிகளால் கூடுதலாக காப்பீடு செய்யப்பட்ட 71,368 ஏக்கர் பரப்பளவு உட்பட, கடந்த 2022-23 ஆம் ஆண்டில் 39.64 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டு, 18.54 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்த சாகுபடிப் பரப்பளவில் 50 சதவீதம் காப்பீடு செய்ய ஒன்றிய அரசால் இலக்கு

நிர்ணயம் செய்யப்பட்டதில் சுமார் 72 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

காப்பீட்டுக் கட்டண மானியத்தில் ஒன்றிய அரசு உச்சவரம்பை நிர்ணயித்ததால், நிதிச்சுமை பெரிதும் அதிகரித்த போதிலும், மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக 2022-23 ஆம் ஆண்டில் ரூ.2,312 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு எடுத்த பெருமுயற்சியின் விளைவாக, 2021-22 ஆம் ஆண்டிற்கு 6.71 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.783 கோடி நிதியும், 2022-23 ஆம் ஆண்டு மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்பா நெல் காப்பீடு செய்த 19,282 விவசாயிகளுக்கு விதைப்பு பொய்த்தல் இனத்தின் கீழ் ரூ.34.30 கோடி நிதியும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.20. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு

தொழில்நுட்ப அலுவலர்கள், அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள் பிரிவில், மொத்தம் 10,575 பணியாளர்களுடன் வேளாண்மைத் துறை இயங்கி வருகிறது.

**அட்டவணை: 1.13 - தொழில்நுட்ப அலுவலர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 5 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 37 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் | 132 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 424 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 1,099 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| 7 | உதவி விதை அலுவலர் | 509 |
| 8 | உதவி வேளாண்மை அலுவலர் | 2,320 |
| | **மொத்தம் தொழில்நுட்ப அலுவலர்கள்** | **4,863** |

**அட்டவணை: 1.14- அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | துணை இயக்குநர் (நிர்வாகம்) | 2 |
| 2 | ஆட்சி அலுவலர் | 34 |
| 3 | கண்காணிப்பாளர் | 185 |
| 4 | உதவியாளர் | 650 |
| 5 | இளநிலை உதவியாளர் | 389 |
| 6 | தட்டச்சர் | 366 |
| 7 | கண்காணிப்பாளர் (பிணையம்) | 149 |
| 8 | உதவியாளர் (பிணையம்) | 249 |
| 9 | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 573 |
| 10 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-1) | 1 |
| 11 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-2) | 39 |
| 12 | சுருக்குத் தட்டச்சர் (தரம்-3) | 95 |
| 13 | ஓட்டுநர் | 292 |
| 14 | ஆய்வக உதவியாளர் | 143 |
| 15 | பதிவறை எழுத்தர் | 157 |
| 16 | அலுவலக உதவியாளர் | 586 |
| 17 | காவலாள் | 1,133 |
| 18 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 19 | இதர பணியாளர்கள் | 667 |
| | **மொத்தம் தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்** | **5,712** |

## 2. சர்க்கரைத்துறை

வயல்களில் சங்ககாலம் தொட்டே நெல்லும் கரும்பும் ஒருசேர சாகுபடி செய்யப்பட்டது என்பதை

"**கழனிச் சென்நெல் கரும்பு சூழ் மருங்கு**"

என்று சிலப்பதிகாரம் (112) கூறுகிறது.

"**பொன்கழியாலைப் புகையொடு பரந்து**
**மன்குல் வானத்து மலையிற் றோன்றும்**"

- (சிலப்பதிகாரம் 151-152)

சர்க்கரை ஆலைகளில், கரும்புப்பாகினை காய்ச்சுவதனால் எழும் புகை, அருகிலுள்ள நெற்போரினை மேகம்போல் சூழ்ந்து மலைபோல் காட்சியளித்தது என்று தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள், சங்க காலத்திலேயே இருந்தது குறித்தும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்க்கரைத்துறை 1969-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சர்க்கரைத்துறையின் கீழ்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் லிமிடெட் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன. சர்க்கரைத்துறையின் மூலம் புதிய சர்க்கரை ஆலைகள் அமைத்தல், ஏற்கனவே இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கம், கரும்பு வளர்ச்சி, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு, கூட்டுறவு செயல்பாடுகளை கண்காணித்தல், கரும்பு பகுதிகளை சர்க்கரை ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்தல் போன்ற பணிகளுடன் கரும்பு உற்பத்தித்திறனை அதிகப்படுத்தவும், சாகுபடி செலவினங்களை குறைக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு, தொழில்துறையின் கீழ் இயங்கிவந்த சர்க்கரைத் துறையினை முழுமையாக ஜனவரி 2022 முதல் வேளாண்மை -

உழவர் நலத்துறையின் கீழ் செயல்பாட்டிற்கு கொண்டுவந்தது.

தமிழ்நாட்டில் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளில், இரண்டாவது முக்கிய இடத்தை சர்க்கரைத் தொழில் வகிக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு முக்கிய மூலப்பொருளாக விளங்குவதுடன், ஒரு முக்கிய வணிகப்பயிராகவும் திகழ்கிறது. கரும்பு சாகுபடி மற்றும் சர்க்கரை ஆலைகளினால், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து கிராமப்புற மக்களின் சமூக-பொருளாதார நிலை மேம்படுவதுடன், வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுவதால் மாநிலத்தின் பொருளாதாரமும் உயர்கிறது.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, இரண்டு பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றுள் நடப்பு 2022-23 அரவைப்பருவத்தில் 13 கூட்டுறவு, இரண்டு பொதுத்துறை, 15 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றது.

## 2.1. கரும்பு சாகுபடி

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் 2021-22ஆம் ஆண்டின் தரவுகளின் படி, தமிழ்நாட்டில் சராசரியாக 1.48 இலட்சம் எக்டர் பரப்பளவில் எக்டருக்கு 109 மெட்ரிக் டன் சராசரி மகசூலுடன் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கரும்பில் 65 முதல் 75 சதவிகிதம் சர்க்கரை ஆலைகளுக்கு மூலப்பொருளாக பயன்படுகிறது.

**அட்டவணை**:2.1- **கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்படும் முதல் பத்து மாவட்டங்கள்**

| வ. எண் | மாவட்டம் | கரும்பு சாகுபடி பரப்பு (எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) | உற்பத்தித் திறன் (மெட்ரிக் டன்/எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | 24,747 | 26.96 | 109 |
| 2 | ஈரோடு | 18,124 | 22.78 | 126 |
| 3 | திருவண்ணாமலை | 17,137 | 17.31 | 101 |
| 4 | கடலூர் | 15,406 | 16.97 | 110 |
| 5 | விழுப்புரம் | 13,196 | 13.80 | 105 |


| வ. எண் | மாவட்டம் | கரும்பு சாகுபடி பரப்பு (எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்) | உற்பத்தித் திறன் (மெட்ரிக் டன்/எக்டர்) |
|---|---|---|---|---|
| 6 | நாமக்கல் | 10,072 | 13.72 | 136 |
| 7 | சேலம் | 5,325 | 5.18 | 97 |
| 8 | அரியலூர் | 4,416 | 4.23 | 96 |
| 9 | திருவள்ளூர் | 4,004 | 4.42 | 110 |
| 10 | திருப்பூர் | 3,484 | 4.09 | 117 |

*(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு)*

### 2.1.1. சர்க்கரை ஆலைகளுக்கான கரும்பு சாகுபடி பரப்பு

தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகளுக்காக சாகுபடி செய்யப்படும் கரும்புப் பரப்பு, 2020-21 அரவைப் பருவத்தில் 95,000 எக்டரிலிருந்து, 2022-23 அரவைப் பருவத்தில் 1,50,000 எக்டராக உயர்ந்துள்ளது. குறிப்பாக கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 37,000 எக்டரிலிருந்து 55,000 எக்டராக உயர்ந்துள்ளது.

**படம்: 2.1- கடந்த நான்கு நடவுப் பருவங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு பதிவு விவரம்**





**நடவுப் பருவம்**

### 2.1.2 கரும்பு இரகங்கள்

தமிழ்நாட்டில், உயர்விளைச்சல், உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட கோ. 86032 கரும்பு இரகம் 45 சதவிகித பரப்பளவிலும், கோ.உ 09356 (25%), கோ. 11015 (15%), கோ.0212 (5%), பிஜ 1110 (5%) மற்றும் இதர இரகங்கள் ஐந்து சதவிகித பரப்பிலும் சாகுபடி செய்யப்படுகின்றன.

மேலும், கோ. 11015, கோ.க 13339, கோ.கு 6, கோ.கு 7, கோ. 18009 (புன்னகை) மற்றும் புத்தாக்கம் செய்யப்பட்ட கோ. 86032 போன்ற புதிய கரும்பு இரகங்களை கரும்பு விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்திட, கூட்டுறவு, பொது மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் நாற்றங்கால் திட்டம் மூலமாக விதைப்பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

**படம்: 2.2-தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் கரும்பு இரகங்கள்**



### 2.1.3. கரும்பு விலை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை


தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளில் குறைந்து வந்த கரும்பு சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன், கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசு 9.5 சதவிகித சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்புக்கு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாய விலைக்கு (Fair and Remunerative Price) மேல் கூடுதலாக ஊக்கத்தொகை வழங்கிவருகிறது.

2020-21 அரவைப்பருவத்திற்கு இடைக்கால உற்பத்தி ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையுடன் சேர்த்து டன் ஒன்றிற்கு ரூ.192.50/- கூடுதலாக வழங்கியும், 2021-22 அரவைப்பருவத்திற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.195/- வழங்கியும், விவசாயிகளுக்கு கரும்பு டன் ஒன்றிற்கு

முறையே ரூ.2,900/- மற்றும் ரூ.2,950/- என்று உயர்த்தி வழங்கப்பட்டது.

2023-24 வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், 2022-23 அரவைப் பருவத்திற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக கடந்த ஆண்டைப்போலவே டன் ஒன்றிற்கு ரூ.195/- வழங்க, ரூ.253 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கரும்பு விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்பிற்கு ரூ.3,016.25/- என உயர்த்தி வழங்கப்பட உள்ளது, இதன்மூலம் சுமார் 1.50 இலட்சம் விவசாயிகள் பயன்பெறுவர்.

## படம்: 2.3- தமிழ்நாட்டில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கரும்பு விலை மற்றும் ஊக்கத்தொகை (ரூபாய்)




அரவைப்பருவம்

### 2.1.4. கரும்பு சாகுபடி மேம்பாட்டுத்திட்டம்

#### 2.1.4.1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (NADP)

கரும்பு உற்பத்தி, உற்பத்தித் திறன், சர்க்கரைக் கட்டுமானத்தினை உயர்த்துதல் மற்றும் சாகுபடி செலவினை குறைத்திடும்

நோக்குடன், கரும்பு விவசாயிகளுக்கு வல்லுநர் விதைக் கரும்பு, திசு வளர்ப்பு நாற்றுக்கள், பருசீவல் நாற்றுக்கள், ஒருபரு விதைக் கரணைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டம் 2023-24ஆம் ஆண்டில் ரூ.6.88 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

### 2.1.4.2. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் (KAVIADP)

கிராம ஊராட்சிகளில் ஒட்டுமொத்த வளர்ச்சியினை அடைந்திடவும், கரும்பு உற்பத்தி , உற்பத்தித் திறன், சர்க்கரைக் கட்டுமானத்தினை உயர்த்துதல் மற்றும் சாகுபடி செலவினை குறைத்திடும் நோக்குடன், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்ட கிராமங்களில் தரமான பருசீவல்

நாற்றுக்கள், ஒருபரு விதைக் கரணைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டம் 2023-24ஆம் ஆண்டில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 2.1.5. திசு வளர்ப்பு நாற்று ஆய்வகம் (Tissue Culture Laboratory)

இனக்கலப்பற்ற, உயர்விளைச்சல், உயர் சர்க்கரை கட்டுமானம் கொண்ட, பூச்சி, நோய் தாக்குதலற்ற விதைக்கரும்புகளை உற்பத்தி செய்யும் நோக்குடன், ஆண்டுக்கு 1.50 இலட்சம் திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தித் திறன் கொண்ட, கரும்பு திசு வளர்ப்புக்கூடம் கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2021ஆம் ஆண்டுமுதல் இயங்கிவருகிறது. இந்த ஆய்வுக் கூடத்தில் தரமான திசுவளர்ப்பு நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**அட்டவணை: 2.2 - திசுவளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்**

| நடவுப்பருவம் | உற்பத்தி செய்யப்பட்டவை (எண்ணிக்கை) | வழங்கப்பட்டவை (எண்ணிக்கை) |
|---|---|---|
| 2021-22 | 1,19,550 | 1,19,550 |
| 2022-23 | 1,05,000 | 1,05,000 |

2023-24 நடவுப்பருவத்தில் 1.20 இலட்சம் திசுவளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.1.6. நுண்ணீர்ப் பாசனம் (Micro Irrigation)

கரும்பு, அதிக நீர்த்தேவையுள்ள பயிர் என்பதால், பாசன நீரை சிக்கனமாக பயன்படுத்தி, அதிக மகசூல் பெறும் வகையில் நுண்ணீர்ப்பாசன அமைப்பு நிறுவுவதற்கு, சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியமும் மற்ற

விவசாயிகளுக்கு 75% மானியமும் அரசு வழங்குகிறது.

தமிழ்நாடு அரசு, கரும்பு சாகுபடியில் நுண்ணீர்ப்பாசன பரப்பை அதிகரிக்கும் பொருட்டு, நுண்ணீர் பாசனம் அமைப்பதற்குத் தேவையான கூடுதல் உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கு, மாநில நிதியிலிருந்து ஒரு எக்டருக்கு ரூ.32,715/- லிருந்து ரூ.43,534/- வரை கூடுதல் மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. அதிக அளவில் அகலப்பார் (Wider Row) நடவுமுறையில் நுண்ணீர்ப்பாசனம் அமைத்திட விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2023-24ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

2.1.7. **கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்கல்**

கரும்பு சாகுபடிக்குத் தேவையான கூலியாட்கள் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்து கரும்பு சாகுபடி செலவு உயர்ந்து வருகிறது. கரும்பு சாகுபடி செலவினைக் குறைத்து விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் நோக்கில், நிலம் தயாரிப்பு முதல் அறுவடை வரை கரும்பு உற்பத்தியில் இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டு வரை வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் (SMAM) மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் (NADP), 71 கரும்பு அறுவடை இயந்திரங்கள் சர்க்கரை ஆலைப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர, கரும்பு சாகுபடிக்குத் தேவையான பவர் டில்லர், களை எடுக்கும் கருவி, மினி டிராக்டர், ரோட்டோவேட்டர், சோகை

தூளாக்கும் கருவி, சுழல் கலப்பை போன்ற பண்ணை இயந்திரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, உழவன் செயலியில் இ-வாடகை எனும் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 2.2. சர்க்கரை ஆலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் மேம்பாட்டுத் திட்டங்கள்

சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேலும் மேம்படுத்திட, தமிழ்நாடு அரசால் பல்வேறு மேம்பாட்டுத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.2.1 தானியங்கி கரும்பு எடைத்தளம் அமைத்தல்

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளின் கரும்பை துல்லியமாகவும் விரைவாகவும் எடையிடும் வகையில், 2022-23 ஆம் ஆண்டில் அமராவதி, செங்கல்ராயன்,

செய்யாறு, தருமபுரி, கள்ளக்குறிச்சி-1, மதுராந்தகம், எம்.ஆர்.கே, சேலம், திருத்தணி, திருப்பத்தூர், வேலூர், கள்ளக்குறிச்சி-2, சுப்பிரமணிய சிவா ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் பெரம்பலூர், அறிஞர் அண்ணா ஆகிய பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலுள்ள எடைத்தளங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கி எடைத்தளங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.2.2. சிமெண்ட் கான்கிரீட் கரும்பு தளம் (Cement Concrete Cane Yard) அமைத்தல்

சர்க்கரை ஆலைகளில் கரும்பு ஏற்றிச்செல்லும் வாகனங்கள் எளிதில் செல்ல வசதியாக, செய்யாறு, செங்கல்ராயன், மதுராந்தகம், சேலம், திருத்தணி, அறிஞர் அண்ணா, பெரம்பலூர் ஆகிய சர்க்கரை ஆலைகளில் தற்போதுள்ள கரும்பு தளங்களை (Cane Yard), சிமென்ட் கான்கிரீட் தளமாக வலுப்படுத்த 2023-24ஆம்

ஆண்டில் ரூ.2.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.2.3 சுழல் கவிழ்ப்பான்கள் (Hydraulic Tipplers) நிறுவுதல்

இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்பட்ட கரும்பினை சர்க்கரை ஆலைகளில் எளிதாக இறக்குவதற்கு ஏதுவாக, 2022-23ஆம் ஆண்டில் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சுழல் கவிழ்ப்பான் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. 2023-24ஆம் ஆண்டில், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைகளில் தலா ஒரு சுழல் கவிழ்ப்பான் வீதம் மொத்தம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது.

### 2.2.4. ஆய்வக கூடங்கள் நவீனமயமாக்கல் (Modernization of Laboratories)

கூட்டுறவு மற்றும் பொதுத்துறையின் கீழுள்ள 15 சர்க்கரை ஆலைகளில் உள்ள ஆய்வக

கூடங்களில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் கருவிகளை நவீன தொழில்நுட்பம் கொண்ட உபகரணங்களாக தரம் உயர்த்தி நிறுவிடும் பணிகள் ரூ.3 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம், ஆலைகளின் செயல்பாடுகள் குறித்த தரவுகளை துல்லியமாக பெற இயலும்.

### 2.2.5 சர்க்கரை ஆலை கழிவு மண்ணிலிருந்து ஊட்டமேற்றிய இயற்கை உர உற்பத்தி

2023-24 வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, விவசாயிகளுக்கு தரமான ஊட்டமேற்றிய இயற்கை உரம் கிடைக்கச் செய்யும் வகையிலும், இரசாயன உரப்-பயன்பாட்டினை குறைத்து மண்ணின் வளத்தை அதிகரிக்கும் நோக்குடனும், சர்க்கரை ஆலைகளின் கழிவு மண்ணை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, வருவாய் ஈட்டிடும் வகையிலும், 2023-24 ஆம் ஆண்டில் சேலம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை

ஆலைகளில் தலா ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மதிப்புக்கூட்டப்பட்ட இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றிற்கு சுமார் 3,000 மெட்ரிக் டன் ஊட்டமேற்றிய இயற்கை உரம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

**2.3. சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டுவரும் சீரிய முயற்சிகளின் காரணமாக, கடந்த ஆண்டுகளில் குறைந்து காணப்பட்ட கரும்பு அரவை அளவு, அரவைத்திறன், சர்க்கரை கட்டுமானம், சர்க்கரை உற்பத்தி, உப பொருட்களின் உற்பத்தி 2020-21 அரவைப்பருவம் முதல் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் கடந்த 2021-22 அரவைப்பருவத்தில் 139.16 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை


செய்யப்பட்டு, 9.10 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன் 12.67 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

2022-23 ஆம் அரவைப் பருவத்தில் 155 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டு, 14.41 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. 15.03.2023 வரை 84.36 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 9.59 சதவிகித கட்டுமானத்துடன், 8.09 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

### 2.3.1. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவை (Cane Crushing)

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த நான்கு அரவைப் பருவங்களில் கரும்பு அரவை **23.26 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 41 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.**

**படம்; 2.4 - கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு அரவை விவரம்**





அரவைப்பருவம்

**2.3.2. சர்க்கரைக் கட்டுமானம் (Sugar Recovery )**

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த நான்கு அரவைப்பருவங்களில் சர்க்கரைக் கட்டுமானம் 8.2 சதவிகிதத்திலிருந்து 9.3 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

**படம்;2.5- கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் சர்க்கரை கட்டுமானம் (%)**





**அரவைப்பருவம்**

### 2.3.3. பயன்பாட்டுத்திறன் (Capacity Utilization)

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கடந்த நான்கு அரவைப்பருவங்களில் பயன்பாட்டுத்திறன், 32 சதவிகிதத்திலிருந்து 56 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

**படம்;2.6- கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பயன்பாட்டுத்திறன்**




**அரவைப்பருவம்**

2023-24 ஆம் அரவைப் பருவத்தில் 9.60 சதவிகித சர்க்கரை கட்டுமானத்துடன், 16.32 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி இலக்குடன் 170 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3.4. இணை மின் திட்டம் (Cogeneration Project)

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் மறு சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு, ஆலைகளின் உற்பத்திச் செலவை குறைத்து, வருவாயை உயர்த்திடும் நோக்கில், மொத்தம் 183 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட 12 இணை மின் உற்பத்தித் திட்ட பணிகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) மூலம் செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது வரை ஆறு ஆலைகளில் (செங்கல்ராயன், வேலூர், செய்யாறு, அறிஞர் அண்ணா, பெரம்பலூர் மற்றும் தருமபுரி) 93 மெகா வாட் திறன் கொண்ட இணை மின் திட்ட நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு, பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது.

மீதமுள்ள ஆறு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 90 மெகா வாட் திறன் கொண்ட இணை மின் திட்ட பணிகளை விரைவில் முடித்து,

பயன்பாட்டிற்கு கொண்டு வர தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (TANGEDCO) மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டப்பணிகள் வரும் 2023-24 –ஆம் நிதி ஆண்டில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயன்பாட்டிலுள்ள ஆறு இணை மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மிகை மின்சாரம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் (TANGEDCO) கட்டமைப்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. 2020-21 ஆம் அரவை பருவத்தில் 6.32 கோடி யூனிட்டுகளும், 2021-22 ஆம் அரவை பருவத்தில் 8.52 கோடி யூனிட்டுகளும் 2022-23 ஆம் அரவை பருவத்தில், 24.03.2023 வரை 7.50 கோடி யூனிட்டுகளும் மின் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**படம்;2.7- செயல்பாட்டிலுள்ள ஆறு இணை மின் திட்டங்கள் மூலம் மின்சார ஏற்றுமதி செய்யப்பட்ட விவரங்கள்**




அரவைப்பருவம்

### 2.3.5 .எத்தனால் உற்பத்தி

அமராவதி மற்றும் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 1993-94-ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு 55 கிலோ லிட்டர் (KLPD) உற்பத்தித் திறன் கொண்ட எரிசாராய வடிப்பாலைகள் (Distilleries) நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வடிப்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் எரிசாராயத்தை மூலப்பொருளாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு 30 கிலோ லிட்டர்

(KLPD) உற்பத்தி திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் நிறுவப்பட்டு, 2007 முதல் எத்தனால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

**2.3.5.1. புதிய எத்தனால் ஆலை நிறுவுதல்**

சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை உற்பத்தி செலவைக் குறைத்து, ஆலைகளின் வருவாயை அதிகரித்திடவும், நிதி ஆதாரம் தன்னிறைவு பெறவும் கரும்புச்சாறு மற்றும் பி ஹெவி மொலாசஸ் ஆகியவற்றை மூலப்பொருளாக கொண்டு, நாள் ஒன்றுக்கு 60 கிலோலிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட எத்தனால் ஆலைகள் எம்.ஆர்.கே, கள்ளக்குறிச்சி -1 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூ.170 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும் என 2021-22-ஆம் நிதியாண்டில் அரசால் அறிவிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி -1, மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் எத்தனால்

ஆலை நிறுவிட விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) புதுதில்லியில் அமைந்துள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பிடமிருந்து பெறப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக, பொது மக்கள் கருத்து கேட்கும் கூட்டம் (Public hearing) நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்கப்பெற்ற பின், ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் மே 2023க்குள் முடிக்கப்பெற்று, எத்தனால் ஆலையை நிறுவிடும் பணிகளை, 2024-ஆம் வருடம் இறுதிக்குள் முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.4. தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (TASCO)

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், 1974 ஆம் ஆண்டில், நிறுமச் சட்டம் (1956)ன் கீழ், ஓர் அரசு நிறுவனமாக நிறுவப்பட்டது. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் உள்ள அறிஞர் அண்ணா

சர்க்கரை ஆலையும் பெரம்பலூர் மாவட்டம் எறையூரில் பெரம்பலூர் சர்க்கரை ஆலையும் இயங்கி வருகின்றன.

**அட்டவணை**: 2.3. - **தமிழ்நாடு சர்க்கரைக் கழக ஆலைகளின் செயல்பாடுகள்**

| வ. எண் | பொருள் | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, தஞ்சாவூர் மாவட்டம் | | பெரம்பலூர் சர்க்கரை ஆலை பெரம்பலூர் மாவட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | 2021-22 | 2022-23 (24.03.2023 வரை) | 2021-22 | 2022-23 (24.03.2023 வரை) |
| 1 | கரும்புப் பதிவு (எக்டர்) | 2,641 | 1,693 | 4,845 | 292 |
| 2 | கரும்பு அரவை( மெ. டன்) | 2,00,751 | 2,32,858 | 3,14,011 | 2,25,611 |
| 3 | சர்க்கரைக் கட்டுமானம் (%) | 9.22 | 9.12 | 9.48 | 9.84 |
| 4 | சர்க்கரை உற்பத்தி (மெ.டன்) | 18,499 | 20,362 | 29,792 | 21,497 |
| 5 | பயன்பாட்டுத் திறன் (%) | 46.68 | 54.15 | 60.85 | 43.72 |

## 2.5 தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் (TNCSF)

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் 11.11.1961 அன்று பதிவு செய்யப்பட்டு, 31.05.1962-ல் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் இரண்டு பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை உறுப்பினர்களாக கொண்டு இயங்கி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் இதனுடன் இணைக்கப்பெற்ற உறுப்பினர் ஆலைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், மையப்படுத்தப்பட்ட கொள்முதல், சர்க்கரை மற்றும் உபபொருட்கள் விற்பனை, தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணையம் மற்றும் இதர நிறுவனங்களில் உறுப்பினர் ஆலைகளின் பிரதிநிதியாக செயல்படுதல், ஆலைகளின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு அவ்வப்போது பயிற்சி

மற்றும் கருத்தரங்கங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

**2.5.1 உயிரியல் ஆய்வு மையம்** (Main Bio-Control Research Laboratory - MBRL)

கரும்பில் இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டினை குறைத்து, குறைந்த சாகுபடி செலவுடன் சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்து கரும்பு விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கத்துடன், செங்கல்பட்டில் 1982-ஆம் ஆண்டு முதல் **உயிரியல் ஆய்வு மையம்** இயங்கி வருகிறது.

இந்த ஆய்வுக்கூடத்தில் அசிட்டோபாக்டர், பாஸ்போபாக்டீரியா, ஆர்பஸ்குலர் மைகோரைசா ஆகிய உயிர் உரங்களும், டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம், பேசிலஸ் துரிஞ்ஜியன்சிஸ், போன்ற உயிரி பூச்சிக்கொல்லிகளும் உற்பத்தி செய்யப்பட்டு,

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைப்பகுதிகளில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

உயிரியல் ஆய்வு மையம் 2021-22-ஆம் ஆண்டில் ரூ.1.10 கோடியும் 2022-23-ஆம் ஆண்டில் (20.03.2023 வரை) ரூ.1.29 கோடியும் நிகர வருவாய் ஈட்டியுள்ளது.

### 2.5.2. சர்க்கரை மற்றும் உபபொருட்கள் விற்பனை

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை மற்றும் இதர உப பொருட்கள் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தால் விற்பனை செய்யப்படுகிறது.

**அட்டவணை**:2.4. 2022-23-ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட சர்க்கரை மற்றும் உப பொருட்கள் (15.03.2023 வரை)

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருட்கள்</th><th>விற்பனை செய்யப்பட்ட அளவு</th><th>மதிப்பு (ரூபாய். கோடியில்)</th></tr>
<tr><td>1</td><td>சர்க்கரை (Sugar) (இலட்சம் மெட்ரிக் டன்)</td><td>3.86</td><td>1,385.62</td></tr>
<tr><td>2</td><td>கரும்புச்சக்கை – (Bagasse) (மெட்ரிக் டன்)</td><td>62,375</td><td>15.17</td></tr>
<tr><td>3</td><td>கரும்புக் கசண்டு – (Molasses) (மெட்ரிக் டன்)</td><td>1,35,752</td><td>113.18</td></tr>
<tr><td>4</td><td>எரிசாராயம்- (Alcohol) (இலட்சம் லிட்டர்)</td><td>49.65</td><td>23.67</td></tr>
<tr><td>5</td><td>உயிர் இடுபொருட்கள்- (Bio Inputs) (மெட்ரிக் டன்)</td><td>8.64</td><td rowspan="2">2.04</td></tr>
<tr><td>6</td><td>உயிர் இடுபொருட்கள்- (Bio Inputs) (லிட்டர்)</td><td>94,027</td></tr>
</table>

## 3. தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை

தமிழ்நாடு இந்தியாவில் தோட்டக்கலை சாகுபடியில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. தேசிய அளவில் தோட்டக்கலை சாகுபடி உற்பத்தியில் 6.09 சதவீதத்தையும், பரப்பளவில் 5.47 சதவீதத்தையும் கொண்டுள்ளது. ஆண்டு முழுவதும் பல்வேறு வகையான தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏற்ற வகையிலான வேளாண் காலநிலையையும், புவியியல் நிலையையும் கொண்ட மாநிலமாக விளக்குகின்றது.

தோட்டக்கலைப் பயிர்களை மாற்றுப் பயிராக சாகுபடி செய்வதன் மூலம் சிறு குறு விவசாயிகளும், அதிக வருமானம் பெறுகின்றனர். தோட்டக்கலை விளைபொருட்களை வேளாண் சார்ந்த தொழில்களுக்கு மூலப்பொருட்களாக பயன்படுத்துவதாலும் மதிப்புக் கூட்டுப்

பொருட்களாக மாற்றுவதாலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படுவதோடு ஏற்றுமதிக்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது.

எனவே, தோட்டக்கலை-மலைப்பயிர்கள் துறை, விவசாயிகளின் சீரான உயர்வுக்கு உற்பத்தியினை அதிகரிப்பதுடன், மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், விளைபொருட்கள் குறுகிய கால சேமிப்புத் திறனைக் கொண்டுள்ளதால் அவற்றினை சேமிப்பதற்கு முறையான திட்டமிடுவதற்கும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2023-24 ஆம் ஆண்டில், தொகுப்பு முறையில் பயிர் சாகுபடி, பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடியை பரவலாக்குதல், நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்ட, அதிவேகமாகக் குறைந்து வரும் குறு வட்டங்களில் நுண்ணீர்ப் பாசனத்தை

தீவிரப்படுத்துதல் ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**3.1: தமிழ் நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி, தேசிய அளவிலான பங்களிப்பு:**


தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவைதாளிதப் பயிர்கள், மருத்துவப் பயிர்கள், நறுமணப் பயிர்கள், மலர்கள் ஆகியவை 15.88 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்படுகின்றன. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 231 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் 2021-22 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 3.8 சதவீதமும், உற்பத்தி 11.85 சதவீதமும் முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிகரித்துள்ளன.

## அட்டவணை 3.1: தோட்டக்கலைப் பயிர்கள் - சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன்

| வ. எண் | தோட்டக்கலைப் பயிர் வகை | 2021-22 (இறுதி மதிப்பீடு) | | | 2022-23 (முதல் முன் மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **சாகுபடி பரப்பு** (இலட்சம் எக்டர்) | **உற்பத்தி** (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | **உற்பத்தி திறன்** (மெ. டன்கள் / எக்டர்) | **சாகுபடி பரப்பு** (இலட்சம் எக்டர்) | **உற்பத்தி** (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | **உற்பத்தி திறன்** (மெ. டன்கள் / எக்டர்) |
| 1 | பழங்கள் | 3.26 | 70.51 | 21.62 | 3.36 | 73.85 | 21.96 |
| 2 | காய்கறிகள் | 2.80 | 61.77 | 22.10 | 2.84 | 63.11 | 22.23 |
| 3 | தோட்டப்பயிர்கள்* | 7.99 | 87.13 | 10.90 | 8.31 | 92.18 | 11.09 |
| 4 | சுவை தாளித பயிர்கள் | 1.21 | 3.82 | 3.15 | 1.22 | 3.98 | 3.27 |
| 5 | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | 0.16 | 1.72 | 10.45 | 0.18 | 1.70 | 9.71 |
| 6 | மலர்கள் | 0.46 | 5.91 | 12.95 | 0.48 | 6.16 | 12.74 |
| **மொத்தம்** | | **15.88** | **230.86** | **14.54** | **16.39** | **240.98** | **14.70** |

***மரவள்ளி உட்பட**


## வரைபடம் 3.1: தமிழ்நாடு - தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி பரப்பு - 2021-22




## அட்டவணை 3.2: தமிழ்நாடு - தோட்டக்கலை பயிர் சாகுபடியில் தேசிய அளவிலான நிலை

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. கிராம்பு<br>2. புளி<br>3. மல்லிகை (குண்டுமல்லி) | 1. கொக்கோ<br>2. செவ்வந்தி<br>3. சம்பங்கி | 1. வாழை<br>2. நெல்லி<br>3. தென்னை<br>4. மிளகு |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2020-21, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை - உழவர்நலத்துறை, புது தில்லி | | |


**வரைபடம் 3.2: தமிழ்நாடு - தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி - 2021- 22**




**அட்டவணை3.3: தமிழ்நாடு - தோட்டக்கலை பயிர் உற்பத்தியில் தேசிய அளவிலான நிலை**

| முதலிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|
| 1. கிராம்பு<br>2. புளி<br>3. மல்லிகை (குண்டுமல்லி)<br>4. சம்பங்கி | 1. தென்னை | 1. நெல்லி<br>2. தர்பூசணி<br>3. செவ்வந்தி<br>4. பாகற்காய் |
| **ஆதாரம்**: இறுதி மதிப்பீடு 2020-21, தோட்டக்கலை புள்ளியியல் பிரிவு, வேளாண்மை - உழவர்நலத்துறை, புது தில்லி | | |

## 3.1.1: பழப்பயிர்கள்




**அட்டவணை 3.4: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**


| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மா | 1,47,983 | கிருஷ்ணகிரி (32,450), தருமபுரி (15,983), திண்டுக்கல் (15,801), திருவள்ளூர் (11,515), தேனி (9,471). |
| 2 | வாழை | 1,02,188 | ஈரோடு (17,609), தூத்துக்குடி (8,366), கோயம்புத்தூர் (7,731), தேனி (6,403), திருநெல்வேலி (5,768). |

| வ. எண் | பழங்கள் | பரப்பு (எக்டர்) | பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 3 | தர்பூசணி | 15,476 | செங்கல்பட்டு (7,393), விழுப்புரம் (2,303), திருவள்ளூர் (1,719), சேலம் (768), திருவண்ணாமலை (553). |
| 4 | கொய்யா | 14,436 | திண்டுக்கல் (2,201), மதுரை (1,688), விருதுநகர் (1,382), கடலூர் (1,208), விழுப்புரம் (1,100). |
| 5 | எலுமிச்சை | 13,770 | திண்டுக்கல் (3,601), தென்காசி (3,031), திருச்சிராப்பள்ளி (1,024), தேனி (801), விருதுநகர் (757). |
| 6 | இதர பழங்கள் | 32,206 | திண்டுக்கல் (6,233), தேனி (2,678), தென்காசி (2,159), நாமக்கல் (1,824), சேலம் (1,748). |
| **பழப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 3,26,059 எக்டர்** | | | |

2023-24 ஆம் ஆண்டு, பண்ருட்டி பலாவிற்கு ஒருங்கிணைந்த தொகுப்பு, பகுதிக்கேற்ற புதிய இரகங்கள் அறிமுகம் ஆகிய செயல்பாடுகள் கடலூர், விழுப்புரம், திண்டுக்கல், சேலம், கன்னியாகுமரி, தேனி உள்ளிட்ட 21 மாவட்டங்களில் மேற்கொள்ள பலா இயக்கம் செயல்படுத்தப்படும். சந்தை வாய்ப்புகள் அதிகரித்து வரும் சிறப்புப் பழப்பயிர்களான டிராகன் பழம், வெண்ணெய் பழம், பேரீச்சை,

மங்குஸ்தான், அத்தி, ஆலிவ் போன்ற பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## 3.1.2: காய்கறிகள்



**அட்டவணை.3.5: காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | சின்ன வெங்காயம் | 55,123 | பெரம்பலூர் (8,258), திருச்சிராப்பள்ளி (6,774), தூத்துக்குடி (6,662), நாமக்கல் (5,320), திண்டுக்கல் (4,598). |
| 2 | தக்காளி | 41,545 | தருமபுரி (12,137), கிருஷ்ணகிரி (11,501), சேலம் (4,144), திண்டுக்கல் (2,290), திருப்பூர் (2,174). |
| 3 | கத்தரி | 24,015 | தருமபுரி (3,880), சேலம் (2,933), திருவண்ணாமலை (2,290), கிருஷ்ணகிரி (1,935), ராணிப்பேட்டை (883). |
| 4 | முருங்கை | 21,501 | திண்டுக்கல் (5,623), கரூர் (3,080), தேனி (2,936), திருப்பூர் (2,090), தூத்துக்குடி (1,842). |


| வ. எண் | காய்கறிகள் | பரப்பு (எக்டர்) | காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 5 | வெண்டை | 18,967 | தருமபுரி (3,654), சேலம் (2,851), திருவண்ணாமலை (2,025), இராணிப்பேட்டை (787), திருப்பத்தூர் (775). |
| 6 | இதர காய்கறிகள் | 1,18,397 | கிருஷ்ணகிரி (22,939), திண்டுக்கல் (9,200), சேலம் (8,920), தருமபுரி (8,772), நீலகிரி (8,202). |
| **காய்கறிகள் மொத்த சாகுபடி பரப்பு = 2,79,548 எக்டர்** | | | |

தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் சந்தை வரத்தினை நிலைப்படுத்தவும், விவசாயிகள் சீரான வருவாய் பெறும் வகையிலும், இவ்விரு பயிர்களின் உற்பத்தி, சேமிப்பு, சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளைச் சீர்செய்ய, 2023-24 ஆம் ஆண்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருப்பூர், அரியலூர், மதுரை, கரூர் மாவட்டங்களை

உள்ளடக்கிய முருங்கை தொகுப்பு இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும்.

### 3.1.3: தோட்டப்பயிர்கள் (Plantation Crops)




**அட்டவணை 3.6: தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தென்னை | 4,46,153 | கோவை (89,926), திருப்பூர் (68,277), தஞ்சாவூர் (40,977), திண்டுக்கல் (29,346), கன்னியாகுமரி (24,830). |
| 2 | முந்திரி | 86,117 | அரியலூர் (30,584), கடலூர் (29,489), புதுக்கோட்டை (5,788), விழுப்புரம் (3,260), தேனி (3,211). |
| 3 | தேயிலை | 69,588 | நீலகிரி (55,754), கோவை (11,191), தேனி (1,621), திருநெல்வேலி (804), கன்னியாகுமரி (214). |
| 4 | காப்பி | 33,108 | திண்டுக்கல் (10,960), நீலகிரி (7,357), சேலம் (7,029), தேனி (3,106), கோயம்புத்தூர் (2,248). |

| வ. எண் | தோட்டப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 5 | ரப்பர் | 28,433 | கன்னியாகுமரி (28,332), நீலகிரி (55), தென்காசி (42). |
| 6 | இதர தோட்டப்பயிர்கள் | 1,35,899 | நாமக்கல் (21,076), கள்ளக்குறிச்சி (16,065), சேலம் (14,325), தருமபுரி (13,996), ஈரோடு (10,146). |
| **தோட்டப்பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 7,99,298 எக்டர்** | | | |

## 3.1.4 : சுவை தாளித பயிர்கள்



**அட்டவணை 3.7: சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | சுவை தாளித பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளித & மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மிளகாய் | 53,933 | தூத்துக்குடி (15,039), இராமநாதபுரம் (15,036), சிவகங்கை (3,619), சேலம் (1,923), திருவண்ணாமலை (1,907) |
| 2 | மஞ்சள் | 25,559 | தருமபுரி (8,618), ஈரோடு (4,754), சேலம் (4,172), கள்ளக்குறிச்சி (2,420), நாமக்கல் (1,504). |
| 3 | புளி | 14,409 | திண்டுக்கல் (3,208), தேனி (1,557), தருமபுரி (1,294), மதுரை (1,112), கிருஷ்ணகிரி (993). |
| 4 | கொத்தமல்லி | 7,523 | தூத்துக்குடி (2,354), விருதுநகர் (1,731), இராமநாதபுரம் (1,711), கிருஷ்ணகிரி (882), திருப்பூர் (192). |
| 5 | மிளகு | 6,980 | நாமக்கல் (2,344), சேலம் (1,411), திண்டுக்கல் (1,293), நீலகிரி (986), கன்னியாகுமரி (322). |


| வ. எண் | சுவை தாளித பயிர்கள் | பரப்பு (எக்டர்) | சுவை தாளித & மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர சுவை தாளித பயிர்கள் | 12,815 | கோவை (2,345), நீலகிரி (1,952), தேனி (1,614), திண்டுக்கல் (1,395), கிருஷ்ணகிரி (936). |
| **சுவை தாளித பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 1,21,219 எக்டர்** | | | |

மிளகாய்க்கான சந்தை வாய்ப்புகளை கருத்தில் கொண்டு, மிளகாய் உற்பத்தி, மதிப்புக் கூட்டல், சேமிப்புக் கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்திட இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களை ஒருங்கிணைத்து மிளகாய் மண்டலம் இவ்வாண்டு முதல் செயல்படும்.

கறிவேப்பிலையின் பயன்களை கடல் கடந்தும் மக்கள் பெற்றுப் பயன்பெறவும், உற்பத்தி, மதிப்புக் கூட்டல், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்தவும், விவசாயிகள் உயர் வருவாய் பெற்றுப் பயன்பெறவும், கோயம்புத்தூர்

மாவட்டத்தில் கறிவேப்பிலை தொகுப்பு உருவாக்கப்படும்.

### 3.1.5: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள்




**அட்டவணை 3.8: மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | கண்வலிக் கிழங்கு | 6,377 | திண்டுக்கல் (3,383), திருப்பூர் (2,269), கரூர் (618), திருச்சிராப்பள்ளி (37), நாமக்கல் (18). |
| 2 | மருந்துக் கூர்க்கன் | 3,305 | திருவண்ணாமலை (1,558), கள்ளக்குறிச்சி (766), சேலம் (483), கடலூர் (302), நாமக்கல் (90). |
| 3 | வேம்பு | 2,949 | விருதுநகர் (657), தூத்துக்குடி (364), திருநெல்வேலி (252), மதுரை (238), நாமக்கல் (176). |
| 4 | பால்மரோசா புல் | 1,652 | தருமபுரி (1,230), திருவண்ணாமலை (393), கள்ளக்குறிச்சி (21). |
| 5 | எலுமிச்சைபுல் | 826 | திருவண்ணாமலை (804), தேனி (9). |

| வ. எண் | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | பரப்பு (எக்டர்) | மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 6 | இதர பயிர்கள் | 1,324 | விழுப்புரம் (365), சேலம் (290), மதுரை (123), கடலூர் (121), விருதுநகர் (93). |
| **மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 16,433 எக்டர்** | | | |

## 3.1.6 : மலர்கள்



**அட்டவணை 3. 9: மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள் (2021-22)**

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | மல்லிகை (குண்டுமல்லி) | 12,896 | மதுரை (1,614), தருமபுரி (1,415), ஈரோடு (1,138), திருவள்ளூர் (1,119), கிருஷ்ணகிரி (897). |
| 2 | சாமந்தி | 9,218 | கிருஷ்ணகிரி (3,531), தருமபுரி (2,346), சேலம் (1,622), திருவண்ணாமலை (902), கடலூர் (110). |
| 3 | சம்பங்கி | 7,102 | தருமபுரி (2,778), திருவண்ணாமலை (1,552), ஈரோடு (416), திண்டுக்கல் (300), திருவள்ளூர் (227) |
| 4 | செண்டுமல்லி | 3,534 | கிருஷ்ணகிரி (1,953), திருவண்ணாமலை (422), தருமபுரி (290), புதுக்கோட்டை (126), கடலூர் (110). |

| வ. எண் | மலர்கள் | பரப்பு (எக்டர்) | மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் |
|---|---|---|---|
| 5 | ரோஜா | 3,379 | கிருஷ்ணகிரி (1,748), தருமபுரி (294), திருவண்ணாமலை (276), நாமக்கல் (166), சேலம் (155). |
| 6 | இதர மல்லிகை | 4,219 | திருவண்ணாமலை (742), திண்டுக்கல் (646), தருமபுரி (481), கோவை (378), விருதுநகர் (350). |
| 7 | இதர மலர்கள் | 5,259 | திருவண்ணாமலை (1,252), சேலம் (965), தருமபுரி (912), திண்டுக்கல் (540), நாமக்கல் (532). |
| **மலர்கள் மொத்த சாகுபடி பரப்பு = 45,607 எக்டர்** | | | |

## 3.2: ஒன்றிய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 3.2.1: நுண்ணீர்ப் பாசனத் திட்டம் (MI)

நிலையான வேளாண்மைக்கு நீர்ப் பாசனத்தை உறுதி செய்யும் நோக்கில், இருக்கும் நீரினை சிக்கனமாக பயன்படுத்தி உற்பத்தியினை

அதிகரிக்க நுண்ணீர் பாசனத் திட்டம் 2007-08 முதல் செயல்படுத்தப்படுகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 70,856.19 எக்டர் பரப்பில் ரூ.550.68 கோடி நிதி செலவில் 70,304 விவசாயிகளுக்கு நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2023-24 ஆம் ஆண்டு முதல், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படும் துளி நீரில் அதிகப் பயிர் (Per Drop More Crop) என்ற உபத்திட்டத்தின் வாயிலாக நுண்ணீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டு ரூ.744.48 கோடி நிதியில், 89,000 எக்டர் பரப்பளவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் அதிகம் உறிஞ்சப்பட்ட, அதிவேகமாகக் குறைந்துவரும் குறு வட்டங்களில் (critical and over exploited firkas) சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து ரூ.450 கோடி

நிதியில், 53,400 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் தீவிரப்படுத்தப்படும்.

### 3.2.2: தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM)

இத்திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணை திட்டமாக 2014-15 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 114.00 கோடி ரூபாய் நிதியில் 1,10,802 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் ரூ.49.99 கோடி நிதியில், தோட்டக்கலை பயிர்களில் 25,680 எக்டரில் பரப்பு விரிவாக்கமும், 2,600 எக்டரில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்று காளான்

உற்பத்திக்கூடங்கள் ரூ.0.24 கோடி நிதியில் அமைக்கப்பட்டுள்ளன. 350 தனிநபருக்கான நீர் சேமிப்பு அமைப்பு ரூ.2.63 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட சூழல் பயிர் சாகுபடி ரூ.17.96 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ரூ.3.63 கோடி நிதியில் தோட்டக்கலை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அறுவடைக்குப் பிந்தைய இழப்பினை குறைப்பதற்காக ஒருங்கிணைந்த அறுவடை பின் செய் மேலாண்மை சார்ந்த உட்கட்டமைப்புகள் ரூ.47.40 கோடி நிதியில் உருவாக்கப்பட்டுள்ளன. ரூ.16 கோடி நிதியில் நெல்லி, மா, மிதவெப்ப மண்டல தோட்டக்கலைப் பயிர்கள், மலர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தினை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான மகத்துவ மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டில், தொகுப்பு முறையில் மல்லிகை, பலா, மிளகாய், கறிவேப்பிலை ஆகிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மேம்படுத்தப்படும். தக்காளி, வெங்காயம் சீராக கிடைக்கும் வகையில் உற்பத்தியினை உறுதி செய்திட மானியம் வழங்கப்படும். சௌ சௌ, பட்டாணி, பீன்ஸ் போன்ற குளிர்கால கொடிவகை மலைக் காய்கறிகள் அதிக அளவில் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு மானிய உதவி அளிக்கப்படும். பாதுகாக்கப்பட்ட சூழல் பயிர் சாகுபடி முறை அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக்கப்படும். இத்திட்டத்தினை ரூபாய் 164 கோடி நிதியில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.3 : தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP)

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது, வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்களின் முழுமையான வளர்ச்சியை

ஊக்குவிக்கும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.68.29 கோடி நிதியில் 6,544 எக்டரில் நெற்பயிருக்கு மாற்றாக தோட்டக்கலைப் பயிர்களை பயிரிடவும், 1,000 எக்டரில் பாரம்பரிய காய்கறிகளை மீட்டெடுக்கவும், 760 எக்டரில் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி மையம், பெங்களூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வீரிய இரகங்களை ஊக்குவிக்கவும், தோட்டக்கலைப் பயிர்களுக்கு பந்தல் போன்ற சிறப்பு கட்டமைப்பு அமைக்கவும், 1,500 எக்டரில் முந்திரி பரப்பு விரிவாக்கம் செய்வதற்கும், 41,000 எக்டரில் அங்ககப் பண்ணையம், 4,666 எக்டரில் துல்லிய பண்ணையத்திற்கும் மானியம் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2023-24 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக பழவகை செடிகள், காய்கறிகள், ஆண்டு முருங்கை, பல்லாண்டு முருங்கை, வெங்காயம், மிதவெப்ப மண்டல பயிர்களான வெண்ணெய்ப்பழம், டிராகன் பழம் ஆகியவற்றை 3,110 எக்டர் பரப்பில் பயிரிடவும், 200 எக்டர் பரப்பில் நிரந்தரப்பந்தல் அமைத்து கொடிவகை காய்கறி சாகுபடி மேற்கொள்ளவும், வாழை, தக்காளி, பீன்ஸ் போன்ற பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 2,000 எக்டரில் தற்காலிக பந்தல் அமைக்கவும், 2,000 எக்டர் பரப்பில் நிலப்போர்வையிடுதலுக்கும் ரூ.25 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

### 3.2.4: மானாவாரி பகுதி மேம்பாடு (RAD)

மானாவாரி பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணைய முறைகளை ஊக்குவிப்பதற்காக, பருவநிலை மாற்றத்தால் பயிர்

இழப்புகள் ஏற்படாமல் பாதுகாத்து, உற்பத்தியினை உறுதி செய்து, நிலையான வருவாய் ஈட்ட தோட்டக்கலைப்பயிர் சாகுபடி, கால்நடை, மீன்வளர்ப்பு, வேளாண் காடுகள் போன்றவற்றுடன் ஒருங்கிணைத்து, விளை பொருட்களை மதிப்புக் கூட்டி, வருமானத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2022-23 ஆம் ஆண்டில், மானாவாரி பகுதி மேம்பாடு திட்டத்தில், ஒருங்கிணைந்த பண்ணையம் புதுக்கோட்டை, சிவகங்கை, ஈரோடு, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், விழுப்புரம், அரியலூர், கோயம்புத்தூர், கரூர், மதுரை, இராமநாதபுரம், சேலம், திருப்பத்தூர், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை, தென்காசி, திருப்பூர், தூத்துக்குடி, வேலூர், விருதுநகர் ஆகிய 21 மாவட்டங்களில் ரூ.14.50 கோடி நிதியில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு மற்றும் ஆடு வளர்ப்பு

மண்புழு உரப்படுக்கைகள், தீவனப்புல் மற்றும் தேனீ பெட்டி, தேனீ குடும்பம், பயிற்சிகள், செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளுடன் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 1,850 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.

2023-24 ஆம் ஆண்டில், இத்திட்டத்தினை ரூ.31.12 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.5.: தேசிய சமையல் எண்ணெய் இயக்கம் – எண்ணெய்ப் பனை (NMEO-OP)

தமிழகத்தில், சமையல் எண்ணெய் பயிர்களின் பரப்பு, உற்பத்தியினை அதிகரித்திட, 2022-23 ஆம் ஆண்டு முதல் தேசிய சமையல் எண்ணெய் இயக்கம்- எண்ணெய்ப்பனை திட்டம் தோட்டக்கலை-மலைப்பயிர்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டு, இத்திட்டம் ரூ.2.82 கோடி நிதியில், புதிதாக 382 எக்டர் பரப்பளவில் எண்ணெய்ப்பனை சாகுபடி பரப்பு விரிவாக்கம், முதல் நான்கு வருடங்கள் வரை எண்ணெய்ப்பனையினை பராமரித்தல், எண்ணெய்ப்பனையில் ஊடுபயிர், ஆழ்துளைக் கிணறு அமைத்தல், டீசல் மற்றும் மின்சார பம்புசெட்டுகள் அமைத்தல், எண்ணெய்ப்பனை பழக்குலைகளை அறுவடை செய்ய கருவிகள், உபகரணங்கள் ஆகியவற்றிற்கு மானியம் ஐந்து வருடத்திலிருந்து எக்டருக்கு எட்டு மெட்ரிக் டன்னிற்கு மேல் உற்பத்தி செய்யும் எண்ணெய்ப்பனை விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத்தொகை போன்ற திட்டக்கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 469 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், தனியார் நிறுவனங்களால் கொள்முதல் செய்யப்படும் எண்ணெய்ப்பனை

பழக்குலைகளுக்கான விலையினை அரசு நிர்ணயித்த விலையில் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைத்திடவும் அரசு வழிவகை செய்துள்ளது.

2023-24 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.5.16 கோடி நிதியில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 3.3. மாநில திட்டங்கள்

### 3.3.1: மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (SHDS)

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், விளைச்சலைப் பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் 100 சதவீத மாநில அரசின் பங்களிப்பில் 2022-23 ஆம் ஆண்டு மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் ரூ.28.48 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 53,847 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், குறைவான இட வசதியினை உடைய நகர்ப்புறங்களில் காய்கறித் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் செங்குத்து தோட்டம் அமைத்தல், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்ப்பு போன்ற உயர் தொழில்நுட்ப முறைகளில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவித்தல், உயர் விளைச்சலைப் பெறுவதற்கு துல்லிய பண்ணையத் திட்டம், அரசு மாணவியர் விடுதிகளில் தோட்டம் அமைத்தல், குறைந்த செலவிலான வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைத்தல், காளான் வளர்ப்புக் கூடம் அமைத்தல், மாடித்தோட்டத் தளைகள் வழங்குதல், ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல், தோட்டக்கலை சார்ந்த கருவிகள், உபகரணங்கள் வழங்குதல், வெற்றிலைப் பயிருக்கு ஒருங்கிணைந்த உர, பூச்சி மேலாண்மை, வீடுகளில் மூலிகைத் தோட்டம் அமைத்தல்

போன்ற திட்டக்கூறுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2023-24 ஆம் ஆண்டில், ரூ.29.62 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.3.2: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் (KAVIADP)

தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டங்களை ஒருங்கிணைத்து, தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வந்து, ஒட்டுமொத்த வளர்ச்சி, தன்னிறைவு பெற்ற கிராமங்களாக அவற்றை மாற்றும் பொருட்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2021-22 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் 2021-22-ம் ஆண்டில், 1,997 கிராம பஞ்சாயத்துகளில் தோட்டக்கலை சார்ந்த செயல்பாடுகள் ரூபாய் 25.88 கோடி நிதியிலும், 2022-23 ஆம் ஆண்டில், 3,204 கிராம பஞ்சாயத்துகளில் ரூபாய் 28.81 கோடி நிதியிலும் செயல்படுத்தப்படுகின்றன. 10,36,631 பயனாளிகள் இதுவரை பயன்பெற்றுள்ளனர். இத்திட்டம் நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, மாநில தோட்டக்கலை வளர்ச்சிச் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பல்லாண்டு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு

விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, புதிய தோப்புகள் உருவாக்கப்படுகின்றன.

2023-24 ஆம் ஆண்டில், ரூ.16.87 கோடி நிதியில் 2,504 கிராம பஞ்சாயத்துகளில் இத்திட்டத்தில் தோட்டக்கலைச் சார்ந்த இனங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

### 3.3.3: பனை மேம்பாட்டு இயக்கம் (PDM)

தமிழ்நாட்டின் மாநில மரமான பனைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், 2022-23 ஆம் ஆண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.1.57 கோடி நிதியில், 10 இலட்சம் பனை விதைகள் வழங்குதல், 124 பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடம் அமைத்தல், பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க 510 பயனாளிகளுக்கு உபகரணங்கள் வழங்குதல், பனை ஏறுவதற்கும், அறுவடை செய்வதற்கும் 1,000 பயனாளிகளுக்கு

உபகரணங்கள் வழங்குதல் போன்ற திட்டக் கூறுகளுடன் செயல்படுத்தப்பட்டது.

2023-24 ஆம் ஆண்டில், இத்திட்டம் இரண்டு கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்பட உள்ளது.

**3.4: உலக வங்கித் திட்டம்**

**3.4.1: தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)**

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் 70:30 பங்களிப்பில், உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஒரு பல்நோக்குத் திட்டமாகும். தேர்வு செய்யப்பட்ட உபவடிநீர்ப் பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களில் இருந்து குறைந்த நீர் தேவைப்படும் அதிக வருவாய் தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை உயர் தொழில்நுட்பங்கள், நீர் மேலாண்மை தொழில்நுட்பங்களை

பயன்படுத்தி தீவிரப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.47.17 கோடி நிதியில் 47 உபவடிநீர்ப் பகுதிகளில் 34 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. இவற்றில் 8,353 எக்டர் பரப்பில் ரூ.17.12 கோடி நிதியில் பயிர் செயல்விளக்கங்களும் 2,969 எக்டர் பரப்பில் ரூ.28.06 கோடி நிதியில் நுண்ணீர்ப் பாசனத் திட்டமும், மாதிரி கிராமங்கள் ரூ.0.62 கோடி நிதியிலும் செயல்படுத்தப்பட்டன.

2023-24-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை ரூ.19.72 கோடி நிதியில் 38 உபவடிநீர்ப் பகுதிகளில் 34 மாவட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.5: தோட்டக்கலைத்துறையின் கட்டமைப்பு வசதிகள்

### 3.5.1: அரசு தோட்டக்கலை பண்ணைகள்

தமிழ்நாட்டில், தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறையின்கீழ் 37 மாவட்டங்களில், 79 அரசு தோட்டக்கலை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன (இணைப்பு-1). தோட்டக்கலைப் பயிர்களின் இனத்தூய்மையான, தரமான நடவுச்செடிகளை உரிய நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் முக்கிய நோக்கமாகும். இப்பண்ணைகள் விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை விளக்கும் “மாதிரி செயல்விளக்க மற்றும் பயிற்சி பண்ணை”களாகவும் திகழ்வதுடன், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்தும் வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், 250 மெ.டன் தக்காளி, கத்தரி, வெண்டை, வெங்காயம், கீரை வகைகள், பூசணி, புடல், பாகல், பீர்க்கன், சுரை, சாம்பல் பூசணி, முருங்கை, கொத்தவரை, அவரை, பட்டாணி, பீன்ஸ், காராமணி, உருளைக்கிழங்கு போன்ற பல்வேறு வகையான உண்மை நிலை (Truthfully labelled) காய்கறி விதைகளை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 207 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில் 31.74 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, இதுவரை 31.72 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

2023-24 ஆம் ஆண்டு பல்லாண்டு பயிர் நடவுச்செடிகள் உற்பத்திக்கு அதிக

முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், 20 கோடி எண்கள் நடவுச்செடிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5.1.1: மண்புழு உர உற்பத்தி

மண்புழு உரமானது, மண்ணில் நுண்ணுயிர் செயல்பாடு மற்றும் அங்கக தன்மையை அதிகரித்து காற்றோட்டம், நீர் தேக்க சக்தி ஆகியவற்றை கூட்டுவதன் மூலம் தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கச் செய்கிறது. மண்புழு உர உற்பத்தி முறைகள் மற்றும் தரம் குறித்த நடைமுறைகள் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. 2022-23 ஆம் ஆண்டில் 1000 மெ.டன் மண்புழு உரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை 830 மெ.டன் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.

2023-24 ஆம் ஆண்டில் 1000 மெ. டன் மண்புழு உரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5.2: பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 24 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்வதுடன், தோட்டக்கலை, தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களங்களாகவும் விளங்குகின்றன (இணைப்பு-2).

மேலும், நில எழிலூட்டல் பிரிவின் மூலம், 2022-23 ஆம் ஆண்டில், தஞ்சாவூர் விமானபடைத்தளத்தில் நில எழிலூட்டல் பணிகள் ரூ.0.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.5.3: மகத்துவ மையங்கள்

உயர் தொழில் நுட்பங்களுடன் கூடிய செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும், விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் அளிக்கவும், ஐந்து இடங்களில் பயிர்களுக்கு ஏற்ப மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை 3.8: மகத்துவ மையங்கள் விபரம்

| வ. எண் | மகத்துவ வமையம் | இடம் |
|---|---|---|
| **செயல்பாட்டில் உள்ள மகத்துவ மையங்கள்** | | |
| 1. | கொய் மலர்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 2. | காய்கறிகள் | ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். |
| 3. | மலை காய்கறிகள் பயிர்கள் | நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம். |
| 4. | வெப்ப மண்டல பழப்பயிர்கள் | கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சி |
| 5 | பாரம்பரிய மலர்கள் | திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |

| வ. எண் | மகத்துவ வமையம் | இடம் |
| --- | --- | --- |
| **பணிகள் நடைபெற்று வரும் மகத்துவ மையங்கள்** | | |
| 6. | தேனீ வளர்ப்பு | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 7. | மா | வெதரம்பட்டி, தருமபுரி மாவட்டம். |
| 8. | நெல்லி | களக்காடு, திருநெல்வேலி மாவட்டம். |
| 9. | மித வெப்பமண்டல தோட்டக்கலைப்பயிர்கள் | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| 10. | மலர்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |

### 3. 6.1: தோட்டக்கலை பயிற்சி மையங்கள்

சென்னை மாவட்டம் மாதவரத்தில் தமிழ் நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் தோட்டக்கலை பயிற்சி நிலையம், நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உழவர் பயிற்சி நிலையம், கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் தோட்டக்கலை ஆராய்ச்சி பயிற்சி மையம், மதுரை

மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் பாரம்பரிய மலர் பயிர்களுக்கான மகத்துவ மையம், திருச்சி மாவட்டம் கஞ்சநாயக்கன்பட்டியில், வெப்ப மண்டல பழப்பயிர்களுக்கான மகத்துவ மையம் ஆகிய ஏழு பயிற்சி மையங்கள் தோட்டக்கலை-மலைப்பயிர்கள் துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

விவசாயிகளுக்குத் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி அளிப்பதே இம்மையங்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட பயிற்சி நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 3.6.2: தோட்டக்கலை பட்டயப் படிப்பு

தோட்டக்கலைத்துறையின் கீழ் செயல்படும் சென்னை மாவட்டம், மாதவரம் தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம்,

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தோட்டக்கலை ஆராய்ச்சி - பயிற்சி மையம், திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் காய்கறி மகத்துவமையம் ஆகிய நிலையங்களின் மூலம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைப்புடன், ஆண்டு தோறும் 150 மாணவர்களுக்கு ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப்படிப்பு வழங்கப்பட்டு வருகிறது.

## 3.7: **பணியாளர்கள் விபரம்**

தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையின் கீழ் வட்டார, மாவட்ட, மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை 3.9 : மொத்த பணியிடங்கள் விபரம்**

| வ. எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| 1. | தொழில்நுட்ப அலுவலர்கள் | 2,606 |
| 2. | அமைச்சுப் பணியாளர்கள் | 1,222 |
| | **மொத்தம்** | **3,828** |

## அட்டவணை 3.10 : அலுவலர்கள் விபரம்

| வ.எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| அ. | **தொழில்நுட்ப அலுவலர்கள்** | |
| 1. | தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 43 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 398 |
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 404 |
| 6. | தோட்டக்கலை துணை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,625 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |
| | **மொத்தம்** | **2,606** |
| ஆ. | **அமைச்சுப் பணியாளர்கள்** | |
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள் | 1,222 |
| | **மொத்தம்** | **3,828** |

# இணைப்பு 1

# மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகள்

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | கீழப்பழுவூர் | 2018 | 7.58 |
| 2 | சென்னை | மாதவரம் | 1980 | 4.38 |
| 3 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.00 |
| 4 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 2001 | 11.20 |
| 5 | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.53 |
| 6 | கடலூர் | விருத்தாச்சலம் | 1975 | 10.43 |
| 7 | தருமபுரி | போளயம்பள்ளி | 2013 | 2.73 |
| 8 | தருமபுரி | வட்டார நாற்றங்கால் மையம், | 2020 | 0.40 |
| 9 | திண்டுக்கல் | சந்தையூர் | 2018 | 15.20 |
| 10 | திண்டுக்கல் | நீலமலைக்கோட்டை | 2020 | 0.40 |
| 11 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 1961 | 1.73 |
| 12 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 1985 | 5.45 |
| 13 | திண்டுக்கல் | சிறுமலை | 1980 | 200.04 |
| 14 | திண்டுக்கல் | காய்கறி மகத்துவ மையம், ரெட்டியார் சத்திரம் | 2012 | 5.33 |
| 15 | திண்டுக்கல் | கொத்தபுள்ளி | 2021 | 5.87 |
| 16 | ஈரோடு | பகுத்தம்பாளையம் | 2018 | 10.00 |
| 17 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 1961 | 12.24 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 18 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 1982 | 23.25 |
| 19 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 1982 | 42.63 |
| 20 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.60 |
| 21 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1982 | 34.00 |
| 22 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 12.64 |
| 23 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 1967 | 6.00 |
| 24 | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 23.96 |
| 25 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.62 |
| 26 | கிருஷ்ணகிரி | ஜீனூர் | 1980 | 123.45 |
| 27 | கிருஷ்ணகிரி | கொய்மலர்கள் மகத்துவ மையம், தளி | 2012 | 22.00 |
| 28 | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.76 |
| 29 | மதுரை | பாரம்பரிய மலர்களுக்கான மகத்துவ மையம் . திருப்பரங்குன்றம் | 2019 | 2.65 |
| 30 | நாகப்பட்டினம் | வண்டுவாஞ்சேரி | 2018 | 6.54 |
| 31 | நாகப்பட்டினம் | புஷ்பவனம் | 2021 | 10.25 |
| 32 | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.60 |
| 33 | நாமக்கல் | படசோலை | 1989 | 22.67 |
| 34 | பெரம்பலூர் | கிழக்கு வெங்கலம் | 2018 | 4.72 |
| 35 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.68 |
| 36 | புதுக்கோட்டை | வல்லத்திராக்கோட்டை | 1977 | 521.20 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 37 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 1985 | 53.02 |
| 38 | இராமநாதபுரம் | ஓரியூர் | 2013 | 14.77 |
| 39 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை, கருமந்துறை | 1981 | 419.77 |
| 40 | சேலம் | மணியார்குன்றம் | 1982 | 101.21 |
| 41 | சேலம் | கருமந்துறை | 1981 | 39.35 |
| 42 | சேலம் | முள்ளுவாடி | 1985 | 48.40 |
| 43 | சேலம் | சிறுமலை | 1987 | 8.00 |
| 44 | சேலம் | ஏற்காடு | 1975 | 10.13 |
| 45 | சிவகங்கை | தேவக்கோட்டை | 1985 | 81.19 |
| 46 | சிவகங்கை | நேமம் | 1979 | 38.77 |
| 47 | சிவகங்கை | கிளாதரி | 2019 | 12.81 |
| 48 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1988 | 8.90 |
| 49 | தஞ்சாவூர் | மருங்குளம் | 1966 | 10.77 |
| 50 | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.25 |
| 51 | நீலகிரி | கல்லார் | 1900 | 6.77 |
| 52 | நீலகிரி | பழம் பதனிடும் நிலையம், குன்னூர் | 1965 | 4.05 |
| 53 | நீலகிரி | பழவியல் நிலையம், குன்னூர் | 1948 | 10.46 |
| 54 | நீலகிரி | காட்டேரி | 1974 | 16.96 |
| 55 | நீலகிரி | தொட்டபெட்டா | 1969 | 2.52 |
| 56 | நீலகிரி | தும்மனட்டி | 1956 | 9.80 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்-பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 57 | நீலகிரி | நஞ்சநாடு | 1917 | 64.00 |
| 58 | நீலகிரி | தேவாலா | 1978 | 80.00 |
| 59 | நீலகிரி | கோல்கிரைன் | 1989 | 20.40 |
| 60 | தேனி | பெரியகுளம் | 1950 | 9.32 |
| 61 | தூத்துக்குடி | கீழவல்லநாடு | 2019 | 3.82 |
| 62 | திருவாரூர் | மூவாநல்லூர் | 2018 | 5.82 |
| 63 | திருப்பூர் | சங்கராமநல்லூர் | 2018 | 10.12 |
| 64 | திருநெல்வேலி | வன்னிக் கோனேந்தல் | 2018 | 10.86 |
| 65 | திருவண்ணா-மலை | புதூர் செக்கடி | 2018 | 12.76 |
| 66 | திருவண்ணா-மலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, ,ஜமுனாமரத்தூர் | 2019 | 0.68 |
| 67 | திருவண்ணா-மலை | வட்டார நாற்றங்கால் பண்ணை., போளூர் | 2020 | 1.52 |
| 68 | திருச்சி | தொரக்குடி | 2013 | 4.05 |
| 69 | திருச்சி | வெப்ப மண்டல பழப்பயிர்கள் மகத்துவ மையம், கஞ்சநாயக்கன்பட்டி | 2019 | 8.67 |
| 70 | திருப்பத்தூர் | தகரக்குப்பம் | 1985 | 34.40 |
| 71 | திருப்பத்தூர் | கூடப்பட்டு | 1961 | 10.08 |
| 72 | திருவள்ளூர் | ஈக்காடு கண்டிகை | 2020 | 3.62 |
| 73 | இராணிப்பேட்டை | நவ்லாக் | 1981 | 84.42 |
| 74 | கள்ளக்குறிச்சி | ஏ. சாத்தனூர் | 2018 | 10.00 |
| 75 | வேலூர் | அகரம்சேரி | 2020 | 34.76 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப்பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 76 | விருதுநகர் | பூவாணி | 1967 | 9.46 |
| 77 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | 1982 | 46.27 |
| 78 | விருதுநகர் | ஆதித்தநேந்தல் | 2020 | 0.81 |
| 79 | விழுப்புரம் | எலவளப்பாக்கம் | 2022 | 7 .20 |
| | | **மொத்தம்** | | **2743. 67** |

# இணைப்பு 2

## மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பூங்காக்கள்

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | செம்மொழிப் பூங்கா, சென்னை | 2010 | 3.21 |
| 2 | சென்னை | தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம் | 2018 | 8.90 |
| 3 | சென்னை | செங்காந்தள் பூங்கா | 2021 | 2.76 |
| 4 | சென்னை | பாரம்பரியப் பூங்கா, வண்ணாரப் பேட்டை | 2021 | 1.56 |
| 5 | கன்னியாகுமரி | சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி | 2018 | 6.07 |
| 6 | இராமநாதபுரம் | பாலை மரபணுப் பூங்கா, அச்சடிபிரம்பு | 2015 | 4.04 |
| 7 | சேலம் | ரோஜா தோட்டம், ஏற்காடு | 2005 | 2.02 |
| 8 | சேலம் | ஏரி பூங்கா, ஏற்காடு | 2018 | 1.32 |
| 9 | சேலம் | அண்ணா பூங்கா, ஏற்காடு | 1999 | 1.74 |
| 10 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா-1. ஏற்காடு | 2012 | 8.50 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 11 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா-2, ஏற்காடு | 2012 | 7.69 |
| 12 | சேலம் | ஐந்திணை குறிஞ்சி மரபணுப் பூங்கா, ஏற்காடு | 2012 | 7.28 |
| 13 | தென்காசி | சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம் | 1986 | 15.07 |
| 14 | திருவண்ணா-மலை | திருவண்ணா-மலை பூங்கா | 2021 | 3.64 |
| 15 | திண்டுக்கல் | ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல் | 2012 | 4.05 |
| 16 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல் | 1900 | 8.29 |
| 17 | திண்டுக்கல் | செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 1980 | 2.02 |
| 18 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி | 1848 | 21.60 |
| 19 | நீலகிரி | அரசு ரோஜா பூங்கா, ஊட்டி | 1995 | 7.29 |
| 20 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 1874 | 11.34 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 21 | நீலகிரி | காட்டேரி பூங்கா | 2012 | 2.00 |
| 22 | நீலகிரி | தேயிலை பூங்கா, தொட்டபெட்டா | 2015 | 1. 60 |
| 23 | நீலகிரி | மரவியல் பூங்கா, உதகை | 2008 | 1.58 |
| 24 | நீலகிரி | சுற்றுச்சூழல் பூங்கா கல்லார் | 2021 | 2.15 |
| | | **மொத்தம்** | | 134.12 |

## 4. வேளாண்மைப் பொறியியல்

மண் மற்றும் நீர் போன்ற இயற்கை வளங்களை பாதுகாத்து, இன்றைய சூழலில் வேளாண்மைக்கு சவாலாக விளங்கும் நீர்ப்பற்றாக்குறை, மண் வளம் குன்றுதல், வேளாண் பணியாட்கள் பற்றாக்குறை, அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை புதிய வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களின் உதவியுடன் வெற்றிகரமாக விவசாயிகள் எதிர்கொள்ள வேளாண்மைப் பொறியியல் துறை துணைபுரிகிறது.

வேளாண் தொழிலை மேம்படுத்திடவும், விவசாயிகளின் நலனை காக்கவும் பல்வேறு திட்டங்களை வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது.

## 4.1. வேளாண் இயந்திரமயமாக்குதலும் விளை பொருட்களை மதிப்புக் கூட்டுதலும்

வேளாண்மையில் நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகளை பிரபலப்படுத்துவதன் மூலம், கூடுதலாக இயந்திர சக்தியை வழங்கிடவும், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திடவும், வேளாண் பணிகளை குறுகிய காலத்தில் முடித்திடவும், வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகள் அதிக வருமானம் ஈட்டிடவும், வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத்தில், தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் உள்ளடக்கிய வட்டார, கிராம அளவிலான, கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் மானியத்தில் அமைத்தல் ஆகியவை

செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், ஒன்றிய அரசின் பங்களிப்பு 60 சதவீதமும் மாநில அரசின் பங்களிப்பு 40 சதவீதமும் ஆகும்.

### 4.1.1. வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் மானியத்தில் வழங்குதல்

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத்தில், டிராக்டர், பவர்டில்லர், சுழல்கலப்பை, கொத்துக் கலப்பை, நெல் நாற்று நடவு இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம் போன்ற இயந்திரங்களும், சிறு, குறு விவசாயிகள் எளிதாக வாங்கி பயன்பெறும் வகையில், நேரடி நெல் விதைக்கும் கருவி, தெளிப்பான்கள், நவீன வேளாண் இயந்திரங்களில் முக்கிய பங்கு வகிக்கும் ட்ரோன் (Drone) போன்ற சிறு வேளாண் கருவிகள், உபகரணங்களும் வெங்காயத் தாளினை நீக்கும் இயந்திரம், தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரம், எண்ணெய் செக்கு, தானியம்

அரைக்கும் இயந்திரம் போன்ற வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டும் இயந்திரங்களும் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும், இத்திட்டத்தில், சிறு, குறு ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் மாநில அரசால் வழங்கப்படுகிறது.

கடந்த 2022-23 ஆம் நிதியாண்டில், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண் இயந்திரங்கள், 2,198 விவசாயிகளுக்கு ரூ.36.21 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் வேளாண் இயந்திரங்கள், 8,623 விவசாயிகளுக்கு ரூ.105.01 கோடி மானியத்தில் வழங்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் குறைந்து வரும் விவசாயிகளின் நில உடமையினைக்

கருத்தில் கொண்டு, சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் அவசியம் கருதி, தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டமான “கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டக்” கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு இரண்டு பவர்டில்லர் இயந்திரங்கள் என்ற அடிப்படையில் 2023-24 ஆம் ஆண்டில் 2,504 கிராமங்களுக்கு வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்க நிதியிலிருந்து, 5000 பவர்டில்லர் இயந்திரங்களை விவசாயிகள் வாங்கி பயன்பெற ஏதுவாக ரூ.43 கோடி மானியமாக வழங்கப்பட உள்ளது.

### 4.1.2. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்

அதிக விலையுள்ள உயர் தொழில் நுட்ப வேளாண் இயந்திரங்கள், கருவிகள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை வாங்கி பராமரிக்க

இயலாத சிறு, குறு விவசாயிகள் வாடகைக்கு பெற்று பயன்பெறும் வகையில், கிராமப்புறத் தொழில் முனைவோர்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், விவசாய கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் வட்டார, கிராம அளவிலும் கரும்பு சாகுபடிக்கேற்றதுமான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைப்பதற்கு, கடந்த 2022-23-ஆம் ஆண்டில் 65 வட்டார, கிராம, கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.7.3 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டன. மேலும், 2023-24-ஆம் ஆண்டில் 150 வட்டார, கிராம அளவிலான கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூ.18.74 கோடி மானியத்தில் அமைக்கப்பட உள்ளன.

### 4.1.3. வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் பழுது நீக்கி பராமரிக்கும் மையம்

வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளில் பழுதுநீக்கி பராமரிக்கும் மையங்கள், ஒன்றிய அரசின் 60 சதவீத பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பொறியியலில் பட்டயம் அல்லது பட்டம் பயின்று வேலையில்லா இளைஞர்கள், கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர்கள், விவசாய குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் மானியத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 18 மையங்கள் ரூ.71 இலட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

### 4.1.4. ஊரக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

இளைஞர்களை தொழில் முனைவோராக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும், வேளாண்மைப் பொறியியல் துறையும் இணைந்து, 'வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்கம், பராமரிப்புச் சேவை வழங்குநர்' பயிற்சி கடந்த இரண்டு ஆண்டுகளில் கோயம்புத்தூர், திருவாரூர், திருச்சி, வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள வேளாண் இயந்திர பணிமனைகளில் 351 இளைஞர்களுக்கு ரூ.13.13 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2023-24 ஆம் ஆண்டில் அறுவடை இயந்திரம், டிராக்டர் போன்றவற்றினை இயக்கிட 500 கிராமப்புற இளைஞர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் வேளாண் இயந்திரப் பணிமனைகள் மூலம் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இது தவிர, 200 கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில்

இயந்திரங்கள் பழுது நீக்கம், பராமரிப்பு தொடர்பான பயிற்சி வழங்கப்பட உள்ளது.

### 4.2. இ-வாடகை கைபேசி செயலி

வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான இயந்திரங்கள், கருவிகளை விவசாயிகள் தங்களுக்குத் தேவையான நேரத்தில் முன்பதிவு செய்யவும், வாடகைத் தொகையை செலுத்தவும் இ-வாடகை கைபேசி செயலி வேளாண்மைப் பொறியியல் துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அலுவலகங்களுக்குச் செல்லாமல், தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களை முன்பதிவு செய்ய முடிவதால் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

இச்செயலியின் மூலம் 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 25,000 விவசாயிகள் பயன்

பெறுவார்கள் எனவும், இதன் மூலம் அரசிற்கு வருவாயாக ரூ.60 கோடி ஈட்டப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 4.2.1. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற வேளாண் இயந்திரங்களின் விபரம் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1.வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களின் விபரம்**

| வரிசை எண். | இயந்திரத்தின் விபரம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புல்டோசர் (Bull Dozer) | 85 |
| 2 | டிராக்டர் (Tractor) | 449 |
| 3 | டிராக்டர்களுக்கான இணைப்பு கருவிகள் (Tractor with suitable implements) | 1,752 |

| வரிசை எண். | இயந்திரத்தின் விபரம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 4 | சக்கர வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Wheel Type) | 32 |
| 5 | டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் (Paddy Combine Harvester – Track Type) | 18 |
| 6 | சக்கர வகை மண் அள்ளும் இயந்திரம் (Backhoe with Front end loader) | 60 |
| 7 | டிராக் வகை மண் அள்ளும் இயந்திரம் (Crawler Excavator) | 10 |
| 8 | சிறு டிராக்டர் (Mini Tractor) | 6 |
| 9 | கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் இன்ஃபீல்டர்கள் (Sugarcane Harvester with infielders) | 1 |
| 10 | வாகனத்துடன் இயங்கக்கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரம் (Truck Operated Coconut Hoist) | 20 |
| 11 | கனரக மரம் அறுக்கும் கருவிகள் (Heavy Duty Chain Saws) | 805 |
| 12 | டிராக்டரால் இயங்கக்கூடிய நீர் இறைக்கும் பம்புகள் (Tractor Operated Pumpsets) | 21 |
| 13 | சுழல் விசைத்துளைக் கருவிகள் (Rotary Drills) | 24 |
| 14 | பெர்குஷன் துளைக் கருவிகள் (Percussion Drills) | 3 |

| வரிசை எண். | இயந்திரத்தின் விபரம் | இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 15 | சிறு விசைத்துளைக் கருவிகள் (Mini Drills) | 20 |
| 16 | கைத்துளைக் கருவிகள் (Hand Boring Sets) | 17 |
| 17 | பாறை வெடிக் கருவிகள் (Rock Blasting Units) | 5 |
| 18 | நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் (Resistivity Meters) | 21 |
| 19 | மின்னியல் ஆய்வுக் கருவிகள் (Electrical Loggers) | 2 |

### 4.2.2. இ-வாடகை செயலியில் தனியார் இயந்திரங்கள், பழுது நீக்குபவர்கள் விபரங்கள் இடம் பெறுதல்

அறுவடைக் காலங்களில், நெல் அறுவடை இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும்போது விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமங்களை குறைத்திட, நெல், மக்காச் சோளம், பயறு, தானிய வகைகள் அறுவடை செய்யும் வகையில் தனியாருக்குச் சொந்தமான, 4,456 இயந்திரங்களின் உரிமையாளர் பெயர், விலாசம்,

கைபேசி எண் போன்ற விபரங்கள், வட்டாரம், மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, விவசாயிகள் உழவுப் பணிகளை தங்குதடையின்றி மேற்கொள்ள உதவிடும் பொருட்டும், வேளாண் இயந்திரங்கள், கருவிகள், பம்பு செட்டுகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், தனியாருக்குச் சொந்தமான டிராக்டர்களின் உரிமையாளர்கள், பழுது நீக்குபவர்களின் பெயர், விலாசம், கைபேசி எண் போன்ற விபரங்கள் வட்டாரம், மாவட்ட வாரியாக, இ-வாடகை செயலியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் தொடர்ந்து பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 4.2.3. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர வாடகைத் திட்டத்தினை வலுப்படுத்துதல்

கடந்த 2021-22 ஆம் ஆண்டில் ரூ.22.59 கோடி மதிப்பீட்டில் டிராக்டர்கள், டிராக்டரால் இயங்கக்கூடிய ரோட்டவேட்டர்கள், கொத்துக் கலப்பைகள் ஒவ்வொன்றிலும் 185 எண்கள், 120 கேஜ்வீல்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் கொள்முதல் செய்யப்பட்டு, முதற்கட்டமாக டெல்டா மாவட்டங்களில் வட்டார அளவில் விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் வேளாண் பணிகளை தங்கு தடையின்றி மேற்கொள்ள உதவிடும் பொருட்டு, 2023-24-ஆம் ஆண்டில் டிராக்டர்கள், ரோட்டவேட்டர்கள், கொத்துக் கலப்பைகள், இன்பீல்டர்கள், நெல் அறுவடை இயந்திரங்களை, வேளாண்மைப்

பொறியியல் துறையின் மூலம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து வட்டார அளவில் வாடகைக்கு வழங்கப்பட உள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறைக்குச் சொந்தமான 32 சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்கள், நெல் அறுவடைக் காலம் அல்லாத பிற காலங்களில் சிறு தானியங்கள், பயறு வகைப் பயிர்களை அறுவடை செய்யும் வண்ணம், மாற்றி வடிவமைக்கப்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

### 4.2.4. அரசு இயந்திர கலப்பை பணிமனைகளில் நவீன வேளாண் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல்

புதிய, நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள், உபகரணங்களை கோயம்புத்தூர், வேலூர், திருச்சி, திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய அரசு இயந்திர கலப்பை

பணிமனைகளில் 2023-24-ஆம் ஆண்டில் உற்பத்தி செய்ய ரூ.30 இலட்சமும், உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் இயந்திரங்களை கொள்முதல் செய்ய ரூ.80 இலட்சமும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், இவ்வியந்திரங்களை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிப்பதோடு, அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்த வாடகையில் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இத்தகைய உபகரணங்களை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலம் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 4.3. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

மின் இணைப்பு இல்லாத விவசாயிகளின் கிணற்றுப் பாசனத்திற்கான மின்சார

தேவையினை பூர்த்தி செய்து வேளாண்மையில் நிலையான உற்பத்தியை பெறுவதற்கு, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தில், மின் கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 10 குதிரைத் திறன் வரையிலான 2,000 பம்பு செட்டுகள் 2021-22-ஆம் ஆண்டில் 70 சதவீத மானியத்தில் (ஒன்றிய அரசு 30 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம்) ரூ.43.56 கோடி நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளின் வயல்களில் நிறுவ ஒப்புதல் வழங்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், 2,000 பயனாளிகளுக்கு பணியாணை வழங்கப்பட்டு, 1,740 விவசாயிகளின் வயல்களில் சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டக் கிராமங்களில், தரிசு நிலத் தொகுப்புகளில் ஏற்படுத்தப்படும் கிணறுகளில் சாத்தியமுள்ள

இடங்களுக்கு முன்னுரிமை அளித்து, சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் நிறுவப்படுகின்றன. மேலும், இத்திட்டத்தில், ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய அரசிடமிருந்து 2022-23 ஆம் ஆண்டிற்கான விலை நிர்ணயம், நிறுவன அங்கீகாரம், 30 சதவீத நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், அதற்கிணையான 40 சதவீத மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் 1,000 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 4.4. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

வேளாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் மண் வளத்தினை காத்திடவும், மழைநீரை

சேமித்திடவும் கீழ்க்கண்ட திட்டங்கள் வாயிலாக மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 4.4.1. கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

இத்திட்டத்தில், 2021-22-ஆம் ஆண்டில், தெரிவு செய்யப்பட்ட 1,997 கிராமங்களிலும், 2022-23-ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட 3,204 கிராமங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாசனப்பரப்பு இல்லாத தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்புகளில் நீர் ஆதாரத்தை உருவாக்கிட கிணறுகள் அமைக்கும் பணிகள் இதுவரை, 534 எண்கள் முடிவடைந்துள்ளன. தனிப்பட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவைச் சார்ந்த

சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில், 100 சதவீத மானியத்தில் மின்மோட்டார் அல்லது சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளுடன் 318 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தில், விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக்குட்டைகள் 100 சதவீத மானியத்தில் இதுவரை 730 எண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 1,147 சிறு பாசனக் குளங்கள், ஊருணிகள், குளங்கள், வரத்துக் கால்வாய்கள் தூர்வாரி மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1,245 விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள் வாங்கியதற்கான மானியம் விடுவிக்கப்பட்டு, தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 2023-24 ஆம் ஆண்டில் 2,504 கிராமங்களில் மேற்கண்ட பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.2. நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரித்தல்

நீர் ஆதாரத்தை அதிகரித்து மழைநீரை சேமிக்கவும், நீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் வரத்து கால்வாய்களில் தூர்வாரி அதன் நீரோட்டத்தை பெருக்கும் நோக்கத்திலும், நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IWDP), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் (IWMP) ஆகிய திட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட 1,700 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு

நிதியைக் கொண்டு ஐந்து கோடி ரூபாய் செலவில் 2021-22-ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை இயந்திரங்களை கொண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, இதுவரை 866 பணிகள் முடிக்கப்பட்டு தொடர்ந்து பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதனைத் தொடர்ந்து, 1,500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் ஐந்து கோடி ரூபாய் செலவில் 2022-23 ஆம் ஆண்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, வேளாண்மை மற்றும் வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களைக் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டு, 857 கட்டமைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, 463 கட்டமைப்புகளுக்கு மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறப்பட்டு, தொடர்ந்து பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 4.4.3. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்

இயற்கை வளங்களை பாதுகாக்க மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகள், நில மேம்பாட்டு பணிகள், விவசாய நிலங்கள் பயன்பெறும் வகையில், மேற்கு தொடர்ச்சி மலையின் அருகாமையிலுள்ள வனப்பகுதி கிராமங்களில், சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில் 2022-23-ஆம் ஆண்டில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் 219 மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகள், 14,544 மீட்டர் நீளத்திற்கு ஓடை பராமரிப்பு பணிகள், நிலச்சரிவு தடுப்பு பணிகள் ரூ.18.28 கோடி மதிப்பில் மாநில அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.4.4. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்

உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தில், பல்நோக்கு நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவதை தடுத்திட, ஓடை பராமரிப்பு பணிகள், வண்டல் மண் சேகரிப்புக் கட்டமைப்புகள், வண்டல் படிவு கண்காணிப்பு நிலையங்கள் ஆகிய பணிகள் 2023-24 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளன. தேனி மாவட்டத்தில் வைகை அணை, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை ஆகிய அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் 2023-24 ஆம் ஆண்டில் ஆறு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 102 எண்கள் மண்வளப்பாதுகாப்பு மற்றும் நீர்பிடிப்புப்பகுதி மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 4.4.5. நீர்வள நவீனமயமாக்குதல் – பண்ணைக்-குட்டைகள் அமைத்தல்

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டத்தில், பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி செயல்படுத்தப்படுகிறது. முதல் மூன்று கட்டங்களில், 1,024 பண்ணைக் குட்டைகள் ரூ.678.76 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. நான்காம் கட்டத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, இராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி, மதுரை, கடலூர், விழுப்புரம், அரியலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், கரூர் ஆகிய 14 மாவட்டங்களில் உள்ள 11 உபவடிநிலப் பகுதிகளில் 873 பண்ணைக் குட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதலாம் ஆண்டான 2022-23-இல் 373 பண்ணைக் குட்டைகள் ரூ.373 இலட்சம் செலவில் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 109 பணிகள் முடிவடைந்துள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம், 2023-24-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 4.5. நீர் மேலாண்மை

மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் குறைந்து கொண்டே செல்வதால், கிடைக்கக்கூடிய நீரை முறையாகவும் திறம்படவும் மேலாண்மை செய்வது அவசியமாகும். நிலத்தடி நீர் சேமிக்கும் திறனை அதிகரிக்கவும், மேற்பரப்பு நீரின் பயன்பாட்டினை திறம்பட நிர்வாகம் செய்யும் பொருட்டும், நீர் மேலாண்மை உத்திகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் பின்பற்றப்படுகின்றன.

### 4.5.1. கடைமடைக்கும் பாசன நீர்

கடைமடைக்கும் பாசன நீர் செல்லும் வகையில், கடந்த 2022-23-ஆம் ஆண்டில் காவிரி, வெண்ணாறு வடிநிலப் பகுதியிலுள்ள தஞ்சாவூர்,

திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் முதல் கட்டமாக 1587.87 கிலோமீட்டர் நீளத்திற்கு 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள், 1,43,654 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில், ரூ.4.97 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக 2023-24-ஆம் ஆண்டில், மேற்குறிப்பிட்ட ஐந்து மாவட்டங்களில் 1,146 கிலோமீட்டர் நீளத்திற்கு 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்களைத் தூர்வாரும் பணிகள் 1,32,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 4.5.2. மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள்

சிறு, குறு விவசாயிகளுக்கு உதவும் வகையில், புதிய திறன்மிகு மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி புதிய

மின்மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தவும், ஒரு மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.10,000 அல்லது மொத்தத் தொகையில் 50 சதவீதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. 2021-22-ஆம் ஆண்டு திட்டத்தில் இதுவரை, 968 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்கல் ஆணை பிறப்பிக்கப்பட்டு 937 விவசாயிகளின் கிணறுகளில் பம்புசெட்டுகள் பொருத்தப்பட்டு பயனடைந்து உள்ளனர். பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 4.6. புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துதல்

நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண்மைப் பொறியியல் தொழில்-நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தி,

விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், 2022-23 ஆம் ஆண்டில் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து, 50 செயல் விளக்கங்கள் பல்வேறு மாவட்டங்களிலும், மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையத்திலும், 2,253 விவசாயிகள் பயன்பெறும் வகையில், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நடத்தப்பட்டன. நவீன வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தொடர்ந்து புதுமையான வேளாண்மைப் பொறியியல் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் திட்டம் 2023-24-ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

விவசாயிகளிடையே அனைத்து வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தனித்துவம் வாய்ந்த "**மாநில வேளாண்**

**இயந்திரங்கள் தகவல் மையம்**" வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தில் செயல்படுகின்றது. இம்மையத்தை இதுவரை 5,469 விவசாயிகள், பள்ளி, கல்லூரி மாணவர்கள், படித்த இளைஞர்கள், கல்வியாளர்கள், அலுவலர்கள் பொதுமக்கள் என பலதரப்பட்ட மக்கள் கட்டணமின்றி பார்வையிட்டு வேளாண் பொறியியல் தொழில்-நுட்பங்களுக்கான தகவல்கள், அரசின் மானிய திட்ட விவரங்களைப் பெற்று பயன்பெற்றுள்ளனர்.

மேலும், இம்மையத்தில் வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல் பயிலும் கல்லூரி மாணவ, மாணவிகளின் திறனை மேம்படுத்தும் விதமாக, வேளாண் பொறியியல் தொழில்நுட்பங்கள் குறித்து ஐந்து நாட்கள் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது.

## 4.7. கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டமைப்புப் பணிகள் மட்டுமல்லாது, சகோதரத் துறைகளான வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறையின் கட்டமைப்புப் பணிகளுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.7.1. வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் ஆய்வகக் கட்டிடங்கள்

வேளாண்மைத் துறைக்காக 14 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், 225 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், இரண்டு உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் நபார்டு நிதி, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில்

ரூ.122.12 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

### 4.7.2. வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திர கலப்பை பணிமனைகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள், கருவிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நீக்கவும், தேவையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் வேலூர், திருச்சி, கோயம்புத்தூர், திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டுவரும் அரசு வேளாண் இயந்திர கலப்பை பணிமனைகளின் கட்டமைப்புகளை வலுப்படுத்தி விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த பயிற்சிகள் அளிக்கும் வகையில். பயிற்சி அறையுடன் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள், பராமரிப்புப் பணிகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 2023-24-ஆம்

ஆண்டில் ரூ.12.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 4.8. நிர்வாக அமைப்பு

### அட்டவணை 4.2. வேளாண்மைப் பொறியியல் துறை பணியாளர்களின் விபரம்

| வரிசை எண் | பதவியின் பெயர் | எண்கள் |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (வே.பொ) | 1 |
| 2 | தலைமைப் பொறியாளர் (வே.பொ), நபதி | 1 |
| 3 | கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) | 14 |
| 4 | செயற் பொறியாளர் (வே.பொ) | 38 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (வே.பொ) | 125 |
| 6 | உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர்(வே.பொ) | 850 |
| 7 | அமைச்சுப் பணியாளர்கள் | 1,120 |
| 8 | களப் பணியாளர்கள் | 1,866 |
| | **மொத்தம்** | **4,015** |

## 5. வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை

**"இருங்கழி யிழிதரும் ஆர்கலிவங்கம்**
**தேறுநீர்ப் பரப்பின் யாறு சீத்துய்த்துத்**
**துறைதொறும் பிணிக்கு நல்லூர்**
**உறைவின் யாணர் நாடுகிழ வோனே "**

**- புறநானூறு**

கோவூர்கிழாரின் புறநானூற்றுப் பாடலில் "ஆற்றுநீர் கடலில் கலக்கும் துறைகளைச் செம்மை செய்து உருவாக்கப்பட்டிருக்கும் கடற்கரை நகர்தோறும் கடலில் செல்லும் பெருங்கப்பல்கள் மூலம் சென்று வணிகம் செய்யும் நல்ல ஊர்களையும் வணிகத்தையும் உடையவன் இவன். அதன் மூலம் வருவாயை ஈட்டும் நாடு இவனுடையது" என ஒரு நாட்டின் மன்னனுடைய பெருமையை அவன் செய்யும் வாணிகத்தின் வாயிலாகப் பெருமைப்படுத்தியுள்ளார். இத்தகு தொன்மையும்,

பெருமையும் வாய்ந்த வணிகத்தை அடிப்படையாகக் கொண்டு வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறை செயல்பட்டு வருகின்றது.

வேளாண்மை விற்பனையானது, உற்பத்தியாளர்களையும், நுகர்வோர்களையும் பல்வேறு செயல்பாடுகளின் மூலம் இணைப்பதனால் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை, மதிப்புக் கூட்டல், தொழில் முனைவோருக்கான திறன், வணிக மேம்பாட்டில் விவசாயிகள் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பது போன்றவை வேளாண் வணிகத்தின் நடவடிக்கைகள் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு வேளாண் விற்பனை - வேளாண் வணிகத்துறையால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 5.1. வேளாண் விற்பனை

### 5.1.1. விற்பனைக் குழுக்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

அறிவிக்கை இடப்பட்ட பகுதிகளில் அறிவிக்கை இடப்பட்ட வேளாண் விளைபொருட்களின் பரிவர்த்தனையை முறைப்படுத்த விற்பனைக் குழுக்களும், ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 27 விற்பனைக்குழுக்களின் கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987 மற்றும் அதன் விதிகள் 1991-ன் படி ஏற்படுத்தப்பட்டு வேளாண் விளைபொருள் விற்பனை முறைப்படுத்தப்படுகிறது.

இதன் வாயிலாக விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இடைத்தரகர்கள் குறுக்கீடு இன்றி மறைமுக

ஏலமுறையில் பங்கு கொண்டு நல்ல விலை பெற்றுப் பயனடைகின்றனர்.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, திருவாரூர் மாவட்டத்தில் 50 உலர்களங்கள், நான்கு நெல் உலர்த்திகள், 11 சேமிப்பு கிடங்குகள் ரூ.30.50 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் புதிய, கூடுதல் கட்டமைப்புகள், சேமிப்புக் கிடங்குகளை மறுகட்டமைப்பு செய்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளை ரூ.161.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் (இணைப்பு –I)**

2022-23-ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத சாதனையாக 29.26 இலட்சம் மெ.டன், வேளாண்

விளை பொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு ரூ.142.44 கோடி வரவினமாக வரப்பெற்றுள்ளது. பொருளீட்டுக் கடன் வசதி அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ரூபாய் மூன்று இலட்சம் வரை ஐந்து சதவீத வட்டியில் வழங்கப்பட்டு, 2022-23-ஆம் ஆண்டில் 1,302 விவசாயிகள் ரூ.30.1 கோடி பெற்றுள்ளனர்.

விவசாயிகளுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்ய ஏதுவாக வர்த்தகர்களுக்கு அதிகபட்சமாக ரூபாய் இரண்டு இலட்சம் வரை பொருளீட்டுக் கடன் ஒன்பது சதவீத வட்டியில் வழங்கப்படுகிறது. பொருளீட்டுக் கடனாக 2022-23ஆம் ஆண்டில் 254 வர்த்தகர்கள் ரூ.4.58 கோடி பெற்றுள்ளனர்.

### 5.1.1.1. மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது (e-negotiable warehouse receipt)

**தமிழ்நாட்டில் முதன் முறையாக மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது முறை** செயல்படுத்த

ஏதுவாக 150 சேமிப்பு கிடங்குகள் வலுப்படுத்தப்பட்டு கிடங்கு மேம்பாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் (WRDA) அங்கீகாரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 107 கிடங்குகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இவ்வசதியைப் பயன்படுத்தி இதுவரை 6,593 மெ.டன் அளவிலான விளைபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு ரூ.12.13 கோடி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் வாயிலாக கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு தேசிய அளவில் முதன்மை மாநிலமாக உள்ளது.

## 5.1.2 மின்னணு தேசிய வேளாண் சந்தை (eNAM)

தமிழ்நாட்டில் அக்டோபர், 2017 முதல் இரண்டு கட்டங்களாக 127 சந்தைகள் மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டு, பரிவர்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 30 ஒழுங்குமுறை விற்பனைக்

கூடங்களில் மின்னணு வர்த்தகம் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


மின்னணு தேசிய வேளாண் சந்தைகளில், 2022-23-ஆம் ஆண்டில் ரூ.1,113 கோடி மதிப்பிலான 26.57 இலட்சம் எண்கள் தேங்காய்களும், 4.54 இலட்சம் மெ.டன் இதர விளைபொருட்களும் வர்த்தகம் செய்யப்பட்டு, 3.23 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.999.07 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. **தேசிய அளவில் மின்னணு பணப்பரிவர்த்தனையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கின்றது.**

மாநிலத்தில் உள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும் வர்த்தகம் செய்ய வர்த்தகர்களுக்கு இதுவரை 5,517 ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single licence) வழங்கப்பட்டுள்ளது.

சந்தைகளுக்கு இடையில் ரூ.247.02 கோடி மதிப்புடைய 92,170 மெ.டன் வேளாண் விளைபொருட்கள் 1,080 வர்த்தகர்கள் மூலம் 2022-23-ஆம் ஆண்டில் வர்த்தகம் செய்யப்பட்டுள்ளன.

2022-23-ஆம் ஆண்டில், மாநிலங்களுக்கு இடையில் மின்னணு தேசிய வேளாண் சந்தைகளிலிருந்து புதுச்சேரி யூனியன் பிரதேசம், உத்திரப்பிரதேச மாநிலம் ஆகியவற்றுடன் ரூ.199.66 இலட்சம் மதிப்புடைய 279.94 மெ.டன் பருத்தி, உளுந்து, துவரை, மக்காச்சோளம், உருளைக்கிழங்கு ஆகியனவற்றின் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது.

## 2017 ஆம் ஆண்டு முதல் ஆண்டு வாரியான இநாம் (eNAM) வர்த்தகம்




### 5.1.2.1. பண்ணை அளவிலான வர்த்தகம் (Farm Gate Trade in e-NAM):

விவசாயிகளின் போக்குவரத்து செலவினை குறைத்து அவர்கள் பயன்பெறும் வகையில் 2022-23-ஆம் ஆண்டில் மின்னணு தேசிய வேளாண் சந்தையில் **பண்ணை அளவிலான வர்த்தகம்** தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.6.46 கோடி மதிப்புடைய 5.37 இலட்சம் எண்கள்

தேங்காய் மற்றும் 2,425 மெ.டன் இதர வேளாண் விளைபொருட்கள் நேரடியாக விவசாயிகளின் விளைநிலங்களிலிருந்து இ-நாம் (e-NAM) வலைதளத்தின் வாயிலாக வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5.2. வேளாண் வணிகம்


### 5.2.1. உழவர் சந்தை

விவசாயிகளும், நுகர்வோர்களும் பயன்பெறும் விதமாக உழவர் சந்தை திட்டம் 1999 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் முற்போக்கு சிந்தனையுடன் தொடங்கப்பட்டு, தற்போது 183 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

சராசரியாக ரூ.6.70 கோடி மதிப்புள்ள 2,000 மெ.டன் காய்கனிகள் 8,000 விவசாயிகளால் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான நுகர்வோர்களுக்கு தினந்தோறும் விற்பனை செய்யப்படுகிறது. "உழவன் செயலியில்"

(Uzhavan App) உழவர் சந்தைகளின் தினசரி விலை விவரங்கள் தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### உழவர் சந்தைகளில் நாள் ஒன்றின் சராசரி வரத்து




கடந்த 2021-22ஆம் ஆண்டு, 50 உழவர் சந்தைகள் ரூ.12.50 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 10 புதிய உழவர் சந்தைகள் ரூ.4.53 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, ரூ.1.81 கோடி மதிப்பீட்டில் நான்கு புதிய உழவர் சந்தைகள் திறக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

அன்றாட காய்கனி விலை நிலவரங்களை அறிந்து கொள்ள ஏதுவாக, 50 உழவர் சந்தைகளில் ரூ.1.15 கோடி செலவில் மின்னணு விலைப்பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தைகளில் உருவாகும் கழிவுகளை உரமாக்கிடும் பொருட்டு 25 உழவர் சந்தைகளில் ரூ.2.75 கோடி செலவில் உரமாக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு, இதுவரை 5.10 மெ.டன் மட்கு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2022-23-ஆம் ஆண்டில் 50 உழவர் சந்தைகளை ரூ.15 கோடி செலவில் புதுப்பிக்கும் பணிகளும், 10 புதிய உழவர் சந்தைகளை ரூ.7.50 கோடி செலவில் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஐம்பது உழவர் சந்தைகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மதிப்புக்-கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.3.50 கோடி மதிப்பிலான பொருட்கள் விற்பனை

செய்யப்பட்டுள்ளன. மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினருக்கும் கடைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் 25 உழவர் சந்தைகள் ரூ.8.75 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ளன. 50 உழவர் சந்தைகளுக்கு ரூ.25 இலட்சம் செலவில் **உணவு பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையத்தின் சான்று** பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும், 25 உழவர் சந்தைகளில் தொன்மைசார் உணவகங்கள் தனியார் பங்களிப்புடன் உருவாக்கப்பட உள்ளன.

### 5.2.1.1. இல்லம் தேடி பண்ணை காய்கறிகள்

விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் படித்த இளைஞர்கள் பயனடையும் வகையில் சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய ஐந்து மாநகராட்சி பகுதிகளில் 30 நடமாடும் காய்கனி அங்காடிகள் வாங்குவதற்கு வாகனம் ஒன்றிற்கு மானியமாக ரூபாய் இரண்டு இலட்சம்

வழங்கப்படுகிறது. இதுவரை, 20 வாகனங்களுக்கு ரூ.40 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 5.2.2. வேளாண் விளைபொருட்களுக்கான மதிப்பு கூட்டும் மையங்களை உருவாக்குதல்:

கடலூர் மாவட்டம் தொழுதூரில் மக்காச்சோளம் மதிப்புக்கூட்டு மையம் ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2022-23ஆம் ஆண்டில் இம்மையத்தின் மூலம் 1,394 மெ.டன் தீவனம் தயாரிக்கப்பட்டு ரூ.2.93 கோடி மதிப்பிலான வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சிறுதானியங்கள், மிளகு பதப்படுத்தும் மையம், காபி கொட்டை உடைத்து தரம் பிரிக்கும் இயந்திரம் மற்றும் மிளகு தரம் பிரித்து பொடி செய்யும் இயந்திரம் கொண்ட வணிக மையம், தென்னைக்கான மதிப்புக்கூட்டும் மையம் போன்ற வேளாண் வணிக வசதிகள்

ரூ.9.20 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

**5.2.3. குளிர்பதனக் கிடங்கு வசதிகள்:**

பழங்களும் காய்கறிகளும் அழுகுவதால் ஏற்படும் இழப்பினைத் தடுக்க தமிழ்நாட்டில் 17,467 மெ.டன் கொள்ளளவு கொண்ட 187 குளிர்பதன கிடங்குகளை 2022-23ஆம் ஆண்டில் 5,623 விவசாயிகளும், 28 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும், 110 வர்த்தகர்களும் பயன்படுத்தி உள்ளனர்.

மேலும், ரூ.110 கோடி மதிப்பீட்டில் 22,900 மெ.டன் கொள்ளளவு கொண்ட பெரிய அளவிலான ஒன்பது குளிர்பதன கிடங்குகளும், ஐந்து மெ.டன் கொள்ளளவு கொண்ட சூரிய சக்தியால் இயங்கக் கூடிய 80 குளிர்பதன கிடங்குகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2023-24ஆம் ஆண்டில் 31,000 மெ.டன் கொள்ளளவிலான **25 குளிர்பதன**

**கிடங்குகளுக்கு கிடங்கு மேம்பாடு – ஒழுங்குமுறை ஆணையத்தின் (WDRA) அங்கீகாரம்** பெற்று மின்னணு மாற்றத்தகு கிடங்கு இரசீது பெற திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2.4 கரும்பு விவசாயிகள் உயர்தர வெல்லம் தயாரிக்க நிதி ஆதரவு:

கரும்பு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, திருப்பூர், கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் கரும்பிலிருந்து உயர்தர வெல்லம் தயாரிக்கும் மையங்கள் ரூபாய் ஒரு கோடி மானியத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 20 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

### 5.2.5 விநியோகத் தொடர் மேலாண்மை

இத்திட்டத்தின் கீழ் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட்களின் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைக்க முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் 64 முதன்மை பதப்படுத்தும் மையங்கள், சிப்பம் கட்டும் அறை, குளிர்பதனக் கிடங்கு, சேமிப்புக் கிடங்கு ஆகிய கட்டமைப்புகளுடன் சுத்தம் செய்தல், தரம் பிரித்தல், முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் போன்ற வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. (இணைப்பு-III)

இம்முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் மூலம் 1,15,250 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் கையாளப்பட்டுள்ளன. சராசரியாக

நாளொன்றுக்கு 110 முதல் 200 மெ.டன் அளவுள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் கையாளப்படுகின்றன. இதுவரை 1,54,786 விவசாயிகள் முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

இரண்டாம் கட்டமாக சேலம், ஈரோடு, திருவள்ளூர், காஞ்சிபுரம் (செங்கல்பட்டு உட்பட), திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கரூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. (இணைப்பு-IV)

இதற்கான கட்டுமான பணிகள் முடிவடைந்து முதன்மை பதப்படுத்தும் நிலையங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரும் பொருட்டு சந்தை ஒருங்கிணைப்புப் பங்குதாரர்களைத் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 5.2.6. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத் துறையின் கீழ் 381 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு, தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் ஆகிய திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

### 5.2.6.1 தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு (TNSFAC)

தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் மூலம் 318 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.78.91 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

## அ. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான மாநில அரசு திட்டம்

| வ. எண் | இனங்கள் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) | விடுவிக்கப்பட்ட தொகை (ரூ. கோடியில்) | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இடைநிலை மூலதன உதவி | 25.00 | 24.28 | 286 |
| 2. | சலுகையுடன் கூடிய சுழல் நிதி | 41.67 | 14.23 | 111 |
| 3. | கடன் உத்தரவாதம் | 12.50 | 5.41 | 36 |
| | **மொத்தம்** | **79.17** | **43.92** | **433** |

## ஆ. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான இதர ஆதரவுகள்

i. 30 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் 28 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

ii. ஒன்றுபட்ட ஒற்றை உரிமம் (Unified Single Licence) 211 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

iii. eNAM வலைதளத்தில் 23 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் 1,089 மெ.டன் விளைபொருட்களை ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் வர்த்தகம் மேற்கொண்டுள்ளனர்.

iv. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிடம் இருந்து 23.83 மெ.டன் சிறுதானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டு சென்னை, கோயமுத்தூரில் உள்ள கூட்டுறவு அங்காடிகளிலும், நியாய விலை கடைகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

v. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் விளைபொருட்கள், மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக மாநகராட்சி பகுதிகளில் 50

சிறப்பு அங்காடிகளை அமைக்க ரூபாய் ஐந்து கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

vi. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் பட்டறிவுப் பயணம் 310 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு (53 அணிகளுக்கு) ரூபாய் இரண்டு கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலமாக 2021-22 முதல் மூன்று ஆண்டுகள் நடத்திட திட்டமிடப்பட்டு, இதுவரை 25 அணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

vii. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக நிபுணர்களைக் கொண்ட "உழவர் உற்பத்தியாளர் நிறுவன மேலாண்மை மையம்" வேளாண்மை விற்பனை - வேளாண் வணிக இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது.

viii. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் வசதிக்காக மாவட்ட அளவிலான பட்டயக் கணக்காளர்கள், நிறுவன செயலாளர்கள் உரிய கட்டணத்தில் சேவைகளை வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ix. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்த ஏதுவாக ரூ.15 இலட்சம் செலவில் நவீன சிப்பம் கட்டுதல் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

x. இத்துறை பற்றிய விவரங்களை கேட்டறிய கட்டணமில்லா தொலைபேசி எண். 1800 425 1907 (அலுவலக நேரத்தில்) மற்றும் புலனம் (WhatsApp) எண்.7200818155 ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 5.2.6.2. தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP)

இத்திட்டம், 2017-18 முதல் 66 உபவடி பகுதிகளில் ரூ.125 கோடி மதிப்பீட்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான நிதி ஆதரவு அளிக்கும் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், தொடக்க மானியமாக ரூ.10 இலட்சமும், உற்பத்தி முதலீட்டு மானியம் ரூ.20 இலட்சமும், திறம்பட செயல்படும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக விரிவாக்க மானியமாக ரூ.30 இலட்சமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2022-23ஆம் ஆண்டில் இதுவரை தொடக்க மானியமாக 19 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.95 இலட்சமும், உற்பத்தி முதலீட்டு மானியமாக

13 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.2.60 கோடியும் மற்றும் 19 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக விரிவாக்க மானியமாக ரூ.5.70 கோடியும் ஆக மொத்தம் ரூ.9.25 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

| உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வாரியான வணிகப் பரிவர்த்தனை | | |
|---|---|---|
| வணிகப் பரிவர்த்தனை (ரூ. இலட்சத்தில்) | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கை | |
| | 2021-22 | 2022-23 |
| >100 | 14 | 25 |
| 50-100 | 37 | 71 |
| 25-50 | 55 | 84 |
| 10 to 25 | 91 | 123 |
| <10 | 184 | 78 |

## 5.2.7. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் 2021-22ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 50

உலர்களங்கள், ரூ.5.25 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2022-23ஆம் ஆண்டில் 135 உலர்களங்கள் ரூ.14.17 கோடி மதிப்பீட்டில் கிராம அளவில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், நடப்பாண்டில் 250 உலர்களத்துடன் கூடிய தரம்பிரிப்பு கூடங்கள் ரூ.85 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளன.

**5.2.8. உணவு பதப்படுத்துதல்**

**5.2.8.1. சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் அமைத்தல்**

ஐக்கிய நாடுகள் சபை, 2023-ஆம் ஆண்டினை "**சர்வதேச சிறுதானிய ஆண்டாக**" அறிவித்துள்ளதை தொடர்ந்து, நடப்பாண்டில் சிறுதானியங்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்து விவசாயிகளுக்கு கூடுதல் இலாபம் கிடைத்திடும் வகையில் சிறுதானிய பதப்படுத்தும் மையங்கள் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2.9. வேளாண் கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் கடன் வசதி பெறும் திட்டம்

அறுவடைக்குப்பின் மேலாண்மை செயல்பாடுகள், விளைபொருட்கள் வீணாவதைத் தடுக்க தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான கடன் உதவிகள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. விவசாயிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் தொழில் முனைவோர் ஆகியோர் பயன் பெறுவர்.

திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இதுவரை 2,837 கடன் விண்ணப்பங்கள் பரிசீலினை செய்யப்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு ரூ.636.63 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

### 5.2.10. அக்மார்க் தரம் பிரிப்பு

அக்மார்க் சின்னம் சரியான எடையுடன் தரமான, கலப்படமற்ற உணவுப் பொருட்களுக்கு

அரசின் உத்தரவாதத்தை உறுதி செய்கின்றது. நிர்ணயித்த தரத்தினை உறுதிப்படுத்திட, 30 மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகங்களும், ஒரு முதன்மை ஆய்வகமும் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன.

இதுவரை இத்திட்டத்தில் 232 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

2022-23-ஆம் நிதியாண்டில் 3.86 இலட்சம் மெ.டன் உணவுப்பொருட்கள் தரம்பிரிப்பு செய்யப்பட்டு, தரம் பிரிப்பிற்கான ஆய்வுக் கட்டணமாக அரசுக்கு ரூ.91.30 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

### 5.2.11. துறைப் பணியாளர்கள் விவரம்

இத்துறையில் 1,343 துறைப் பணியாளர்களும் 1,674 விற்பனைக்குழுப் பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

## அட்டவணை: 5.1- துறைப் பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 2 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் (வேவ) | 37 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 5 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 170 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 47 |
| 7 | உதவி வேளாண்மை அலுவலர் | 627 |
| 8 | ஆட்சி அலுவலர் | 1 |
| 9 | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 10 | இதர பணியாளர்கள் | 452 |
| | மொத்தம் | **1,343** |

## அட்டவணை: 5.2- விற்பனைக்குழு பணியாளர்கள் விவரம்

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர் | 2 |
| 2 | முதுநிலை செயலாளர் | 2 |

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 3 | செயலாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் | 11 |
| 4 | செயலாளர் | 11 |
| 5 | கண்காணிப்பாளர் | 202 |
| 6 | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 7 | மேற்பார்வையாளர் | 346 |
| 8 | இதர பணியாளர்கள் | 1,091 |
| | மொத்தம் | **1,674** |

## 5.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியமானது, 1970-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் 1987-ன்படி சட்ட பூர்வ வாரியமாக திருத்தி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 5.3.1. நிதி ஆதாரம்

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துல்) சட்டம் 1987-ன் படி,

விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக்கட்டணம், சந்தை கட்டண தொகையிலிருந்து, 15 சதவீதம் பங்குத் தொகையாக பெறப்பட்டு சந்தை மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 5.3.2. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

### 5.3.2.1. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

இவ்வாரியத்தின் பயிற்சி மையம், சேலம் மாவட்டம் உத்தமசோழபுரத்தில் செயல்பட்டு வருகிறது. வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறையை சார்ந்த அனைத்து நிலை தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பினை உருவாக்கி கொள்ளும் வகையில் உணவு பதப்படுத்தும்

தொழில்நுட்பம் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022-23ஆம் ஆண்டில் ரூ.21 இலட்சம் மதிப்பில் 857 தொழில்நுட்ப அலுவலர்கள், விவசாயிகள், ஊரக இளைஞர்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில் 35 பயிற்சிகள் நடத்தப்பட்டன. 2023-24ஆம் ஆண்டில் அலுவலர்கள், விவசாயிகள் பயனடையும் வகையில் இப்பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

### 5.3.2.2. கட்டுமானப் பணிகள் / பராமரிப்புப் பணிகள்

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் வளர்ச்சிப்பணிகள், வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகம் சார்ந்த கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பராமரிக்கும் வகையில் வாரியத்தில் கட்டுமானப் பிரிவு செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவின் மூலம் 2022-23ஆம் ஆண்டில் ரூ.65 கோடி மதிப்பிலான கட்டமைப்பு

வசதிகள் உருவாக்கப்பட்டன. 2023-24ஆம் ஆண்டிலும் இத்திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 5.3.2.3. விலை ஆதரவுத் திட்டம்

பயறு வகைகள், கொப்பரைத் தேங்காய் ஆகியவற்றின் அறுவடைக் காலத்தில் ஏற்படும் சந்தைவிலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் குறைந்தபட்ச ஆதரவு விலையில் அவற்றைக் கொள்முதல் செய்திட "விலை ஆதரவுத் திட்டம்" தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில், ரூ.450 கோடி மதிப்பிலான 4,690 மெ.டன் பயறுவகைகள், 39,515 மெ.டன் கொப்பரைத் தேங்காய், 38,205 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டன. நடப்பு ராபி கொள்முதல் பருவத்தில், 60,203 மெ.டன் உளுந்து, 12,605

மெ.டன் பச்சைப்பயறு, 56,000 மெ.டன் கொப்பரை ஆகியன கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 5.3.2.4. வேளாண் ஏற்றுமதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

ஏற்றுமதியில் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் சென்னையில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிக்கு ரூபாய் இரண்டு இலட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

உணவுப்பொருட்களில் பூச்சிக்கொல்லி மருந்தின் நச்சுத்தன்மையினை பரிசோதனை செய்வதற்கான ஆய்வகங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் தலா ஒன்பது கோடி ரூபாய் திட்ட மதிப்பில் நிறுவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்திட மாநில அளவில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 10 கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

### 5.3.2.5 புவிசார் குறியீடு

மாநிலத்தின் தனித்துவமான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 2022-23ஆம் ஆண்டில் சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, பண்ருட்டி முந்திரி உள்ளிட்ட 10 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

நடப்பு 2023-24ஆம் ஆண்டிலும், கிருஷ்ணகிரி அரசம்பட்டி தேங்காய், கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா, தஞ்சாவூர் பேராவூரணி தேங்காய், மூலனூர் முருங்கை, தூத்துக்குடி விளாத்திகுளம் மிளகாய், சாத்தூர் வெள்ளரி, கடலூர் கோட்டிமுளை கத்தரிக்காய்,

தஞ்சாவூர் வீரமாங்குடி அச்சுவெல்லம், மதுரை செங்கரும்பு மற்றும் சிவகங்கை கருப்புகவுனி அரிசி ஆகிய 10 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 5.3.2.6 முருங்கை ஏற்றுமதி மண்டலம்

முருங்கை, அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதித் திறனை கருத்தில் கொண்டு, தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர், மதுரை ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக மதுரையில் முருங்கைக்கான சிறப்பு ஏற்றுமதி சேவை மையம் துவங்கி செயல்பட்டு வருகின்றது.

இரண்டாம் கட்டமாக, முருங்கை மதிப்பு கூட்டுவதற்கான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### 5.3.2.7. சிறிய உணவுப் பூங்காக்கள் - வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைத்தல்

கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம், மதுரை ஆகிய ஏழு இடங்களில் ரூ.191.88 கோடி மதிப்பீட்டில் தலா 10 ஏக்கர் பரப்பளவில் சிறிய உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### 5.3.2.8. பன்னாட்டு மலர் ஏல மையம்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் மலர்களுக்கான பன்னாட்டு ஏல மையம் ரூ.20.20 கோடி மதிப்பீட்டில் விவசாயிகள், ஏற்றுமதியாளர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மலர் ஏலத்திற்கான மென்பொருள் மேம்படுத்தப்பட்டு சோதனை ஓட்டம் முடிந்து தற்போது மின்னணு முறையில் ஏலம் நடைபெற்று வருகிறது.

### 5.3.2.9. தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள்

கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகளை விவசாயிகளும், வணிகர்களும் இணையவழி முறையில் பதிவு செய்யவும், வணிகர்களுக்கு உரிமம் வழங்கவும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களைக் கண்காணிக்கவும், அவர்தம் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்யவும் (இ-மார்க்கெட் தளம்), உழவர் சந்தையில் காய்கனி வரத்து, விற்பனை மற்றும் விலையினை தகவல் பரிமாற்றம் செய்திட ஏதுவாக ரூபாய் ஒரு கோடி மதிப்பில், மென்பொருள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) உதவியுடன் உருவாக்கப்பட்டு வருகின்றன.

# இணைப்பு I

## வேளாண்மை விற்பனை - வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

### (அலகு எண்களில்)

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் | ஒருங்கிணைந்த வேளாண் வணிக வளாகங்கள் | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 4 | -- | 7 | 4000 | -- | -- | 6 | -- | 7 | -- | -- | 8 |
| 2 | செங்கல்பட்டு | 9 | -- | 2 | 2600 | -- | -- | 1 | -- | 2 | -- | -- | 8 |
| 3 | திருவள்ளூர் | 6 | -- | 10 | 12800 | -- | -- | 5 | -- | 7 | -- | -- | 12 |
| 4 | கடலூர் | 5 | -- | 15 | 20100 | 4 | 77 | 29 | 76 | 16 | -- | -- | 16 |
| 5 | விழுப்புரம் | 3 | -- | 18 | 41600 | 2 | 40 | 38 | 31 | 12 | -- | -- | 11 |
| 6 | கள்ளக்குறிச்சி | 3 | -- | 17 | 23500 | 2 | 50 | 29 | 13 | 7 | -- | -- | 10 |
| 7 | வேலூர் | 4 | -- | 8 | 5000 | 2 | 27 | 4 | 25 | 3 | -- | -- | 6 |
| 8 | இராணிப் பேட்டை | 2 | -- | 10 | 8500 | -- | -- | 10 | 11 | 6 | -- | -- | 8 |
| 9 | திருப்பத்தூர் | 3 | -- | 8 | 7250 | 2 | 27 | 1 | 4 | 2 | -- | -- | 6 |
| 10 | திருவண்ணாமலை | 8 | -- | 33 | 35100 | 7 | 175 | 47 | 50 | 12 | -- | -- | 19 |
| 11 | தருமபுரி | 5 | 5 | 8 | 7600 | 7 | 1310 | 6 | 10 | 10 | 1 | -- | 14 |
| 12 | கிருஷ்ணகிரி | 5 | 10 | 10 | 9600 | 21 | 1547 | 3 | 13 | 11 | 1 | 1 | 14 |
| 13 | சேலம் | 11 | -- | 17 | 15000 | 12 | 260 | 17 | 20 | 18 | -- | 1 | 14 |
| 14 | நாமக்கல் | 6 | -- | 9 | 7850 | 6 | 84 | 4 | -- | 7 | 1 | -- | 12 |
| 15 | ஈரோடு | 6 | -- | 42 | 54352 | 7 | 1225 | 36 | 37 | 40 | 3 | -- | 16 |
| 16 | திருப்பூர் | 6 | -- | 60 | 81900 | 6 | 152 | 33 | 10 | 47 | 2 | -- | 8 |
| 17 | கோயம்புத்தூர் | 8 | 7 | 31 | 26405 | 20 | 1694 | 19 | 51 | 30 | 3 | -- | 12 |
| 18 | நீலகிரி | 4 | 9 | -- | -- | 9 | 592 | 1 | -- | -- | -- | 1 | 9 |
| 19 | பெரம்பலூர் | 2 | -- | 2 | 2500 | 2 | 75 | 1 | -- | 1 | 1 | -- | 8 |
| 20 | அரியலூர் | 2 | -- | 5 | 5500 | 1 | 25 | 14 | -- | 7 | -- | -- | 11 |
| 21 | திருச்சிராப்பள்ளி | 8 | 12 | 14 | 13000 | 12 | 3282 | 15 | 5 | 21 | 4 | -- | 13 |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெடன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெடன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் | ஒருங்கிணைந்த வேளாண் வணிக வளாகங்கள் | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22 | கரூர் | 5 | -- | 2 | 1000 | 1 | 25 | 1 | -- | -- | -- | -- | 9 |
| 23 | தஞ்சாவூர் | 5 | -- | 29 | 41650 | 2 | 125 | 22 | 16 | 6 | 2 | -- | 15 |
| 24 | திருவாரூர் | 7 | -- | 27 | 30100 | -- | -- | 9 | -- | 58 | -- | -- | 9 |
| 25 | நாகப்பட்டினம் | 1 | -- | 14 | 11820 | -- | -- | 4 | -- | -- | -- | -- | 7 |
| 26 | மயிலாடுதுறை | 2 | -- | 4 | 3500 | -- | -- | 7 | -- | 5 | -- | -- | 4 |
| 27 | புதுக்கோட்டை | 6 | -- | 7 | 4600 | 2 | 125 | 3 | -- | 4 | 1 | -- | 12 |
| 28 | மதுரை | 7 | -- | 13 | 15900 | 2 | 27 | 4 | -- | 9 | 1 | 1 | 13 |
| 29 | திண்டுக்கல் | 6 | 5 | 14 | 19200 | 9 | 1115 | 6 | 105 | 11 | 1 | -- | 12 |
| 30 | தேனி | 7 | 5 | 12 | 13500 | 12 | 722 | 8 | -- | 9 | 3 | -- | 9 |
| 31 | விருதுநகர் | 8 | -- | 15 | 17200 | 3 | 150 | 5 | 55 | 5 | -- | -- | 11 |
| 32 | சிவகங்கை | 5 | -- | 17 | 16450 | 1 | 25 | 3 | -- | 7 | -- | -- | 9 |
| 33 | இராமநாதபுரம் | 3 | 3 | 9 | 13050 | 6 | 2155 | 3 | 136 | 11 | 1 | -- | 9 |
| 34 | திருநெல்வேலி | 5 | 2 | 8 | 10800 | 5 | 72 | 4 | 3 | 5 | 2 | -- | 8 |
| 35 | தென்காசி | 2 | 3 | 6 | 12000 | 9 | 1980 | 6 | 40 | 5 | -- | -- | 7 |
| 36 | தூத்துக்குடி | 2 | 3 | 18 | 20100 | 11 | 277 | 7 | 6 | 5 | 1 | -- | 7 |
| 37 | கன்னியாகுமரி | 2 | -- | 11 | 10500 | 2 | 27 | 3 | 85 | 5 | 2 | -- | 5 |
|  | **மொத்தம்** | **183** | **64** | **532** | **625527** | **187** | **17467** | **414** | **802** | **411** | **30** | **4** | **381** |

# இணைப்பு II

## மாவட்டம் மற்றும் விற்பனைக்குழு வாரியாக மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் மற்றும் மின்னணு அல்லாத சந்தைகள்

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத சந்தைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 3 | 2 | 1 |
| 2 | செங்கல்பட்டு | | 4 | 1 | 3 |
| 3 | திருவள்ளூர் | | 8 | 3 | 5 |
| 4 | கடலூர் | கடலூர் | 11 | 7 | 4 |
| 5 | விழுப்புரம் | விழுப்புரம் | 11 | 8 | 3 |
| 6 | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி | 8 | 6 | 2 |
| 7 | வேலூர் | வேலூர் | 3 | 2 | 1 |
| 8 | இராணிப் பேட்டை | | 6 | 3 | 3 |
| 9 | திருப்பத்தூர் | | 3 | 2 | 1 |
| 10 | திருவண்ணா மலை | திருவண்ணா மலை | 18 | 8 | 10 |
| 11 | தருமபுரி | தருமபுரி | 7 | 3 | 4 |
| 12 | கிருஷ்ணகிரி | | 9 | 3 | 6 |
| 13 | சேலம் | சேலம் | 14 | 10 | 4 |
| 14 | நாமக்கல் | நாமக்கல் | 6 | 2 | 4 |
| 15 | ஈரோடு | ஈரோடு | 18 | 14 | 4 |
| 16 | திருப்பூர் | திருப்பூர் | 15 | 9 | 6 |
| 17 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 10 | 9 | 1 |
| 18 | நீலகிரி | நீலகிரி | 4 | 0 | 4 |

| வ. எண் | மாவட்டம் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் | மின்னணு தேசிய வேளாண் சந்தைகள் | மின்னணு அல்லாத சந்தைகள் |
|---|---|---|---|---|---|
| 19 | பெரம்பலூர் | பெரம்பலூர் | 2 | 1 | 1 |
| 20 | அரியலூர் | | 4 | 1 | 3 |
| 21 | திருச்சிராப்-பள்ளி | திருச்சிராப்-பள்ளி | 10 | 5 | 5 |
| 22 | கரூர் | | 4 | 0 | 4 |
| 23 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 13 | 6 | 7 |
| 24 | திருவாரூர் | திருவாரூர் | 8 | 4 | 4 |
| 25 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | 4 | 1 | 3 |
| 26 | மயிலாடுதுறை | | 4 | 4 | 0 |
| 27 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 10 | 3 | 7 |
| 28 | மதுரை | மதுரை | 6 | 5 | 1 |
| 29 | திண்டுக்கல் | திண்டுக்கல் | 8 | 7 | 1 |
| 30 | தேனி | தேனி | 7 | 4 | 3 |
| 31 | விருதுநகர் | விருதுநகர் | 7 | 4 | 3 |
| 32 | சிவகங்கை | சிவகங்கை | 7 | 5 | 2 |
| 33 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 6 | 6 | 0 |
| 34 | திருநெல்-வேலி | திருநெல்வேலி | 4 | 3 | 1 |
| 35 | தென்காசி | | 7 | 4 | 3 |
| 36 | தூத்துக்குடி | | 9 | 1 | 8 |
| 37 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 6 | 1 | 5 |
| | **மொத்தம்** | | **284** | **157** | **127** |

# இணைப்பு -III.

# விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்

# கட்டம் – I

# முதன்மை பதப்படுத்தும் நிலையங்களின் விவரங்கள்

| வ. எண். | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி (10) | ஓசூர், காமன்தொட்டி, தேன்கனிக்-கோட்டை, தட்டிகானப்பள்ளி, இராயக்கோட்டை, ஆலப்பட்டி, குந்தாரப்பள்ளி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், போச்சம்பள்ளி. |
| 2. | தருமபுரி (5) | பென்னாகரம் (கூட்டுறவு விற்பனை சங்கம்), பாலக்கோடு, தருமபுரி, அரூர், பாப்பாரப்பட்டி. |
| 3. | கோயம்புத்தூர் (7) | சிக்கதாசம்பாளையம், சூலூர், வடக்கிபாளையம், பூலுவாப்பட்டி, பிச்சனூர், ஆனைமலை, பொள்ளாச்சி. |
| 4. | நீலகிரி (9) | ஓசஹட்டி, அணிக்கொரை, தாவணை, உதகை ரோஜா பூங்கா, நீலகிரி (கூட்டுறவு விற்பனை சங்கம்), புது அலஞ்சி, சுள்ளிக்கூடு, உப்பட்டி, அய்யங்கொல்லி. |

| வ. எண். | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் |
|---|---|---|
| 5. | திருச்சிராப்பள்ளி (12) | லால்குடி, மண்ணச்சநல்லூர் – I, மண்ணச்சநல்லூர் – II, திருச்செந்துறை, பி.கே. அகரம், அரசலூர், பிடாரமங்கலம், துறையூர் (கூட்டுறவு விற்பனை சங்கம், உப்பிலியாபுரம் (தெற்கு), தாத்தையங்கார்பேட்டை, கள்ளிக்குடி, எம்.புத்தூர். |
| 6. | திண்டுக்கல் (5) | பழனி, பழனி (கூட்டுறவு விற்பனை சங்கம்), கோபால்பட்டி, கவுஞ்சி, வேடசந்தூர். |
| 7. | தேனி (5) | தேனி, சின்னமனூர், கம்பம் – I, கம்பம் - II , பெரியகுளம். |
| 8. | இராமநாதபுரம் (3) | பரமக்குடி, முதுகுளத்தூர், கமுதி (கூட்டுறவு விற்பனை சங்கம்). |
| 9. | தூத்துக்குடி (3) | ஸ்ரீவைகுண்டம், புதூர், விளாத்திக்குளம். |
| 10. | திருநெல்வேலி (2) | இராமையன்பட்டி, வள்ளியூர். |
| 11. | தென்காசி (3) | பாவூர்சத்திரம், சங்கரன்கோவில், கடையநல்லூர். |

# இணைப்பு-IV.

## விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்

## கட்டம் – II

## முதன்மை பதப்படுத்தும் நிலையங்களின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் / எண்ணிக்கை விவரம் |
|---|---|---|
| 1. | சேலம் (5) | உத்தமசோழபுரம், தலைவாசல், வாழப்பாடி, எடப்பாடி, கொளத்தூர். |
| 2. | ஈரோடு (2) | அளுக்குளி, அந்தியூர். |
| 3. | திருவள்ளூர் (2) | திருவள்ளூர், ஆரணி. |
| 4. | காஞ்சிபுரம் (1) | சுங்குவார்சத்திரம். |
| 5. | செங்கல்பட்டு (1) | மதுராந்தகம். |
| 6. | திருவண்ணாமலை (2) | படவேடு, குப்பநத்தம். |
| 7. | கடலூர் (2) | பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி. |
| 8. | விழுப்புரம் (2) | ஒலக்கூர், வானூர். |
| 9. | கரூர் (3) | அரவக்குறிச்சி, மகாதானபுரம், வேலாயுதம்பாளையம். |

## 6. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

தமிழ்நாட்டில் வறுமையை ஒழித்து உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அரசின் நலத்திட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளின் வாயிலாக, அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது,

வேளாண்மையில் மனித வளமேம்பாடு, உணவு உற்பத்தியில் தன்னிறைவு மற்றும் உற்பத்தித்திறன் உயர்வுக்கும் விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்கும், பல்வேறு உறுப்புக் கல்லூரிகள், ஆராய்ச்சி மற்றும் அறிவியல்

நிலையங்கள் மூலம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் வேளாண் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு கடந்த வருடம் (2022-23) ரூ.560.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டது (இணைப்பு-1).

நடப்பு நிதி ஆண்டில் (2023 – 24) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.586.02 கோடி நிதி தலையாய பணிகளை செவ்வனே மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதல் முறையாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.100 கோடி வைப்பு நிதியாக வேளாண் ஆராய்ச்சித் தரத்தினை மேம்படுத்த வழங்கப்படும்.

## 6.1 வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 12 இளநிலை, 32 முதுநிலை மற்றும்

28 முனைவர் பட்டப் படிப்புகளை தனது 18 உறுப்புக் கல்லூரிகள் வாயிலாக வழங்கி வருகின்றது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நான்கு உறுப்புப் பட்டயப்படிப்பு நிறுவனங்கள், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் பட்டயப்படிப்பினையும் வழங்கி வருகின்றன.

2011-12 ஆம் ஆண்டில் 9,652 ஆக இருந்த இளநிலை பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் 2022-23 ஆம் ஆண்டில் 39,489 ஆக பன்மடங்கு அதிகரித்துள்ளது.

**அட்டவணை:6.1.மாணவர்கள்சேர்க்கை (2022-23)**

| படிப்பு விபரம் | சேர்க்கை |
|---|---|
| இளநிலை (Under Graduate) | 5,050 |
| முதுநிலை (Post Graduate) | 483 |
| ஆராய்ச்சி (Doctorate) | 218 |
| பட்டயப்படிப்பு (Diploma) | 427 |
| உறுப்பு, இணைப்புக் கல்லூரிகளில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 6,178 |

### 6.1.1 புதுமைப்பெண் திட்டம்

அரசு பள்ளிகளில் கற்கும் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளிகளில் ஆறு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த மாணவிகளுக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் உயர் கல்வி உறுதித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், சென்ற ஆண்டில் 591 மாணவிகள் விண்ணப்பித்ததில், 448 மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

### 6.1.2 கல்வி உதவி

சென்ற ஆண்டு இளநிலை மாணவர்களுக்கான சமுதாயம் சார்ந்த கல்வி நிதிகள், 2,950 பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும், 1,768 மிகவும் பிற்படுத்தப்பட்ட

மாணவர்களுக்கும், 1,054 ஆதி திராவிடர் மற்றும் 296 பழங்குடியின மாணவர்களுக்கும், வழங்கப்பட்டது.

### 6.1.3 கட்டமைப்பு வசதிகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில், புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் கரூர், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் மற்றும் சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு ஆகிய இடங்களில் மூன்று வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் அமைக்க தமிழ்நாடு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, கல்லூரி செயல்பட துவங்கியுள்ளது.

செட்டிநாட்டில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின், கட்டமைப்பு வசதிகளை, வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி

(NABARD) RIDF XXVIII நிதியுதவியின் கீழ் ரூ.61.79 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

### 6.1.4 சமூக நலப் பணிகள்

இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களில் முன்னோடியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து ஒரே இடத்தில் ஒரு குழு நான்கு மணி நேரத்தில் 6,03,009 மரங்களை வெற்றிகரமாக நட்டு முடித்து, 'எலைட் புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்டில்' இடம்பிடித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பூச்சி அருங்காட்சியகத்தைப் மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் 2022-23-ஆம் நிதியாண்டில் ரூ.1.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நடப்பு நிதியாண்டில் (2023-24) ரூ. 3 கோடி மதிப்பில்

பூச்சி அருங்காட்சியகத்தை வலுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மதுரையில், வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மாநில அளவிலான உழவர் தின விழா (14.10.2022 முதல் 16.10.2022 வரை) நடைபெற்றது. இவ்விழாவில், 27,000 விவசாயிகளும் 4,200 மாணவர்களும் கலந்துகொண்டு, பயனடைந்தனர்.

### 6.1.5 மாணவர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு ஆலோசனை

மாணவர் நல மையம், மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள், தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை நடத்தி ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கி இந்தியா மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி தருவதை

நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி 78 மாணவர்களுக்கும், ஜெர்மன் மொழிப்பயிற்சி 23 மாணவர்களுக்கும் பிரஞ்சு மொழிப் பயிற்சி 74 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. மாணவர்களின் வேலை வாய்ப்பிற்காக, வங்கி வேலைவாய்ப்பு பயிற்சி 62 மாணவர்களுக்கும் குடிமைப்பணிக்கான பயிற்சிகள் 42 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

மாணவர் நல மையம் வாயிலாக 2022-23 ஆம் ஆண்டில் மொத்தம் 226 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்-பட்டுள்ளனர். வேளாண் தொழில் நிறுவனங்களில் 157 மாணவர்களும், வங்கிகளில் 32 மாணவர்களும் உணவு நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளில் 20 மாணவர்களும், நிதி நிறுவனங்களில்

6 மாணவர்களும் இதர நிறுவனங்களில் 10 மாணவர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

### 6.2 **வேளாண்மை ஆராய்ச்சி**

தமிழ்நாடு முழுவதும் 18 உறுப்புக்-கல்லூரிகளும் 40 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களும் அந்தந்தப் பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஆய்வுகளுக்குத் தேவையான நிதி, மாநில அரசு, சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் வாயிலாக பெறப்படுகின்றன.

ட்ரோன்கள் மூலம் வேளாண் இடுபொருட்கள், களைக்கொல்லி மற்றும் பயிர் ஊக்கிகள் தெளிக்கும் செயல்விளக்கம் 224 எக்டர் பரப்பளவில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்

ரூ.37.5 இலட்சம் மதிப்பீட்டில் செய்து காண்பிக்கப்பட்டது.

வாழ்வாதார பாதுகாப்பிற்காக, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அடிப்படையிலான பயிர் முறை, பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும் அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்திலும் துவங்கப்பட்டது.

தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலத்தில், களர் மற்றும் உவர் நிலங்களில் மாற்றுப் பயிர்களைக் கண்டறிந்து மேம்படுத்தப்பட்ட வேளாண் நடைமுறைகளை பிரபலப்படுத்துவதற்கு, ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காவிரிப் படுகை பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட மாற்றுப்பயிர் சாகுபடி முறைகள் மூலம், மண் மற்றும் நீர் உற்பத்தித்

திறனை அதிகரிக்கும் ஆராய்ச்சிக்காக ஐந்து இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் (2023-24), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளுக்கு ஊக்கமூட்டும் வகையில், தாவரவியல் பூங்காவினை சீரமைக்க ஐந்து கோடி ரூபாயும் வாழை, பனை ஆராய்ச்சி நிலையங்கள் துவங்க 30 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் உயரிய மேலாண்மை உத்திகள் எளிதில் விவசாயிகளை சென்றடையும் வகையில், வட்டார அளவில் ஒரு வேளாண் விஞ்ஞானி பொறுப்பு அலுவலராக அமர்த்தப்படவுள்ளார்கள்.

### 6.2.1 தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கும் திட்டம் (TN- IAMP)

உலக வங்கியின் நிதியுதவியில், தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீன மயமாக்கும் திட்டத்தின் வாயிலாக ரூ.85 கோடி மதிப்பீட்டில், 54 உபவடிநீர் படுகைப் பகுதிகளில் சீரான காலநிலை மற்றும் சந்தைச் சார்ந்த வேளாண்மையை ஊக்குவித்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் துல்லிய பண்ணையம், நீர் நுட்ப செயல் விளக்கம் மற்றும் புத்தாக்க பயிற்சியின் மூலம் 10,125 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்,

### 6.2.2 வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்

விவசாயத்தில் தினசரி வேலைகளைத் தீர்மானிப்பதற்கு, மத்திய கால வானிலை முன்னறிவிப்பு மிக அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, பல்கலைக்கழக ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் ஏற்கனவே நடைமுறையில்

உள்ள மத்திய கால வானிலை முன்னறிவிப்பானது, கிராம அளவில், துல்லியம் அதிகரிக்கப்பட்டு, அடுத்த ஆறு நாட்களுக்கு ஒரு மணி நேர இடைவெளியில், தரவுகள் கிடைக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது. இதனை http://aas.tnau.ac.in/vlf என்னும் இணையதளத்தில் உள்ள வரைபடத்தையோ அல்லது அட்டவணையையோ தேர்வு செய்து இலவசமாக தெரிந்து கொள்ளலாம். இந்த கிராம அளவிலான வானிலை முன்னறிவிப்பின் துல்லியம் சராசரியாக 70 - 80 சதவீதம் ஆகும்.

### 6.2.3 விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்தகவல்

விலை முன்னறிவிப்பு திட்டமானது, வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையத்தின் (CARDS) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் (DEMIC) தமிழ்நாடு - பாசன வேளாண்மை

நவீனமயமாக்கல் திட்டத்தின் (TN-IAMP) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தில், மக்காச்சோளம், உளுந்து, பச்சை பயறு, நிலக்கடலை, எள், கொப்பரை, வாழைப்பழம் (பூவன், கற்பூரவள்ளி, நேந்திரன்), தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், சின்ன வெங்காயம், பருத்தி, வர மிளகாய், தேங்காய் ஆகிய 14 முக்கியப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இத்திட்டத்தில், 2022-23 ஆம் ஆண்டில், விதைப்பு குறித்த 17 சந்தை ஆலோசனைகளையும், அறுவடைக்கு முந்தைய 14 ஆலோசனைகளையும் இந்த தகவல் மையம் வழங்கியுள்ளது.

### 6.2.4 ஆராய்ச்சி வெளியீடுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து கடந்த வருடம் (2022-2023) 625-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள்,

தேசிய வேளாண் அறிவியல் அகாடமி தரவரிசையில், குறியீடு (ஆறு) மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி இதழ்களில் (Scopus Index Journals) வெளியிடப்பட்டுள்ளன.

### 6.2.5 வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்-கழகத்திலிருந்து இந்த வருடம் வேளாண் பயிர்கள், தோட்டக்கலைப்பயிர்கள் மற்றும் வனமரப்பயிர்களில் 23 புதிய இரகங்கள் தமிழ்நாடு அரசின் புதிய இரகங்கள் வெளியீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு விவசாயிகளுக்காக வெளியிடப்பட்டுள்ளன.

| வ. எண். | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 1. | நெல் கோ 56 | 130 - 135 | மகசூல் : 6372 கிலோ / எக்டர் |
| 2. | நெல் கோ 57 (மேம்படுத்தப்பட்ட கவுனி) | 130 - 135 | மகசூல் : 4638 கிலோ / எக்டர் |

| வ. எண். | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 3. | நெல் ஏடிடீ 58 | 125 | மகசூல் : 6376 கிலோ/எக்டர் |
| 4. | நெல் ஏஎஸ்டி 21 | 120 | மகசூல் : 6330 கிலோ / எக்டர் |
| 5. | வீரிய ஒட்டு மக்காச்சோளம் கோஎச் (எம்) 11 | 105 - 110 | மகசூல் : 6,590 கிலோ / எக்டர் |
| 6. | கம்பு வீரிய ஒட்டு கோஎச் 10 | 85 - 90 | மகசூல் : இறவை: 3020 கிலோ/எக்டர்; மானாவாரி : 2050 கிலோ/எக்டர் |
| 7. | சோளம் கே 13 | 95 - 100 | தானிய மகசூல் : 2575 கிலோ/எக்டர்; தீவன மகசூல் : 11.4 டன்/ எக்டர் |
| 8. | குதிரைவாலி அத்தியந்தல் 1 | 90 | தானியமகசூல் : 2123 கிலோ/எக்டர்; உலர்தட்டைமகசூல் : 3057 கிலோ/எக்டர் |
| 9. | பனிவரகு அத்தியந்தல் 2 | 65 - 70 | தானியமகசூல் : 2140 கிலோ / எக்டர்; உலர்தட்டைமகசூல்: 2793 கிலோ / எக்டர் |
| 10. | பாசிப்பயறு கோ 9 | 65 - 70 | மகசூல் : 825 கிலோ/ எக்டர் |

| வ. எண். | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 11. | பாசிப்பயறு வம்பன் 6 | 70 - 75 | மகசூல் : 760 கிலோ / எக்டர் |
| 12. | தட்டைப்பயறு வம்பன் 4 | 70 - 75 | மகசூல் : இறவை : 1377 கிலோ / எக்டர்; மானாவாரி : 1035 கிலோ / எக்டர் |
| 13. | சூரியகாந்தி கோஎச் 4 | 90 - 95 | மகசூல் : இறவை:2182 கிலோ/எக்டர் மானாவாரி : 1898 கிலோ/எக்டர் |
| 14. | எள் விஆர்ஐ 5 | 75 - 80 | மகசூல் : 795 கிலோ / எக்டர் |
| 15. | கரும்பு கோ 18009 (புன்னகை) | 356 | கரும்பு மகசூல் : 160.39 டன் / எக்டர்; சர்க்கரை மகசூல் : 20.71 டன் / எக்டர் |
| 16. | சணப்பு ஏடிடீ 1 | 120 | மகசூல் : 20.8 டன்/ எக்டர் |
| 17. | பீர்க்கங்காய் மதுரை 1 | 120 – 130 | மகசூல் : 18.75 டன்/ எக்டர் |
| 18. | மார்கழி மல்லிகை கோ 1 | பல்லலாண்டு பயிர் | மகசூல் : 8.52 டன்/ எக்டர் |
| 19. | குத்து அவரை கோ 16 | 100 - 120 | மகசூல் : 16.5 டன்கள்/ எக்டர் |

| வ. எண். | இரகத்தின் பெயர் | வயது (நாட்கள்) | சிறப்பியல்புகள் |
|---|---|---|---|
| 20. | இலவம்பஞ்சு எம்டிபி 1 | 4 - 40 ஆண்டுகள் | மகசூல் : ஒரு மரத்திலிருந்து 900 முதல் 1500 காய்கள் |
| 21. | செம்மரம் எம்டிபி 1 | 15 - 18 வருடங்கள் | ஒரு மரத்திலிருந்து 100 கிலோ கட்டை |
| 22. | சவுக்கு எம்டிபி 3 | 3 வருடங்கள் | மகசூல் : 162 டன் / எக்டர் |
| 23. | காயா எம்டிபி 1 | 5-6 வருடங்கள் | மகசூல் : 150 டன் / எக்டர் |

## 6.3 வேளாண் விரிவாக்கம்

புதிய வேளாண்மை அறிவியல் நிலையம், நீலகிரி மாவட்டம் ஊட்டியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

எழுபது விரிவாக்க பணியாளர்களுக்கு "அடுத்த தலைமுறை (புதுமையான) விரிவாக்க அணுகுமுறைகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற முறைகள்" குறித்து இணையதள பயிற்சி அளிக்கப்பட்டது,

ஆப்ரிக்க நாடான எத்தியோப்பியாவின் உயர்மட்டக் குழு மூன்று நாட்கள் (09.10.2022 முதல் 11.10.2022 வரை) கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு (TNAU) விஜயம் செய்தது. இந்தியா-எத்தியோப்பியா இடையேயான பன்மைத்துவ வேளாண்மை விரிவாக்க அமைப்புகள் பற்றிய கலந்தாய்வு நடைபெற்றது,

தூர்தர்சன் கேந்திரா, பொதிகை சேனலில் விரிவாக்கத்திற்கான மக்கள் தொடர்பு ஊடக ஆதரவின் கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 63 செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆவணப்படுத்தப்பட்டன.

தூர்தர்சன் கேந்திரா, பொதிகை சேனலில் ஒளிபரப்பப்படும் ஃபோன்-இன்-லைவ் நிகழ்ச்சியான "வேளாண்களம்" (திங்கள்தோறும் 12.00 முதல் 1.00 மணி வரை) மூலம் 85 தமிழ்நாடு

வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்-கழகத்தின் கீழ், 15 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (KVK) வாயிலாக கடந்த 2022 ஆம் ஆண்டில் 153 பண்ணை வழி ஆய்வுகள், 314 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள் மற்றும் பயிற்சிகள், விவசாயிகள் தொழில் நுட்பத் திறன் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டன.

| வ. எண். | விரிவாக்க பணிகளின் விவரம் | எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 1. | பயிற்சிகள் | 1,878 | 88,251 |
| 2. | முதல்நிலை செயல்விளக்க திடல்கள் | 314 | 3188 |
| 3. | வயல்வெளி ஆராய்ச்சி திடல்கள் | 153 | 995 |
| 4. | செயல்விளக்கங்கள் | 2,965 | 23,125 |
| 5. | வயல்விழா | 54 | 1,829 |
| 6. | வேளாண் கருத்துக்காட்சிகள் | 176 | 1,25,512 |
| 7. | உழவர் தினவிழா | 24 | 10,139 |

| வ. எண். | விரிவாக்க பணிகளின் விவரம் | எண்ணிக்கை | பயனாளிகள் |
|---|---|---|---|
| 8. | வேளாண் கருத்தரங்குகள் | 16 | 3,268 |
| 9. | உழவர்கள் – விஞ்ஞானிகள் கலந்துரையாடல் | 62 | 3,726 |
| 10. | வயல்வெளி தீர்வு | 1,444 | 8,714 |
| | **மொத்தம்** | **7,086** | **2,68,747** |

### 6.3.1 பயிற்சிகள்

அண்டை நாடான மாலத்தீவின் மூன்றாம் நிலை கள நிலை அலுவலர்களுக்கான ஒரு மாத சான்றிதழ் நிலை வேளாண்மைப் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை கூட்டமைப்புக் குழுவின் 36 அதிகாரிகளுக்கு, வேளாண் தொழில்நுட்பத்தில் சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்த மூன்று நாள் புத்தாக்கப் பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

‘வேளாண்மையில் அடுத்தக்கட்ட புதுமைகள்’ பற்றிய ஒழுங்கமைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுப் பயிற்சி 45 மூத்த மற்றும் இடைநிலை வேளாண் அதிகாரிகளுக்கு ஹைதராபாத்திலுள்ள வேளாண் விரிவாக்க மேலாண்மைக்கான தேசிய நிறுவனத்துடன் (மேலாண்மை), இணைந்து, ஐந்து நாட்கள் வழங்கப்பட்டது.

ஏறத்தாழ, 5,331 விவசாயிகள் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) மற்றும் பிற சகோதர துறைகளின் கீழ் பயிற்சிகள் மற்றும் கண்டுணர்வு பயணம் மூலம் பயனடைந்தனர்.

### 6.3.2 கல்வி ஊடக மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்-கழகத்தின் கல்வி ஊடக மையத்தில் 55 வீடியோ படங்கள் தயாரிக்கப்பட்டன. 2022-ஆம்

ஆண்டில் விவசாயிகள், பொது மக்களின் நம்பகத் தன்மையை அதிகரிக்க 82 வீடியோ நிகழ்ச்சிகள் TNAU TV YouTube சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டு, இதனை 29.23 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

### 6.3.3 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்-கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 12 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு 3,653 நபர்களும், ஒரு வருடத்திற்கு 13.3 இலட்சம் நபர்களும், இணையதளத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

### 6.3.4 விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)

இம்மையத்தின் மூலம் விவசாயிகள் 1800-180-1551 என்ற எண்ணில் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடலாம். இம்மையம், அனைத்து வேலை நாட்களிலும், காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. 2022-ஆம் ஆண்டில், மொத்தம், 1,30,332 தொலைபேசி அழைப்புகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### 6.4 விதைகள் உற்பத்தி

கடந்த 2022-23 ஆம் ஆண்டில், 153.6 டன் வல்லுநர் விதைகள், 644.7 டன் ஆதார விதைகள், 179.8 டன் சான்று விதைகள், 907.4 டன் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. மேலும், 22.85

இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

## 6.5 வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில், வேளாண் வணிக காப்பகம், தொழில்நுட்பம், வீரிய ஒட்டு இரகம் மற்றும் இயந்திர வணிகமயமாக்கல், ஆலோசனை சேவைகள், துணிகர மூலதனத் திட்டம், மாணவர் தொழில் முனைவோர் திட்டம், வேளாண் மைய நிர்வாக மேம்பாட்டுத் திட்டம், நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மற்றும் உன்னத பாரத இயக்கம் 2.0 ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இயக்கம், 266 உறுப்பினர்களைக் கொண்ட ஆறு வேளாண் வணிக கூட்டமைப்பினையும், 182 தொழில் முனைவோர்களையும் உருவாக்கியுள்ளது. மேலும், 704 வணிக ரீதியான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 6.6 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பு இணைப்புத்திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2022-23 ஆம் ஆண்டு முதல் TNAU-FPO இணைப்புத்திட்டத்தை செயல்படுத்துகிறது. தொழில் முனைவோர் திறன் மேம்பாடு, வணிக அம்சங்கள் மற்றும் கொள்கை சார்ந்த ஆராய்ச்சி மூலம் தமிழ்நாட்டில் விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பை (FPO) மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்டத்தில், ஒவ்வொரு பல்கலைக்கழக மையமும் தொழில்நுட்ப ஆதரவு, வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டிற்காக ஒரு உழவர் உற்பத்தியாளர் அமைப்பை தேர்ந்தெடுக்கும். வரும் 2023-24 ஆண்டில், ஒரு லட்சம் விவசாயிகளை உள்ளடக்கி 100 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை இணைக்க பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது.

## 6.7 விருதுகள்

அ) 2021 ஆம் ஆண்டிற்காக, 'சர்தார் படேல் சிறந்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழும நிறுவன (வேளாண்மைப் பல்கலைக்கழக வகை) விருது' தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்-கழகத்திற்கு வேளாண் கல்வி கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க பணிகளில் சிறந்த செயல்திறனிற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தினால் வழங்கப்பட்டது.

ஆ) இந்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை கூட்டமைப்பின் 17-வது உயர்கல்வி உச்சிமாநாட்டில் கல்வி மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் துணையுடன், '2021 ஆம் ஆண்டின் சிறந்த பல்கலைக்கழகம் (30 ஆண்டுகளுக்கும் மேலான வகை) விருது' தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது,

இ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்-கழகத்தின் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வுகள் மையத்திற்கு, வேளாண் பொருளாதாரத் துறையில் சிறந்த பங்களிப்பிற்காக 'பேராசிரியர் ரமேஷ் சந்திர அகர்வால் விருது' வழங்கப்பட்டது.

ஈ) வேளாண் உற்பத்தித் திறனில் சிறப்பாக பங்களித்தமைக்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் 'சௌத்ரி தேவி லால் சிறந்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம்' என்ற விருதினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை மையத்திற்கு வழங்கியது.

# இணைப்பு – 1

## நிதிநிலை (2022 – 23)

| வ.எண். | விவரம் | மதிப்பீடு (கோடிகளில்) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் சம்பள செலவு | 297.79 |
| 2. | பயணப்படி | 0.50 |
| 3. | ஆராய்ச்சிக்கான செலவுகள் | 46.56 |
| 4. | ஓய்வு ஊதியம் | 192.99 |
| 5. | இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் திட்டத்திற்கான மாநில அரசின் 25 சதம் பங்களிப்பு | 18.80 |
| 6. | சிறு பழுதுபார்ப்புப் பணிகள் | 0.80 |
| 7. | கிராம வேளாண் அனுபவ படிப்பிற்கான மாநில அரசின் பங்களிப்பு | 0.13 |
| 8. | மாணவர்களுக்கான கட்டண சலுகை | 0.12 |

| வ.எண். | விவரம் | மதிப்பீடு (கோடிகளில்) |
|---|---|---|
| 9. | அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5 சதவிகித இடஒதுக்கீடு | 2.68 |
| 10. | ஓய்வுபெற்ற உணவக பணியாளர்களுக்கான நிலுவைத் தொகை | 0.35 |
| | **மொத்தம்** | **560.72** |



நவீன வகுப்பு அறை



அனுபவ அடிப்படையிலான செய்முறை வகுப்பு



**ட்ரோன்கள் மூலம் வேளாண் இடுபொருட்கள் தெளித்தல்**



**பருத்தி சாகுபடியை இயந்திரமயமாக்கல்**

## 7. விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை

வேளாண்மையே தேசத்தின் உச்சகட்ட உந்து சக்தி. உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், தன்னிறைவு அடையவும், விவசாயத்தில் தரமான இடுபொருட்களைப் பயன்படுத்துவது அவசியம்.

வேளாண் இடுபொருட்களில் விதை முக்கிய பங்கு வகிக்கிறது. எந்தவொரு வேளாண்மை முறையிலும் அதிக வேளாண் உற்பத்திக்கு தரமான சான்றளிக்கப்பட்ட விதைகளைப் பயன்படுத்துவது அவசியம். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தரமான விதைகள் போதுமான அளவில் கிடைப்பதற்காகவும், தரமான விதைகளின் உற்பத்தியை அதிகரிக்கவும் விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறையின் மூலம் தொடர்ந்து தரமேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, 2022-23-ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை

அறிக்கையில் அறிவித்தவாறு, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநகரத்தின் தலைமையகம் கோயம்புத்தூரில் இருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு 01.06.2022 முதல் இயங்கி வருகிறது.

விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறையானது, விதைச் சான்று, விதைத் தரக் கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை, பயிற்சி மற்றும் அங்ககச் சான்றளிப்பு ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

**7.1 விதைச் சான்றளிப்பு:**

விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968 ஆகிய சட்ட அமலாக்கத்தின்படி, விதைச் சான்றளிப்புப் பிரிவு செயல்படுகிறது. இது இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரநிலைகளை பூர்த்தி செய்திடும் பொருட்டு, அறிவிக்கப்பட்ட

பயிர் மற்றும் இரகங்களில் விதைச் சான்றுப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

வல்லுநர் விதை ஆய்வுக் குழு மூலமாக வேளாண் ஆராய்ச்சி நிலையங்களில் வல்லுநர் விதை வயல்களில் தரங்களை ஆய்வு செய்து, அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு வல்லுநர் விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. 2022-23-ஆம் ஆண்டில் இக்குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு 147 மெ. டன் வல்லுநர் விதை உற்பத்தி செய்யப்பட்டது .

விதைச் சான்றுத் துறையில் அரசு மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர் மூலம் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில் விதையின் ஆதாரத்தை ஆராய்தல், வயலாய்வு, சுத்திப்பணி, விதைத்தரங்கள் பரிசோதனை மற்றும் சான்றட்டை பொருத்துதல் ஆகிய தொடர் பணிகளின் மூலம் தரமான சான்று விதைகள்

விவசாயிகளுக்கு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

விதைச் சான்றளிக்கும் திட்டத்தின் கீழ், 2022-23-ஆம் ஆண்டில் 73,948 எக்டர் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு, 1,34,648 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.1: 2022-23 - விதைப் பண்ணை பதிவு செய்யப்பட்ட பரப்பு மற்றும் சான்று செய்த விதையளவு**

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1,330 | 1,330 |
| 2 | கடலூர் | 4,383 | 1,838 |
| 3 | தருமபுரி | 1,536 | 434 |
| 4 | திண்டுக்கல் | 2,453 | 3,138 |
| 5 | ஈரோடு | 3,398 | 1,590 |
| 6 | காஞ்சிபுரம் | 1,644 | 2,684 |

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 7 | கன்னியாகுமரி | 196 | 186 |
| 8 | கரூர் | 698 | 328 |
| 9 | கிருஷ்ணகிரி | 1,302 | 504 |
| 10 | மதுரை | 2,366 | 5,820 |
| 11 | நாகப்பட்டினம் | 3,880 | 3,135 |
| 12 | நாமக்கல் | 1,733 | 2,988 |
| 13 | பெரம்பலூர் | 1,298 | 2,067 |
| 14 | புதுக்கோட்டை | 1,300 | 1,305 |
| 15 | இராமநாதபுரம் | 742 | 575 |
| 16 | சேலம் | 2,237 | 919 |
| 17 | சிவகங்கை | 476 | 446 |
| 18 | தஞ்சாவூர் | 7,199 | 2,839 |
| 19 | தேனி | 886 | 2,706 |
| 20 | திருவள்ளூர் | 1,330 | 946 |
| 21 | திருவாரூர் | 6,820 | 2,585 |
| 22 | தூத்துக்குடி | 1,610 | 879 |
| 23 | திருநெல்வேலி | 3,039 | 6,270 |

| வ. எண் | விதைச் சான்று உதவி இயக்குநர் தலைமையிடம் | விதைப் பண்ணைப் பதிவு (எக்டர்) | சான்று செய்த விதையளவு (மெ.டன்) |
|---|---|---|---|
| 24 | திருப்பூர் | 9,159 | 73,927 |
| 25 | திருவண்ணாமலை | 3,757 | 2,691 |
| 26 | திருச்சி | 1,224 | 3,062 |
| 27 | வேலூர் | 1,927 | 851 |
| 28 | விழுப்புரம் | 4,758 | 7,921 |
| 29 | விருதுநகர் | 1,267 | 686 |
| | **மொத்தம்** | **73,948** | **1,34,648** |

மேலும், 2023-24-ஆம் ஆண்டில், 93,000 எக்டர் விதைப் பண்ணைகளைப் பதிவு செய்யவும், 1,30,000 மெட்ரிக் டன் தரமான விதைகளுக்குச் சான்றளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 7.2 விதைத் தரக்கட்டுப்பாடு -விதை ஆய்வு

மாநிலத்தில் தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதை உறுதி செய்திட, விதைத் தரக்கட்டுப்பாடு, விதை

ஆய்வு பிரிவு, தற்பொழுது நடைமுறையில் உள்ள சட்டங்களான விதைகள் சட்டம், 1966, விதைகள் விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை, 1983, சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் அத்தியாவசிய பண்டங்களின் சட்டம், 1955 ஆகியவற்றை அமல்படுத்தி தரமான விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதை உறுதி செய்கின்றது.

இத்துறையின் மூலம் 12,881 விதை விற்பனை நிலையங்களுக்கு விதை விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விதை விற்பனை நிலையங்கள் விதை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு, தரமற்ற விதைக் குவியல்கள் வைத்திருக்கும் நிறுவனங்கள் மீது துறை நடவடிக்கைகளும் நீதிமன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## அட்டவணை 7.2: உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள்

(எண்கள்)

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு சார்பு | எண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 27 | 1 | 86 | **114** |
| 2 | செங்கல்பட்டு | 26 | 3 | 158 | **187** |
| 3 | சென்னை | 7 | 1 | 49 | **57** |
| 4 | கோயம்புத்தூர் | 46 | 94 | 360 | **500** |
| 5 | நீலகிரி | 23 | 16 | 119 | **158** |
| 6 | கடலூர் | 49 | 14 | 421 | **484** |
| 7 | தருமபுரி | 26 | 2 | 344 | **372** |
| 8 | திண்டுக்கல் | 44 | 6 | 501 | **551** |
| 9 | ஈரோடு | 71 | 36 | 638 | **745** |
| 10 | விழுப்புரம் | 32 | 6 | 351 | **389** |
| 11 | கள்ளக்குறிச்சி | 28 | 14 | 338 | **380** |
| 12 | கன்னியாகுமரி | 33 | 16 | 64 | **113** |
| 13 | கரூர் | 19 | 55 | 104 | **178** |
| 14 | கிருஷ்ணகிரி | 31 | 5 | 581 | **617** |
| 15 | மதுரை | 48 | 12 | 266 | **326** |
| 16 | நாகப்பட்டினம் | 28 | 4 | 181 | **213** |
| 17 | மயிலாடுதுறை | 27 | 3 | 174 | **204** |
| 18 | நாமக்கல் | 52 | 109 | 163 | **324** |
| 19 | பெரம்பலூர் | 11 | 1 | 198 | **210** |
| 20 | அரியலூர் | 21 | 8 | 300 | **329** |

(எண்கள்)

| வ. எண் | மாவட்டம் | அரசு | அரசு சார்பு | எண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 21 | புதுக்கோட்டை | 44 | 31 | 372 | **447** |
| 22 | இராமநாதபுரம் | 33 | 29 | 160 | **222** |
| 23 | சேலம் | 67 | 114 | 646 | **827** |
| 24 | சிவகங்கை | 41 | 3 | 200 | **244** |
| 25 | திருநெல்வேலி | 41 | 26 | 200 | **267** |
| 26 | தென்காசி | 40 | 46 | 304 | **390** |
| 27 | தஞ்சாவூர் | 78 | 24 | 488 | **590** |
| 28 | தேனி | 32 | 3 | 244 | **279** |
| 29 | திருவள்ளூர் | 63 | 55 | 137 | **255** |
| 30 | திருவாரூர் | 53 | 11 | 303 | **367** |
| 31 | தூத்துக்குடி | 38 | 132 | 236 | **406** |
| 32 | திருப்பூர் | 29 | 39 | 248 | **348** |
| 33 | திருவண்ணாமலை | 68 | 66 | 440 | **574** |
| 34 | திருச்சி | 49 | 8 | 362 | **419** |
| 35 | வேலூர் | 20 | 1 | 81 | **102** |
| 36 | ராணிபேட்டை | 25 | 4 | 115 | **144** |
| 37 | திருப்பத்தூர் | 24 | 3 | 126 | **153** |
| 38 | விருதுநகர் | 38 | 114 | 244 | **396** |
|  | **மொத்தம்** | **1,432** | **1,115** | **10,302** | **12,881** |

மேலும், 2022-23 ஆம் ஆண்டில், 75,136 விதை விற்பனை நிலைய ஆய்வுகள்

மேற்கொள்ளப்பட்டு, விதை ஆய்வாளர்களால் எடுக்கப்பட்ட 55,353 ஆய்வு விதை மாதிரிகளில் 54,758 ஆய்வு விதை மாதிரிகளுக்கும், தனியர் மற்றும் விதை நிறுவனங்கள் மூலமாக எடுக்கப்பட்ட 27,862 பணி விதை விதை மாதிரிகளில் 27,762 பணி விதை மாதிரிகளுக்கும், விதைப் பரிசோதனை நிலையங்களின் மூலம், மொத்தம் 82,520 விதை மாதிரிகளின் தரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது. விதை பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்ட 2,494 தரமற்ற விதை மாதிரிகளில், 1,516 விதை மாதிரிகளுக்கு துறை நடவடிக்கை மூலமாக ரூபாய் 346 இலட்சம் மதிப்புள்ள 459 மெட்ரிக் டன் அளவிலான விதை குவியல்களுக்கு விற்பனை தடையும், 174 விதை மாதிரிகளுக்கு நீதிமன்றம் வாயிலாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தரமற்ற விதைகள் மற்றும் பிற விதி மீறல்களுக்காக ரூ.1,807 இலட்சம் மதிப்புள்ள 2,165 மெட்ரிக் டன் அளவிலான விதைக்

குவியல்களுக்கு விற்பனைத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2023-24-ம் ஆண்டில் 75,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளவும், 60,000 ஆய்வு விதை மாதிரிகளில் தர பரிசோதனை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**7.3 விதைப் பரிசோதனை:**

விதையின் தரத்தை ஆய்வு செய்து உறுதி செய்வதற்காக, அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்களில் இந்திய குறைந்தபட்ச விதை சான்றளிப்பு தரநிலைகளின் (IMSCS) அடிப்படையில் ஆய்வகங்களில் விதை தரநிலைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

தற்போது நமது மாநிலத்தில் 34 அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் உள்ளன. விதைச் சான்றளிப்பு

பிரிவில் இருந்து பெறப்படும் சான்று விதை மாதிரிகள், விதை ஆய்வு பிரிவிலிருந்து பெறப்படும் ஆய்வு மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் விதை உற்பத்தியாளர்கள் மூலம் அனுப்பப்படும் பணி விதை மாதிரிகள் போன்ற மூன்று வகை விதை மாதிரிகள் அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படுகின்றன.

**அட்டவணை 7.3: 2022-23-ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகள்**

| வ. எண் | மாதிரிகளின் வகைகள் | இலக்கு (எண்கள்) | சாதனை (எண்கள்) |
|---|---|---|---|
| 1 | சான்று விதை மாதிரி | 26,000 | 35,066 |
| 2 | ஆய்வு விதை மாதிரி | 54,500 | 54,758 |
| 3 | பணி விதை மாதிரி | 26,500 | 27,762 |
| | **மொத்தம்** | **1,07,000** | **1,17,586** |

மேலும், 2023-24 ஆம் ஆண்டில் 1,15,000 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநில விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் (Referral Lab) பிற விதைப் பரிசோதனை நிலையங்களிலிருந்து பெறப்படும் ஆய்வு மாதிரிகளில் முளைப்புத் திறன் பரிசோதனை செய்யப்படுகிறது.

2022-23-ஆம் ஆண்டில் 1,800 விதை மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023-24-ல் 1,900 விதை மாதிரிகள் பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Bt ஆய்வகத்தில் பருத்திக்கான Bt நச்சுத்தன்மையை கண்டறியும் பரிசோதனை செய்யப்படுகிறது. Bt சோதனைக்கான விதை மாதிரிகள் விதை ஆய்வாளர்களால்

அனுப்பப்படுகிறது. 2022-23 ஆம் ஆண்டில் 2,282 விதை மாதிரிகளுக்கு Bt பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023-24-ல் 2,300 விதை மாதிரிகளில் Bt பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.1 சர்வதேச விதைப் பரிசோதனை குழும அங்கீகாரம் பெற்ற விதைப் பரிசோதனை நிலையம் (ISTA):

கோயம்புத்தூர் விதை பரிசோதனை நிலையம் 2014-ஆம் ஆண்டில் சுவிட்சர்லாந்தினை தலைமையிடமாக கொண்ட சர்வதேச பரிசோதனை குழுமத்தின் (ISTA) அங்கீகாரத்தை பெற்றுள்ளது. பொதுத் துறை விதை பரிசோதனை நிலையங்களில் சர்வதேச விதை பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற இந்தியாவின் முதல் ஆய்வகமாய் கோயம்புத்தூர் விதை பரிசோதனை நிலையம் திகழ்கிறது. இப்பரிசோதனை நிலையம்,

தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறி பயிர்களில் விதை மாதிரிகள் எடுக்கவும், அவற்றின் முளைப்புத் திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிற பயிர் இனங்களைக் கண்டறியும் பரிசோதனைக்காகவும் (OSD), சர்வதேச விதை பரிசோதனை குழுமத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

சர்வதேச தரத்திற்கு விதை மாதிரிகளை உறுதி செய்யும் பொருட்டு, ஆரஞ்சு நிற விதைக் குவியல் சான்றிதழ் மற்றும் நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஆகியவற்றை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கும் தகுதி இந்த ஆய்வகம் பெற்றுள்ளது.

சர்வதேச விதைப் பரிசோதனை குழும (ISTA) அங்கீகாரம் பெற்றது முதல் 91 விதை மாதிரிகளுக்கு நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2022-23-ஆம் ஆண்டில் 12 விதை மாதிரிகளுக்கு நீல நிற விதை மாதிரி சான்றிதழ் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் 15 விதை மாதிரிகளுக்கு நீல நிற விதை மாதிரி சான்றிதழ் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.2. மாநில மரபணு ஆய்வகம் (DNA Fingerprinting Laboratory)

விவசாயிகளுக்கு தரமான விதைகள் விரைவாகவும், உரிய காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு, உயர்தர தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய மாநில மரபணு ஆய்வகம், கோயம்புத்தூரில் 2007ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மரபணு பரிசோதனை முறையில் நெல் இனத்தூய்மை பரிசோதனை முடிவுகள் நான்கு முதல் ஐந்து நாட்களில் மிகத்துல்லியமாக கண்டறியப்படுகிறது. இந்தியாவிலேயே முதன் முதலாக நிறுவப்பட்ட

மரபணு பரிசோதனை நிலையம் இதுவே ஆகும். மேலும், 2014-இல் தமிழ்நாடு அரசினால் "**மாநில மரபணு ஆய்வகம்**" என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம் தற்போது தமிழ்நாட்டில் முதன்மையாகப் பயிரிடப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட 27 நெல் இரகங்களுக்கு SSR மரபணு குறியீட்டை பயன்படுத்தி மிகத் துல்லியமாகவும் விரைவாகவும் இனத்தூய்மை பரிசோதனை செய்யும் திறன் கொண்டுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், 205 நெல் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும், 2023-24-இல் 250 நெல் விதை மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 7.3.3. பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை:

பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை 1997 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் கண்ணம்பாளையத்தில் தமிழ்நாடு அரசால்

நிறுவப்பட்டு, பயிர் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களில் இனத்தூய்மை ஆய்வு செய்யப்படுகிறது. விதை தொகுப்புகளிலிருந்து பெறப்பட்ட விதை மாதிரிகளின் இனத்தூய்மை இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களுக்கு (IMSCS) உட்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இனத்தூய்மை ஆய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பயிர்களின் புற வெளிப்பாட்டு தரங்களைக் கொண்டு குறிப்பிட்ட பயிர் இரகங்கள் மற்றும் வீரிய இரகங்களில் இனத்தூய்மை ஆய்வு செய்யப்படுகிறது. இனத்தூய்மை பரிசோதனை பண்ணைக்கு ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் சான்று விதை மாதிரிகள் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்படுகின்றன.

2022-23 ஆம் ஆண்டில் 2,700 விதை மாதிரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2023-24-இல்

3,000 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**7.4 பயிற்சி:**

தரமான விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகத்தினை மேம்படுத்த இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலம் துறை அலுவலர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள், விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

2022-23 ஆம் ஆண்டில் 47,826 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2023-24-ஆம் ஆண்டில் 50,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**7.5 அங்ககச் சான்றளிப்பு:-**

தமிழ்நாடு அரசால் 2007 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையானது, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) அங்கீகாரத்துடன் அங்கக விளைபொருட்களை வர்த்தக முறைக்கு ஏற்ப, சான்றளிப்புப் பணிகளை செயல்படுத்திவருகிறது.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் வரும் தேசிய அங்கக உற்பத்தித் திட்டக் கொள்கைகளின் அடிப்படையில் இத்துறை செயல்படுகிறது. தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்பு துறையால் வழங்கப்படும் சான்றிதழ் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சுவிட்ஸர்லாந்து நாட்டின் சுவிஸ் அங்ககத் தர நிலைகளுக்கு ஒத்ததாகும். தேசிய அங்கக உற்பத்தித் திட்டச் சான்றிதழின் அமைப்பு, அங்கக விளை பொருட்களை

இந்தியாவிற்குள்ளும், மற்ற நாடுகளுக்கும் சந்தைப்படுத்த உதவுகிறது. அங்கக சான்றிதழ் ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும். அங்கக விதிகள் செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள், மரபணு மாற்றுப் பயிர்களை தவிர்ப்பதை உறுதி செய்கிறது.

### 7.5.1 பங்களிப்பு உத்திரவாத திட்டம்

ஒன்றிய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் அங்ககப் பண்ணையம் மற்றும் இயற்கை வேளாண்மைக்கான தேசிய மையம் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்படி, 2022-23 ஆம் ஆண்டு முதல் பங்களிப்பு உத்திரவாத திட்டத்தின் கீழ் தனிநபர் (விவசாயிகள்) மற்றும் குழுக்களுக்கு அங்ககச் சான்றிதழை வழங்குவதற்கான குழு பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது பங்களிப்பு உத்திரவாத திட்டத்தின் தரநிலைகளின் கொள்கைகளின்

அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. அங்ககச்சான்று பெற்ற விவசாயிகள் அங்கக விளை பொருட்களை உள்நாட்டுச் சந்தையில் விற்க அதிகாரம் வழங்குகிறது.

2022-23 ஆம் ஆண்டில் 86,285 ஏக்கர் அங்ககச் சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது, மாநிலம் முழுவதும் பதிவு செய்யப்பட்ட மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை 46,127. இதில், 2,825 தனிநபர் விவசாயிகள், 583 உழவர் குழுக்களில் 43,302 விவசாயிகள், 24 அங்கக பதனிடும் மையங்கள் மற்றும் 22 அங்கக வணிகர்கள் அடங்குவர். தேசிய அளவில் அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளை பதிவு செய்யும் ஒரே சான்றிதழ் அமைப்பு தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்பு துறை ஆகும்.

**அட்டவணை7.4. அங்ககச் சான்றளிப்பின் தற்போதைய நிலை**

| வ. எண் | நிலை | விவசாயிகளின் எண்ணிக்கை | குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | முதல் ஆண்டு மாறுதல் காலம் | 1991 | 576 (42,272 விவசாயிகள்) |
| 2. | இரண்டாம் ஆண்டு மாறுதல் காலம் | 480 | 4 (678 விவசாயிகள்) |
| 3. | அங்கக நிலை | 354 | 3 (352 விவசாயிகள்) |

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்பு துறையானது ரூ.166 இலட்சம் மதிப்பிலான 223.85 மெட்ரிக் டன் அங்ககப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக, பதனிடுவோர் மற்றும் வணிகர்களுக்கு சான்றளித்துள்ளது. தேங்காய், தூய தேங்காய் எண்ணெய், காபி, முருங்கை, தேயிலை, கோகோ, மஞ்சள் மற்றும் வெல்லம் ஆகியவற்றிக்கு ஏற்றுமதிக்கான சான்றளிப்பை வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையில், பதிவு செய்யப்பட்ட விவசாயிகளின் விளை நிலங்களில் எஞ்சிய நச்சுத்தன்மை குறித்து மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகளுக்கு உட்படாத காரணத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 265 விவசாயிகளிடம் இருந்து அங்கக விளைபொருட்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வு முடிவுகளின் படி, 262 விவசாயிகள் அங்கக நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டனர். மீதமுள்ள மூன்று விவசாயிகள் மாறுதல் காலத்திற்கு தரம் இறக்கப்பட்டனர்.

**அட்டவணை 7.5 ஆண்டு வாரியாக தேசிய அங்கக உற்பத்தி திட்டத்தில் பதிவு விபரம்**

(ஏக்கரில்)

| வ எண் | மாவட்டம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 51.49 | 5.1 | 829.46 | 811.00 | 656.00 |
| 2 | கோயம்புத்தூர் | 1526.21 | 1905.95 | 3905.00 | 3645.00 | 3633.00 |
| 3 | செங்கல்பட்டு | 0 | 0 | 1357.16 | 1266.00 | 1301.20 |

(ஏக்கரில்)

| வ எண் | மாவட்டம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|---|
| 4 | கடலூர் | 2739.86 | 2251.05 | 1799.00 | 1755.02 | 1013.60 |
| 5 | தருமபுரி | 1468.00 | 1359.45 | 7687.00 | 7384.19 | 3526.00 |
| 6 | திண்டுக்கல் | 1209.97 | 1924.97 | 3585.00 | 9518.70 | 7556.62 |
| 7 | ஈரோடு | 1170.17 | 1136.02 | 3982.02 | 3425.00 | 3575.50 |
| 8 | கள்ளக்குறிச்சி | 0 | 0 | 2307.12 | 2375.00 | 192.81 |
| 9 | காஞ்சிபுரம் | 2063.81 | 1164.34 | 894.01 | 1752.00 | 1070.68 |
| 10 | கன்னியாகுமரி | 10.48 | 1.79 | 403.00 | 796.12 | 3562.53 |
| 11 | கரூர் | 1503.77 | 1371.30 | 1323.51 | 2044.92 | 2168.28 |
| 12 | கிருஷ்ணகிரி | 1101.51 | 48.42 | 7063.94 | 8082.00 | 2629.11 |
| 13 | மதுரை | 750.54 | 384.52 | 4193.55 | 3841.50 | 1954.72 |
| 14 | மயிலாடுதுறை | 0 | 0 | 514.12 | 1436.10 | 759.24 |
| 15 | நாகப்பட்டினம் | 2650.32 | 113.00 | 2769.31 | 1004.56 | 1083.63 |
| 16 | நாமக்கல் | 132.52 | 980.00 | 1640.00 | 5275.46 | 577.64 |
| 17 | பெரம்பலூர் | 61.35 | 53.15 | 805.56 | 1372.8 | 1062.69 |
| 18 | புதுக்கோட்டை | 104.02 | 118.87 | 3120.68 | 3796.62 | 1951.68 |
| 19 | இராமநாதபுரம் | 3382.25 | 3374.16 | 1850.66 | 2389.00 | 3235.07 |
| 20 | ராணிப்பேட்டை | 0 | 0 | 1531.00 | 1705.00 | 2367.97 |
| 21 | சேலம் | 117.25 | 160.78 | 3701.00 | 9043.66 | 7443.32 |
| 22 | சிவகங்கை | 428.42 | 292.76 | 1146.00 | 1650.00 | 1671.57 |
| 23 | தஞ்சாவூர் | 531.30 | 205.78 | 785.38 | 1963.06 | 1647.98 |
| 24 | நீலகிரி | 26.85 | 5455.21 | 6447.00 | 6428.00 | 1606.26 |
| 25 | தேனி | 221.14 | 180.80 | 3973.00 | 3804.51 | 3787.35 |
| 26 | தென்காசி | 0 | 0 | 975.00 | 1483.29 | 1221.95 |
| 27 | திருப்பத்தூர் | 0 | 0 | 2144.00 | 2065.38 | 1498.05 |
| 28 | திருவள்ளூர் | 287.03 | 328.54 | 1473.21 | 1484.00 | 1676.94 |
| 29 | திருவண்ணாமலை | 2248.01 | 404.54 | 3424.00 | 5810.56 | 4431.14 |
| 30 | தூத்துக்குடி | 124.76 | 129.82 | 472.55 | 810.54 | 747.46 |
| 31 | திருநெல்வேலி | 722.94 | 761.38 | 2734.00 | 3201.61 | 3399.75 |
| 32 | திருப்பூர் | 1692.56 | 897.07 | 4360.00 | 4124.00 | 4125.00 |

(ஏக்கரில்)

| வ எண் | மாவட்டம் | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 |
|---|---|---|---|---|---|---|
| 33 | திருவாரூர் | 245.34 | 75.98 | 561.19 | 829.02 | 1061.60 |
| 34 | திருச்சி | 127.09 | 201.34 | 1568.14 | 1614.72 | 1574.34 |
| 35 | வேலூர் | 1178.07 | 1201.73 | 2221.84 | 2339.06 | 1785.24 |
| 36 | விழுப்புரம் | 2517.28 | 1656.605 | 3120.00 | 2722.60 | 2415.16 |
| 37 | விருதுநகர் | 1292.93 | 370.24 | 2667 | 2546.00 | 2314.51 |
| **மொத்தம்** | | **31687.24** | **28514.69** | **93334.44** | **115596.51** | **86285.58** |

## அட்டவணை.7.6. 2022-23 ஆம் ஆண்டில் பங்களிப்பு உத்திரவாத திட்டத்தில் பதிவு விபரம்

(ஏக்கரில்)

| வ. எண் | மாவட்டம் | குழுக்களின் எண்ணிக்கை | விவசாயிகளின் எண்ணிக்கை | பரப்பு பதிவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 2 | 250 | 1,075.1 |
| 2 | தருமபுரி | 15 | 193 | 2,181.8 |
| 3 | திண்டுக்கல் | 5 | 86 | 2,781.9 |
| 4 | நாகப்பட்டினம் | 3 | 15 | 47.77 |
| 5 | புதுக்கோட்டை | 4 | 80 | 213.78 |
| 6 | தேனி | 2 | 63 | 196.74 |
| 7 | திருவள்ளூர் | 3 | 15 | 36.433 |
| 8 | திருப்பூர் | 5 | 176 | 934.1 |
| **மொத்தம்** | | **39** | **878** | **7,545.18** |

2023-24 ஆம் ஆண்டில் தேசிய அங்கக உற்பத்தித் திட்டம் மற்றும் பங்களிப்பு உத்தரவாத திட்டங்களின் மூலம், 1,25,000 ஏக்கர் நிலப்பரப்பை

அங்ககச் சான்றளிப்பின் கீழ், பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 7.6 விதை உற்பத்தி, அமலாக்கம், விதைச் சான்றுக்கான மென்பொருள்:- SPECS (Seed Production, Enforcement and Certification System):

விதைச்சான்றளிப்புத் துறையின் அனைத்து தொழில்நுட்ப நடவடிக்கைகளை கணினிமயமாக்கும் பொருட்டு, பிரத்யேகமான SPECS எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் விதைச் சான்றளிப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவும், விதைச் சான்றளிப்புத் துறையின் அனைத்துப் பிரிவுகளின் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கும், முறையான கண்காணிப்பிற்கும், வெளிப்படைத் தன்மையுடன் இயங்கவும் உதவுகிறது. இந்தியாவிலுள்ள விதைச்சான்றளிப்பு

முகமைகளில் தமிழ்நாட்டில் தான் முதன்முறையாக இந்த மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது ஒரு சிறப்பம்சமாகும்.

## 7.7 பணிக்குழு

விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறையானது மொத்தம் 345 தொழில்நுட்ப பணியாளர்களையும், 500 அமைச்சுப் பணியாளர்களையும் கொண்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

**அட்டவணை.7.7. ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் விவரம்**

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| **அ.தொழில்நுட்ப அலுவலர்கள்** | 345 |
| விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் | 1 |
| விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இணை இயக்குநர் | 1 |
| விதை ஆய்வு இணை இயக்குநர் | 1 |

| பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|
| விதை ஆய்வு துணை இயக்குநர் | 15 |
| தர மேலாளர் | 1 |
| விதைச்சான்று உதவி இயக்குநர் ( விதை பகுப்பாய்வு மற்றும் பயிற்சி) | 1 |
| விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் | 29 |
| மதிப்பீட்டாளர் (அங்ககச்சான்று) | 1 |
| விதைப்பரிசோதனை அலுவலர் | 7 |
| விதைச்சான்று அலுவலர் | 119 |
| விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று ஆய்வாளர்கள் | 26 |
| வேளாண்மை அலுவலர் | 63 |
| விதை ஆய்வாளர் | 70 |
| அங்ககச்சான்று ஆய்வாளர் | 10 |
| **ஆ. அமைச்சுப்பணியாளர்கள்** | 500 |
| **மொத்த பணியாளர்கள் (அ + ஆ)** | **845** |

## 8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

8.1. நீர்வடிப்பகுதிகளை பங்கேற்பு அணுகுமுறையில் மேம்படுத்துவதன் மூலம் தரிசு நிலங்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975ன் கீழ் நிறுவப்பட்டது. பின்னர், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் மாநில அளவிலான இணைப்பு முகமை (SLNA) அமைக்கப்பட்டு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம் (IWDP), தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் (NWDPRA), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் (IWMP) ஆகியவை இதன் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுத்தப்பட்டன.

தற்போது, கீழ்க்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்கள் இம்முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

1. நீர்வடிப்பகுதி மேம்பாடு - பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – 2.0 - Watershed Development Component – Pradhan Mantri Krishi Sinchayee Yojana 2.0 (WDC – PMKSY 2.0)
2. நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி - NABARD Assisted Watershed development Fund (WDF)
3. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம், விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம் - National Adaptation Fund for Climate Change (NAFCC).

மேலும், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட

திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அறிவிக்கப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசுகள், திட்ட செயலாக்கத் துறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது.

1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - **Rashtriya Krishi Vikas Yojana (RKVY) / National Agriculture Development Programme (NADP)**
   i. RKVY விரிவான திட்ட அறிக்கை அடிப்படையிலான திட்டங்கள்
   ii. மானாவாரிப் பகுதி மேம்பாடு - Rainfed Area Development (RAD)
   iii. மண் நலம் மற்றும் மண்வளம் - Soil Health and Fertility (SHF)
   iv. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம் - Paramparagat Krishi Vikas Yojana (PKVY)
   v. வேளாண் காடுகள் Agro Forestry

vi. புகையிலை பயிருக்கு மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் – Crop Diversification Programme (CDP)

2. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)

i. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - துளி நீரில் அதிக பயிர் - Pradhan Mantri Krishi Sinchayee Yojana - Per Drop More Crop (PMKSY – PDMC)

ii. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – வயல்தோறும் பாசனம் - Pradhan Mantri Krishi Sinchayee Yojana - Har Khet Ko Paani (PMKSY - HKKP)

iii. விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம் - Accelerated Irrigation Benefits Programme (AIBP)

**8.2. நீர்வடிப்பகுதி மேம்பாடு - பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – 2.0 (WDC – PMKSY 2.0)**

இத்திட்டமானது, பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி, விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப்பகுதிகளில் 27 திட்டங்களை ரூ.286.73 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் 1.30 இலட்சம் எக்டர் பரப்பில் செயல்படுத்த ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு,

i. **பொருளாதாரம்** (Economy) - இயற்கை வளங்களை சமச்சீரான, ஒருங்கிணைந்த, நிலையான, திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் நீர்வடிப்பகுதிகளிலுள்ள

கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துதல்.

ii. **சூழலியல்** (Ecology) - சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய, சாத்தியமான தொழில்நுட்பங்களையும் நடைமுறை-களையும் ஊக்குவிப்பதன் மூலம் இயற்கை வளங்களை (சூழல் சமநிலையை மீட்டெடுக்க) பயன்படுத்துதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல்.

iii. **சமபங்கு** (Equity) - ஏழை, நிலமற்றோர், மாற்றுத்திறனாளிகள் பெண்களுக்கு மேம்படுத்தப்பட்ட நிலம், நீர் போன்ற வளங்களில் சமபங்கீடு கிடைப்பதை உறுதிப்படுத்துவதோடு, பல்வேறு சமுதாய நிறுவனங்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

### 8.2.1 திட்ட செயலாக்க அமைப்பு

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையானது இத்திட்ட செயலாக்கத்திற்கு மாநில அளவிலான இணைப்பு முகமையாக (State Level Nodal Agency) செயல்படும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆறு மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகள் (District Watershed Development Agency) வேளாண்மை, வேளாண் பொறியியல் துறை தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டத்திற்கும் களப்பணிகளை மேற்கொள்வதற்காக நீர்வடிப்பகுதி மேம்பாட்டு குழு (Watershed Development Team) வேளாண்மை, சமூகவியல் (மாவட்ட அளவில் மட்டும்) மற்றும் பொறியியல் வல்லுநர்களை உறுப்பினர்களாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பல்வேறு பணிக் கூறுகளை செயல்படுத்துவதற்காக கிராம சபையின் துணைக்

குழுவாக நீர்வடிப்பகுதிக் குழு (Watershed Committee) கிராம அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

### 8.2.2 திட்ட செயல்பாடுகள்

இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஐந்து வருடங்களில் செயல்படுத்தப்படும். தற்போது இத்திட்டம் இரண்டாம் கட்ட நிலையில் கீழ்க்கண்ட இனங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| இனம் | செயல்பாடுகள் |
|---|---|
| இயற்கைவள மேம்பாட்டு பணிகள் (Natural Resources Management) | பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க்குட்டைகள், சிறு, நடுத்தர, பெரிய தடுப்பணைகள், கிராம குட்டைகள், ஊருணிகள், நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல், கம்பிவலை தடுப்பணைகள், நீர் செறிவூட்டும் அமைப்புகள், கிணறுகளை சீரமைத்தல், அமிழ்வு நீர்குட்டைகள். |

| இனம் | செயல்பாடுகள் |
|---|---|
| பண்ணை உற்பத்தி அமைப்பு பணிகள் (Farm Production System) | தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண் காடுகள், மலர் பயிர்கள், தீவனப் புல் வளர்த்தல், பயிர் செயல் விளக்கங்கள், மண் புழு உரம் தயாரித்தல், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், தார்ப்பாலின் மற்றும் புல்வெட்டும் கருவி விநியோகம், பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்த்தல், வெள்ளாடு/ செம்மறியாடு வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் விநியோகம், கோழி வளர்த்தல் |
| நிலமற்றவர்களுக்கான வாழ்வாதாரப் பணிகள் (Livelihood Supporting System) | ஆயத்த ஆடை தயாரித்தல், தையல் இயந்திரம், கறவைமாடு வழங்குதல், வீடுகளில் கோழி வளர்த்தல், உணவுப்பொருள் தயார் செய்தல், வெதுப்பகம், பெட்டிக்கடை, கரி தயாரித்தல், உணவு தயாரித்து வழங்கல், நிகழ்ச்சி மேலாண்மை, கைவினைப் பொருள்கள் தயாரித்தல், ஆடு வளர்த்தல், |

| இனம் | செயல்பாடுகள் |
|---|---|
| | வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வழங்குதல், தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, தேனீ பெட்டி விநியோகம், இட்லி / தோசை மாவு அரைக்கும் இயந்திரம் வழங்குதல், சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் |
| திறன் மேம்பாட்டுப் பணிகள் (Institution Capacity Building) | பயிற்சி வழங்குதல் |

2022-23ஆம் ஆண்டில், ரூ.71.4 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2023-24ஆம் ஆண்டு ரூ.78.50 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 8.3. நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம் (NABARD Assisted by Watershed Development Fund)

இத்திட்டம் 2004ஆம் ஆண்டு முதல் நபார்டு வங்கி ஒப்புதல் வழங்கிய அரசு சாரா நிறுவனங்களின் (NGO) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நீர்வடிப்பகுதி திட்டங்கள் நபார்டு வங்கியின் மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவினால் (State Level Steering Committee of NABARD) அனுமதியளிக்கப்பட்டு, திறன் மேம்பாட்டு கட்டத்திற்குப் (Capacity Building Phase) பின் முழு செயலாக்க கட்டத்தை (Full Implementation Phase) செயல்படுத்திட தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்படுகின்றன. இதற்கான செலவினத்திற்கு மாநில அரசும் நபார்டு வங்கியும் சரிசமமாக பங்களிக்கின்றன.

**இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய இனங்கள்**- சமவெளி வரப்பு குழிகள், பண்ணைக் குட்டைகள், கசிவுநீர் குட்டைகள், அமிழ்வுநீர் குட்டைகள், வேளாண் காடுகள், பழமரக் கன்றுகள் வளர்த்தல் போன்ற செயல்பரப்பு பணிகள், **வடிகால் அமைப்பு பணிகளான** குளங்களைத் தூர்வாருதல் மற்றும் வாய்க்கால்களைச் சீர்படுத்துதல், நிலமற்ற மகளிருக்கு வாழ்வாதார உதவிகள், பயிற்சி வழங்குதல்

### 8.3.1 தற்போது செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டங்கள்

| வ. எண் | மாவட்டம் | திட்டம் | வட்டாரம் |
|---|---|---|---|
| 1 | மதுரை | 1 | கேசம்பட்டி |
| 2 | திருச்சிராப்பள்ளி | 1 | அய்யம்பாளையம் |
| 3 | திருவள்ளூர் | 1 | கொப்பூர் |
| 4 | புதுக்கோட்டை | 2 | ஒடுக்கூர், மாம்பட்டி |

| வ. எண் | மாவட்டம் | திட்டம் | வட்டாரம் |
|---|---|---|---|
| 5 | கடலூர் | 1 | காரைக்காடு |
| 6 | திருவண்ணாமலை | 1 | சேத்துப்பட்டு |
| 7 | சிவகங்கை | 1 | இடையாமேலூர் |
| மொத்தம் | | 8 | |

இதுவரை ரூ.3.11 கோடி நிதி விடுவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**8.4. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டம். (Climate Proofing of Rainfed Watershed in Salem and Virudhunagar districts of Tamil Nadu under National Adaptation Fund for Climate Change).**

இத்திட்டம் மத்திய அரசின் சுற்றுசூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதி (Grants-in-aid) உதவியுடன், நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும் (National Implementing Entity), தமிழ்நாடு நீர்வடிப்பகுதி

மேம்பாட்டு முகமையை செயலாக்க நிறுவனமாகவும் (Executive Entity) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம், விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட செயலாக்க காலம் 2019-20 முதல் 2022-23 வரை ஆகும்.

### 8.4.1 திட்டத்தின் நோக்கம்

1. மண், நீர் பாதுகாப்பு மூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைத் தகவமைத்தல்.
2. பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன் மூலம் நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல்.

3. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல்.

## 8.4.2. திட்டத்தின் இனங்கள்

கிராம மக்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, நீர்வடிப்பகுதியின் மிக முக்கிய தேவையான நீர் சேமிப்பு தொட்டிகள் நுழைவுகட்டப்பணியாக அமைக்கப்பட்டுள்ளன. திட்ட செயலாக்கத்தின் தொடர்ச்சியாக, நீர்வள, மண்வள மேலாண்மை செயல்பாடுகளான தடுப்பணைகள் அமைத்தல், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்துதல் ஆகியனவும், வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், சிறுகுறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், புழக்கடைக் கோழி வளர்ப்பு ஆகியனவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பருவநிலை பாதுகாப்பு செயல்பாடுகளான மாற்றுப் பயிர்கள்,

பருவகாலமாற்ற நிலையைத் தாங்கக்கூடிய பயிர் இரகங்கள், பொது மற்றும் தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கும் உரம் தயாரிப்பு, உயிரி எரிபொருள் அமைப்புகள், வானிலை கண்காணிப்பு நிலையங்கள் ஆகியன வழங்கப்படுகின்றன. 2022-2023ஆம் ஆண்டு வரை ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, ரூ.10.80 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 8.5. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

**இலக்கு** (Goal) : 6 பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி

**குறிக்கோள்** (Target) : 6.6 மலைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர் சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாத்து, மீட்டெடுத்தல்.

**மாநில குறிகாட்டி (State Indicator Framework): 6.6.4 பண்ணைக் குட்டைகள்/ தடுப்பணைகள்/ கசிவுநீர் குட்டைகள், இதர பணிகள் உருவாக்கும் மற்றும் புதுப்பித்தல் / தற்போதுள்ள கட்டமைப்புகள் புதுப்பித்தல் பணிகளின் எண்ணிக்கை.**

2023-24-ம் ஆண்டில் 4,812 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் 3,06,347 மீட்டர் நீர்வரத்து கால்வாய்களை தூர்வாரும் பணிகளை ஏழு மாவட்டங்களில் பிரதம மந்திரியின் விவசாய நீர்ப்பாசனத் திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**எம். ஆர். கே. பன்னீர்செல்வம்**

**வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்.**

## கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2023–2024–இல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2023 –2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 14,124,43,40 | 129,00,98 | 1,00,17 | 14,254,44,55 |
| மொத்த தொகை சாட்டியது | 1,03 | --- | --- | 1,03 |

## நிகர செலவு

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| கணக்குத் தலைப்பு | | 2021 – 2022 கணக்குகள் | 2022 – 2023 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2022 – 2023 திருத்த மதிப்பீடு | 2023 – 2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப்பணிகள் | 2,18,36 | 2,82,50 | 2,82,50 | 5,15,13 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 10,084,95,07 | 11,951,17,39 | 13,922,96,93 | 13,021,51,76 |
| 2402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 75,00,15 | 147,51,06 | 95,14,97 | 107,58,34 |
| 2408 | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | 57,71,16 | 5,00,03 | 100,53,33 | 13 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் | 540,28,71 | 486,74,82 | 543,32,31 | 625,53,89 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 265,95,29 | 246,83,18 | 260,75,01 | 264,84,81 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 17,92,05 | ------- | 125,44,30 | 71,68,16 |
| 2551 | மலைப் பகுதிகள் | 66,91 | 82,96 | 75,72 | 92,42 |
| 2702 | சிறுபாசனம் | 6,55,38 | 8,27,39 | 6,34,54 | 7,03,73 |

| கணக்குத் தலைப்பு | | 2021 – 2022 | 2022 – 2023 | 2022 – 2023 | 2023 – 2024 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | --- | ------ | 1 | 1 |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | ----- | 1 | 1 | 1 |
| 3054 | சாலைகளும் பாலங்களும் | ------ | 3,74,68 | 15,20 | ------ |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 13,30,25 | 16,37,10 | 17,06,95 | 18,30,45 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 84,60,16 | 165,94,74 | 160,29,02 | 60,56,92 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 12,87,69 | 24,49,80 | 11,73,81 | 24,01,93 |
| 4408 | உணவுப் பொருள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி குறித்த மூலதனச் செலவு | ------ | ------ | 2,55,00 | ------- |
| 4415 | வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | ------ | ----- | ------ | 10,00,00 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 155,84,23 | 84,02,54 | 84,15,11 | 34,42,13 |

| கணக்குத் தலைப்பு | | 2021 – 2022 | 2022 – 2023 | 2022 – 2023 | 2023 – 2024 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | --- | 1 | 130,00,00 | 1 |
| 6425 | கூட்டுறவு குறித்த கடன்கள் | --- | 16 | 252,90,64 | 16 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 75,68 | 75,00 | 1,82,02 | 1,00,00 |

## கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2023 – 2024 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 005 01 | வேளாண்மை – உழவர் நலத்துறை – தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 1 | ----- | 1,00,00 | 19,30,45 |
| 2. | 005 02 | வேளாண்மை இயக்ககம் | சாட்டியது | 2 | ----- | ------ | 2 |
| | | | அனுமதித்தது | 10,716,93,08 | 55,10,03 | 1 | 10,772,03,12 |
| 3. | 005 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 243,29,33 | 34,42,13 | ----- | 277,71,46 |
| 4. | 005 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 60,32,53 | ------ | ----- | 60,32,53 |
| 5. | 005 05 | தோட்டக்கலை , மலைத்தோட்டப் பயிர்கள் இயக்ககம் | அனுமதித்தது | 1,389,79,54 | 5,46,89 | ----- | 1,395,26,43 |
| 6. | 005 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 1,01 | ---- | ----- | 1,01 |
| | | | அனுமதித்தது | 831,50,81 | 24,01,93 | ------ | 855,52,74 |
| 7. | 005 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 59,02 | ----- | ----- | 59,02 |

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ８. | 005 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 606,68,93 | 10,00,00 | ---- | 616,68,93 |
| ௯. | 005 09 | அங்ககச் சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 1,66,59 | ----- | ------ | 1,66,59 |
| ௰. | 005 10 | சர்க்கரை இயக்ககம் | அனுமதித்தது | 255,33,12 | ------ | 16 | 255,33,28 |
| **மொத்தம்** | | | சாட்டியது | **1,03** | **----** | **-----** | **1,03** |
| | | | அனுமதித்தது | **14,124,43,40** | **129,00,98** | **1,00,17** | **14,254,44,55** |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களை 21.3.2023 அன்று 2023–2024 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது வேளாண்மை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதி குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையை சுதந்திர இந்தியாவில் முதன் முறையாக, மே மாதமே, (24.5.2022 அன்று) பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 31.5.2022 அன்று மயிலாடுதுறை மாவட்டம், நல்லாடை கிராமத்தில், இயந்திரம் மூலம் குறுவை நெல் நடவு செய்யும் பணியினை பார்வையிட்டார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், 31.5.2022 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், கல்லார் கிராமத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளை வழங்கினார்கள்.



கேழ்வரகு – கிருஷ்ணகிரி







கம்பு – கள்ளக்குறிச்சி



குதிரைவாலி – இராமநாதபுரம்



சாமை – திருவண்ணாமலை



உளுந்து – தூத்துக்குடி



துவரை – கிருஷ்ணகிரி



வரப்பில் உளுந்து – திருவாரூர்



பச்சைப்பயறு – நாமக்கல்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களை 6.2.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி ஆகியோர் தலைமையிலான குழு, டெல்டா மாவட்டங்களில் பயிர் சேதங்களைப் பார்வையிட்டு, பயிர் சேத விவரங்கள் குறித்த ஆய்வு அறிக்கையினை அளித்தார்கள்.





தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள், 21.02.2023 அன்று தலைமைச் செயலகத்தில், 2023 – 2024 வேளாண் நிதிநிலை அறிக்கை தொடர்பாக, அனைத்து துறை செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள் .



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 21.3.2023 அன்று, 2023–2024ஆம் ஆண்டிற்கான மூன்றாவது வேளாண்மை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தாக்கல் செய்தார்கள்.



நிலக்கடலை – கடலூர்



எள் – சேலம்



சூரியகாந்தி – தூத்துக்குடி



சோயாபீன்ஸ் – தஞ்சாவூர்



பருத்தி – பெரம்பலூர்



வெங்காயம் – திருப்பூர்



தக்காளி – கிருஷ்ணகிரி



கத்தரி – திருநெல்வேலி



மிளகாய் (முண்டு) – இராமநாதபுரம்



பீர்க்கங்காய் – அரியலூர்



டிராகன் பழம் – கடலூர்



பந்தல் காய்கறிகள் – கோயம்புத்தூர்



திராட்சை – தேனி



கதிர் அடிக்கும் இயந்திரம் – கடலூர்



வெங்காயம் தாள் நீக்கும் இயந்திரம் – பெரம்பலூர்



கரும்பு நாற்று நடவு இயந்திரம் – திருநெல்வேலி



சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டு – தேனி



வேளாண் அறிவியல் நிலையம் – ஈரோடு – பால் பொருட்கள் மதிப்பு கூட்டுதல் பயிற்சி



வேளாண் அறிவியல் நிலையம் – நாமக்கல் – மண் புழு உரம் தயாரித்தல் பயிற்சி




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு, டன்னுக்கு ரூ.195/– வீதம் மொத்தம் ரூ.214 கோடிக்கான சிறப்பு ஊக்கத்தொகை ஆணைகளை வழங்கினார்கள்.







உயர் விளைச்சல் , உயர் சர்க்கரை கட்டுமாணம் – கரும்பு இரகங்கள்



ஒரு பருவிதை கரணை



பரு சீவல் நாற்று நடவு – கள்ளக்குறிச்சி





திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி – கள்ளக்குறிச்சி



அடிப்பரப்பு நுண்ணீர் பாசனம்–தஞ்சாவூர்



கரும்பில் இயந்திரம் மூலம் அறுவடை- கள்ளக்குறிச்சி



விதை பண்ணை ஆய்வு – நெல் –தஞ்சாவூர்



விதை பண்ணை ஆய்வு – நிலக்கடலை – ஈரோடு



விதை பரிசோதனை நிலையம் – திருப்பூர்



விதை பரிசோதனை நிலையம் – நாகப்பட்டினம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், ரூ.15.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.



தக்காளி – தருமபுரி



வெண்டைக்காய் – தருமபுரி



மிளகாய் – தூத்துக்குடி



வாழை – கோயம்புத்தூர்

முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள்

## தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை



வெள்ளாடு விநியோகம் – விருதுநகர்




தையல் இயந்திரம் விநியோகம் – திண்டுக்கல்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.